ஒக்டோபர் 14 - நவம்பர் 14 2012-7

இது ஒரு மாத இதழ்

விலை ரூபா 100/=

# தின மகுடி



## தமிழனே சற்றுச் சிந்தி

## இந்தக் கணம் மட்டுமே உங்களுடையது!

# Specialist in Home Delivery

## A HOT Chips

Chinese, Indian, Tandoori & Sri lankan Foods

**CATERING SERVICE**



All South Indian Veg & Non Veg Foods are Availabel

*We Undertake All Kind Of Party Orders*

Call Now 077-3577518
077-7716861

19, Farm Road, Mattakuliya, colombo-15
Tel: 5288898 Hotline: 0777716861
E-mail: Order@ahotchips.com www.ahotchips.com



# கவர்ச்சிக்கு மாறும் ஸ்வாதி

சினிமாவில் கவர்ச்சியும் ஒரு அங்கமாகிவிட்டது. எனவே நானும் அந்த மாதிரி வேடங்களில் நடிக்கத் தயார் என்று சுப்பிரமணியபுரம் பட நாயகி ஸ்வாதி கூறியுள்ளார்.

சுப்பிரமணியபுரம், "போராளி" படங்களில் நடித்தவர் ஸ்வாதி. தெலுங்கு, மலையாளத்திலும் நடித்து வருகிறார். முன்னணி நடிகையாக உள்ளார். குடும்பப்பாங்கான பாத்திரங்களை மட்டுமே ஸ்வாதி செய்து வருகிறார். இதனால் கதாநாயகியே குத்தாட்டம் ஆட வேண்டிய கட்டாயம் உள்ள தமிழில் அவரால் பிரகாசிக்க முடியவில்லை.

தன் வாய்ப்புகள் வேறு நடிகைகளுக்கு செல்வதால் தானும் கவர்ச்சி களத்தில் குதிக்க முடிவு செய்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "கவர்ச்சி என்பது சினிமாவில் ஒரு அங்கமாகி விட்டது. எனவே நானும் கவர்ச்சியாக நடிக்க முடிவு செய்துள்ளேன். இப்போது இரண்டு தமிழ்ப் படங்களில் நடிக்க பேசிக் கொண்டிருக்கிறார்கள். சுப்பிரமணியபுரம் வந்து இத்தனை ஆண்டுகளில் நான் இரண்டு தமிழ்ப் படங்கள்தான் செய்தேன். எனக்கான வாய்ப்புகள் நிச்சயம் வரும்" என்றார்.

# தின மகுடி

## முயற்சி திருவினையாக்கும்

தினமகுடியின் 7 ஆவது இதழுடன் இணைந்துள்ள உங்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்தும் பல்வேறு புதிய அம்சங்களுடன் தினமகுடி வெளிவர பக்கபலமாக இருந்து, நீங்கள் வழங்கிவரும் உதவி, ஒத்துழைப்புகள் எமது நினைவைவிட்டு என்றும் அகலாதவை.

இவ்வாறொனதொரு இதழை வெளியிடுவதன் மூலமாக நாம் வெற்றி பெற முடியுமா என்ற பயம், தவிப்பு எமக்கு ஆரம்பத்தில் இருந்தது. எனினும் எமது ஆரம்ப முயற்சிக்கு வாசகர்களாகிய நீங்களும் மற்றும் வர்த்தக பிரமுகர்களும் வழங்கிய உதவி ஒத்துழைப்புகள் எமது பயத்தை தவிடு பொடியாக்கியுள்ளன.

இந்த வகையில் தொடர்ந்து எமது முயற்சிக்கு ஆதரவளித்து வரும் உங்களது உறுதிமிக்க செயற்பாடு கண்டு நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

தினமகுடியில் இடம் பெறும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களாகிய நீங்கள் தெரிவித்து வந்த கருத்துகளை நாம் முழு மனதுடன் ஏற்று எமது முயற்சியை உங்கள் உதவியோடு முன்னெடுத்து வருகின்றோம்.

தொடர்ந்தும் காத்திரமான விமர்சனங்களை நீங்கள் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு படைப்பாற்றல் துறையில் உங்களுக்கும் ஈடுபாடு இருப்பின் அவற்றை நீங்கள் எமக்கு அனுப்பி வைக்கலாம். உங்களது ஆக்கம் தரமானது எனில் அவை தினமகுடியை அலங்கரிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

உலக படைப்பாளிகளின் தளமாக தினமகுடி களம் அமைக்க வேண்டும் என்ற எமது முயற்சிக்கு உங்களதும் உதவி ஒத்துழைப்புகள் கிடைக்க வேண்டும் எனத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

**முயற்சிப்போம் தனித்துவம்**
**படைப்போம் ஆதரவு தாரீர்.**


**ஆசிரிய பீடம் தினமகுடி**
**இல. 238 கடற்கரை வீதி, கொழும்பு-11**

தொலை பேசி : 011 7209862
தொலைநகல் : 011 2334633
gmail : thinamakudis@gmail.com
PO.BOX : 2020


# Thinamagudi Awards

சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, சித்திரம், நாடகம் போன்ற துறைகளில் 2012 ஆம் ஆண்டு நூல்களை வெளியிட்டுள்ளவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் தினமகுடி பரிசுத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்கிறது.

**"தினமகுடி எவோட்ஸ்"** என்ற மகுடத்தில் வருடாந்தம் நடத்த திட்டமிடப்பட்டுள்ள இப்பரிசு திட்டத்தில் பங்கேற்ற விரும்புவோருக்கான விதிமுறைகள் வருமாறு:

1) 2012 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில் வெளியிட்டப்பட்ட நூல்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்படும் படைப்பாளிகளுக்கு வயதெல்லை கிடையாது

2) இலங்கையின் எந்தப்பாகத்திலும் நூல் வெளியிடப்பட்டிருக்கலாம்.

3) வெளிநாடுகளில் அச்சிடப்பட்டவை, வெளியிடப்பட்டவை சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.

4) தினமகுடியில் வரும் கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படுபவை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

5) முடிவுகள் அனைத்தும் நடுவர் குழுவின் முடிவுக்குட்பட்டது.

**பரிசு விபரம்**

சகல துறைகளுக்கும் கீழ்கானும் விதத்தில் பரிசுகள் வழங்கப்படும்.

**முதல் பரிசு :** ரூபா 50.000 மற்றும் விருது, சான்றிதழ்
**இரண்டாம் பரிசு :** விருது, சான்றிதழ்
**மூன்றாம் பரிசு :** விருது, சான்றிதழ்
விஷேட போட்டி : இவ்வருடம் சிறந்த
தமிழ் அறிவிப்பாளர் யார்?

இப்போட்டி மக்களின் வாக்கெடுப்பு படி நடத்தப்படும். தினமகுடியில் இதற்கான கூப்பன் வெளிவரும்.

விண்ணப்பதாரிகள் தமது படைப்புகளில் மூன்று பிரதிகளை கூப்பனுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய**
**இறுதி திகதி 30.12. 2012**
**சகல விண்ணப்பங்களையும் அலுவலக முகவரிக்கே அனுப்ப வேண்டும்**

## தினமகுடி எவோட்ஸ்
### விண்ணப்பப் படிவம்

பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
தொ.எண். :- ..............................
ஆக்கம் :- ..............................
பிரசுரமான திகதி :- ..............................
பிடித்த அறிவிப்பாளர் :- ..............................





# கான்சர் நோயைக் குணமாக்கும் பொறிமுறையை கண்டறிந்த தமிழன்

கனடாவில் வசிக்கும் 17 வயதாகும் தமிழ் சிறுவன் ஒருவன் இன்று உலகளாவிய ரீதியில் பேசப்பட்டு வருகிறார். அபிக்குமரன் என்று அழைக்கப்படும் இச் சிறுவன் 17 வயதில் டாக்டர் பட்டத்தைப் பெற்றது மட்டுமல்லாது கான்சரை குணப்படுத்த ஒரு பொறிமுறையைக் கண்டறிந்துள்ளார். அதனை அவர் கனடாவில் உள்ள கான்சர் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பிவைக்க அங்கே பணி புரியும் மூத்த ஆராய்சியாளர் ஒருவர் தலையில் கைவைக்கும் அளவு அந்தப் பொறிமுறை அமைந்திருந்ததாம்.

சொல்லிப் புரியவைக்க முடியாத அந்தப் பொறிமுறையை விரிவாகப் பார்த்தால் அதன் மூலம் கான்சர் செல்களை அழித்து அந்நோயை முற்றாக குணப்படுத்த அது ஏதுவாக அமையும் என்பதனை அறிந்த மூத்த ஆய்வாளர், அபிக்குமரனை அழைத்து தனது ஆய்வகத்தில் வேலைசெய்ய அனுமதித்துள்ளார்.

இன்று கனடா முழுவதும் பேசப்படும் 17 வயது நிரம்பிய தமிழர் யார் என்று கேட்டால் இந்த அபிக்குமரன் தான். அவர் வளர்ந்துவரும் நிலையில் இன்னும் சில காலத்தில் அவர் உருவாக்கியுள்ள பொறிமுறையைக் கையாண்டால் கான்சரை முற்றாக அழிக்க முடியும் என மூத்த ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கான்சர் என்னும் உயிர் கொல்லி நோயை அழிக்கப் பிறந்த ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக அபிக்குமரன் உள்ளார் என அவரை பாராட்டி புகழ்ந்து தள்ளியுள்ளனர் பல மூத்த ஆய்வாளர்கள்.

அச் சிறுவனிடம் புதைந்து கிடக்கும் அறிவும் ஆற்றலும் தம்மை பிரமிக்கவைப்பதாகவும் 30 ஆண்டுகளாக தாம் செய்திராத ஆராய்சிகளை அச் சிறுவன் வித்தியாசமாகவும் வேறு கோணத்திலும் சிந்தித்துச் செய்வதாக அவர்கள் கூறியுள்ளனர்.

அபிக்குமரனால் தமிழ் இனத்துக்கே பெருமை என்றால் அது மிகையாகாது.



தன் பலம், தனக்கேற்ற கதையை சரியாக தேர்வு செய்வதில் மீண்டும் ஒரு முறை ஜெயித்திருக்கிறார் சசிகுமார். அந்த வகையில் சுந்தரபாண்டியன் அவருக்கு இன்னொரு சுப்பிரமணியபுரம்.

நண்பர்களுக்குள் நெருக்கமும் சரி, பெரும்பகையும் சரி அதன் பின்னணி காதல்தான் என்பது அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

கண்டமனூர் பெரிய வீட்டுப் பையன் சசிகுமார். அவரது நண்பர்கள் பரோட்டா சூரி, இனிகோ பிரபாகரன். சசிகுமார் ஒரு பெண்ணைக் காதலிக்க, அந்தப் பெண்ணை அவர் நண்பனும் ரூட் விட, அதே பெண்ணை நண்பனின் நண்பனும் டார்கெட் பண்ண, அதில் சசிகுமார் ஜெயிக்கிறார்.

தோல்வியை ஒரு நண்பன் சகித்துக் கொள்ள, மற்றொருவனோ லட்சுமியிடம் வம்பு செய்கிறான். தொடரும் கைகலப்பில் பஸ்ஸிலிருந்து தள்ளப்பட்டு செத்துப் போகிறான். கொலைப் பழியை சசிகுமார் ஏற்று சிறை சென்று, 15 நாள் காவலுக்குப் பிறகு வெளியில் வர, காதலி கண்டு கொள்ளாமல் போகிறாள்.

இருவரும் இணைந்தார்களா என்பது மறுபாதி. இந்தப் படத்தைப் பொறுத்தவரை அந்த மறுபாதிக் கதைதான் செம த்ரில்லிங் என்பதால், திரையில் பார்த்து சசிகுமார் அண்ட் நண்பர்களுக்கு மரியாதை செய்யுங்கள்!

காதல் அரும்பும் பருவத்தில் இனி இளைஞர்கள் ரொம்ப சூதானமா நடந்துக்கணுமப்பா என்று சொல்லவைக்கும் ஷார்ப்பான திரைக்கதை. புதிய இயக்குநர் எஸ் ஆர்.பிரபாகரனை வாழ்த்தி வரவேற்கலாம்.

சசிகுமாரின் முகத்தில் முன்பெல்லாம் எப்போதாவது எட்டிப் பார்க்கும் செயற்கைத்தனம் கூட இதில் இல்லை. ஒரு நடிகராக இந்தப் படத்தில் நூறு சதவீதம் ஜெயித்திருக்கிறார். ஒவ்வொரு கிராமத்திலும் இப்படி ஒரு ரஜினி ரசிகன் நிச்சயம் இருந்தே தீருவான். அதை அழகாக நம்முன் நிறுத்தியிருக்கிறார்.

ரஜினி ரசிகராக அமர்க்களமாக அறிமுகமாவதில் தொடங்கி, நம்மைக் கொலை பண்ண வந்தது நம்ம நண்பனா இருந்தா அவனைக் காட்டிக் கொடுக்கக் கூடாதுடா என முத்திரை வசனம் சொல்வது வரை சசிகுமார் கொடி பறக்குது!

லட்சுமி மேனனுக்கு இது முதல் படம். ஒப்பனையில்லாத அழகி. பிரகாசமான எதிர்காலம்.

இந்தப் படத்தின் Show stealer என்றால் அது சசிகுமாரின் தந்தை ரகுபதி தேவராக வரும் நரேன். லட்சுமியை பெண் கேட்கும் காட்சியில் அப்படி ஒரு கம்பீரம்.. காட்சிப்படுத்திய விதம், இடம்பெற்ற நடிகர்களின் பங்களிப்பு என எல்லா வகையிலும் அந்த 4 நிமிடக் காட்சி.

A pure manly show!

தென்னவன் இன்னொரு மிகச் சிறந்த நடிகர். ஒரு பெண்ணைப் பெற்றவனின் ஆத்திரம், அக்கறை, வேதனை, பாசம் அனைத்தையும் நிஜமாகக் காட்டியிருக்கிறார்.

பரோட்டா சூரியின் ராஜ்ஜியம்தான் முதல் பாதியில். அவரது ஒன்லைனர்கள் நிச்சயம் நண்பர்களின் உதடுகளில் இன்னும் கொஞ்ச





தின மகுடி
14.10.2012

காலத்துக்கு இருக்கும்.

இனிகோ பிரபாரகரன், விஜய் சேதுபதி, சௌந்தரராஜன், அந்த பாட்டிகள், சித்தி, அத்தைப் பெண் என அத்தனை பேரும் நடிகர்களாகத் தெரியாமல் கிராமத்திலேயே பிறந்து வளர்ந்தவர்களாகத் தெரிகி-றார்கள்.

அப்புக்குட்டி கிட்டத்தட்ட வில்லன். கொஞ்சம் வெறுப்பைச் சம்பாதிக்கும் ரோல்தான். நன்றாகவே செய்திருக்கிறார்.

ஒளிப்பதிவு இந்தப் படத்துக்கு பெரிய ப்ளஸ். பாடல் காட்சிகளில் பாலுமகேந்திரா சொன்னதைத்தான் திரும்ப சொல்ல வேண்டும்! அந்த முள்காட்டு பயங்கரத்தை முதுகு தண்டு சில்லிடும் அளவுக்கு சொன்னதில் இயக்குநருக்கு இணையான பங்கு, காமிராக்காரருக்கும்!

படத்தின் ஆகப் பெரிய மைனஸ் இசை. இசையமைப்பாளர் ராஜாவின் ரசிகரோ அல்லது ராஜா இசையால் பெரிதாக பாதிக்கப்பட்டவரோ தெரியவில்லை. காதல் வந்து பொய்யாக, ரெக்கை முளைத்தேன், நெஞ்சுக்குள்ளே என அவர் போட்ட பாடல்கள் திரையில் வரும்போது, நமக்கு ராஜாவின் ஏதோ மோகம், ஒருகிளி உருகுது, அம்மம்மா (தாலாட்டுப் பாடவா) பாடல்கள்தான் காதுகளில் கேட்கின்றன!!

இன்ஸ்பிரேஷனுக்கும் இமிடேஷனுக்கும் வித்தியாசம் தெரியாமல் இரண்டாவது படத்திலேயே காணாமல் போகும் இசையமைப்பாளராக ரகுநந்தன் மாறாமலிருக்கக் கடவது!

சசிகுமாரின் பலம்,பலவீனம் புரிந்து திரைக்கதை எழுதி இயக்கியிருக்கும் எஸ் ஆர் பிரபாகரனின், முதல் முயற்சியே சூப்பர் ஹிட்டாகி யிருக்கிறது.

வெற்றி தொடர வாழ்த்துகள்!

-யுவன்-





மாணவர்கள் மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்தார் சுவாமி விவேகானந்தர். "அரை மணி நேரம் தியானம் செய்தால் ஆறு மணி நேரம் தூங்குவதற்குச் சமம்" என்றார்.

சட்டென்று எழுந்த மாணவன் ஒருவன், "அப்படியெனில், ஆறு மணி நேரம் தூங்கினால் அரை மணி நேரம் தியானம் செய்வதற்குச் சமமா?" என்று கேட்டான்.

சுவாமி விவேகானந்தர் புன்னகையுடன் பதிலளித்தார்...

"முட்டாள் ஒருவன் தியானம் செய்தால் அறிவாளியாக முடியும். ஆனால் அறிவாளி ஒருவன் தூங்கத் துவங்கினால் முட்டாளாகி விடுவான் என்றார்.

# தியானமும் தூக்கமும்

# மனதைப் புரிந்து கொள்

ஒரு பெரியவரிடம் அய்யா! நான் துன்பச் சிறையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் ஒருவன்.

என்ன காரணம்?" என்று கேட்டார் பெரியவர்.

"மற்றவர்கள் எனக்குத் துன்பம் கொடுக்கிறார்கள்" என்றான்

"உனக்குத் துன்பம் கொடுப்பது உன்னுடைய மனம்தான்" என்றார் பெரியவர்

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம்!"

"அப்படியானால் துன்பத்திலிருந்து விடுபட என்ன வழி?"

"மனதைப் புரிந்து கொள்... அது போதும்."

"எப்படிப் புரிந்து கொள்வது?" என்றான் அவன்.

"இந்தக் கதையைக் கேள்" என்று அவர் சொன்னார் -

"ஆசையாக ஒரு பூனையை வளர்த்தார் ஒருவர். அந்தப் பூனை ஒரு நாள் எலியைப் பிடித்து கவ்விக் கொண்டு வந்தது, அவருக்கு அது மகிழ்ச்சியாக இருந்தது.

மறுநாள் அந்தப் பூனை, அவர் ஆசையாக வளர்த்த ஒரு கிளியைக் கௌவிக் கொண்டு வந்தது, அவருக்கு அது அதிர்ச்சியாக இருந்தது,

இன்னொரு நாள் அந்தப் பூனை எங்கேயோ சென்று காட்டிலிருந்து ஒரு குருவியைப் பிடித்துக் கௌவிக் கொண்டு வந்தது. இப்போது அவர் மகிழவும் இல்லை வருந்தமும் இல்லை.

எதையாவது பிடிப்பது பூனையின் சுபாவம் என்பதைப் புரிந்து கொள்ள அவருக்குக் கொஞ்ச காலம் ஆயிற்று.

தனக்குப் பிடிக்காத எலியைப் பிடிக்கிறபோது இன்பம். தனக்குப் பிடித்தமான கிளியைப் பிடிக்கிறபோது துன்பம், தனக்குச் சம்பந்தமே இல்லாத குருவியைப் பிடிக்கிறபோது இன்பமுமில்லை... துன்பமுமில்லை..." - என்று அவர் கதையை முடித்தார். இவன் சிந்திக்கத் தொடங்கினான்.

துன்பச் சிறையின் கதவுகள் திறக்கப்படுகிற ஓசை அவன் செவிகளில் விழுந்தது.

"மனதைப் புரிந்து கொள்கிறவர்களே மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்."


Best Quality
Champhor
பக்தி பரவசத்தின்
ஜோதிமயம்
கணபதி கற்பூரம்
GANAPATHI CAMPHOR
GANAPATHI CHAMPHOR
No. 8, Hythe Land, Deltota.
Tel: 0772378898
0773562806

# தமிழனே சற்றுச்

**ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் தமது நிர்வாகக் கட்டமைப்பை ஒருமுகப்படுத்தும் நோக்கில் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக 1833ஆம் ஆண்டு Eastren Province என்ற கிழக்கு மாகாணம் உருவாகியது. தொடர்ந்து பல்வேறு கட்டமைப்புகள் ஒழுங்கமைப்புகள் உருவாக்கப்பட்டு வந்த நிலையில் திருகோணமலை, மூதூர், கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் என 7 தொகுதிகள் இங்கு அமைக்கப்பட்டன.**

இந்த 7 தொகுதிகளும் தமிழ்பேசும் மக்களுக்கான (தமிழர், முஸ்லிம்) பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில் சட்டமன்றத்தேர்தல் நடத்தப்பட்டது இந்தத் தேர்தலில் திருகோணமலைத் தொகுதியில் எஸ்.சிவ-பாலன் தமிழ் காங்கிரஸ் கட்சியிலும் மூதூர் தொகுதியில் ஏ.ஆர்.ஏ.எம்.அபூபக்கர் ஐ.தே.கட்சியிலும், கல்குடாத் தொகுதியில் வி. நல்லையா சுயேச்சையிலும் மட்டக் களப்புத் தொகுதியில் ஏ.எல்.சின்னலெப்வை ஐ.தே.கட் சியிலும் பட்டிருப்புத் தொகுதியில் யு.எஸ்.எதிர்மனசிங்கம் சுயேச்சையிலும் கல்முனைத் தொகுதியில் எம்.எஸ்.காரி யப்பர் ஐ.தே.கட்சியிலும் பொத்துவில் தொகுதியில் எம்.எம்.இப்ராகிம் ஹாஜியார் சுயேச்சையிலும் தெரிவு செய்யப்பட்டனர்.

1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர் 1952 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலும் இந்தத் தொகுதிவாரி முறையே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. பின் னர் 1956 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் இந்த 7 தொகு திகளிலும் 3 தொகுதிகளில் தமிழர்களும், 4 தொகுதிக-ளில் முஸ்லிம்களும் தெரிவாகியிருந்தனர்.

இந்நிலையில், கிழக்கில் கல்லோயத்திட்டத்தின் மூலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த குடியேற்றம் முனைப் புப் பெற்றது. 1960 ஆம் ஆண்டு அம்பாறை என்ற மாவட் டம் உருவாக்கப்பட்டது. அதன் காரணமாக மொத்தம் 9 பிரதிநிதித்துவத்தை பெறும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்டம் இரட்டை அங்கத்தவர்கள் தொகுதியாக்கப்பட் டது. இதே ஆண்டு ஜூலை மாதத்தில் நடத்தப்பட்ட தேர்தலில் அம்பாறை தவிர்ந்த ஏனைய 8 இடங்களையும் தமிழ், முஸ்லிம் தலைமைத்துவங்களே வெற்றி கொண்டன.

பின்னர் 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்த லின் போதே பெரும்பான்மை இனக்கட்சிகள் தமது நடவடிக்கைகளை மெல்ல மெல்ல கிழக்கில் முன்னெடுக் கத் தலைப்பட்டன.


முன்னர் சுயேச்சையாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கண்டவர்களையும் தம்மக்களின் பலத்துடன் தலை நிமிர்ந்து நின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளையும் தமிழரசுக்கட்சி சார்பில் வெற்றியீட்டி தமிழ்த் தேசிய ஒற்றுமையுடன் செயல்பட்டவர்களையும் தம்பக்கம் இழுத்து தமிழ்பேசும் தேசிய இனங்களுக்கிடையில் மாபெரும் பிளவை உருவாக்குவதன் மூலம், உரிமைக் காக ஒற்றுமையுடன் செயல்பட்ட மக்களை பிரித்து வெற் றியும் கண்டது.

இதன் பின்னரான 1970, 1977 ஆம் ஆண்டுத் தேர்தல் கள் கிழக்கில் பல்வேறு தொகுதிகளை உருவாக்க வேண்டிய சூழலைத் தோற்றுவித்தது இதற்கு அடிப்படை யாக அமைந்தது திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்க ளாகும். அல்லை கந்தளாய், மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றம் சேருவில என்ற சிங்களத் தொகுதி திருகோணமலை மாவட்டத்தில் உருவாகக் காரணமாக இருந்தது.

அரசுகள் மாறியபோதும் தமிழ்ப் பேசும் மக்களின் தாயகத்தில் திட்டமிட்ட குடியேற்றம் என்பதில் ஒன்றுபட்ட அடிப்படையில் செயல்பட்டதனால் ஐ.தே.கட்சி அம் பாறைத் தொகுதியையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சேரு விலத் தொகுதியையும் கிழக்கு மண்ணில் உருவாக்க சிங்கள இனப்பரம்பலை விரிவுபடுத்தியது.

1977 ஆம் ஆண்டு தேர்தலைத் தொடர்ந்து முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தோற்றமும் எம்.எச்.எம். அஷ்ரப்பின் அரசியல் பிரவேசமும் முஸ்லிம் மக்கள்

# சிந்தி



பி.ஆர்.எம்.

மத்தியில் சிங்கள கட்சிகளின் ஆதிக்கம் அகற்றப்படுவதற்கு வழிகோலியது. ஆனால் குறுகிய காலத்தில் நிலைமை மாறியதனால் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தோற்றம், முஸ லிம் மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை ஏற்படுத் தியது.

இதன்பின்னர் 1982 ஆம் ஆண்டு நடந்த மாவட்டசபைத் தேர்தல் கிழக்கில் நிலைத் திருந்த தமிழ்பேசும் இனங்களுக்கு இடையே யான உறவில் மட்டுமல்ல தமிழ் மக்கள் கொண் டிருந்து தாயக்கோட்பாட்டுக்கான அபிலாஷை களையும் சிதைத்தது இதனுடாக தோற்றம் பெற்ற ஆயுதப் போராட்டமும் அதன் பின்னரான நிலைமைகளும் இந்த மண்ணில் ஏற்படுத்தியு ள்ள தாக்கங்கள் அளப்பரியன.

தற்போதைய நிலையில், தமிழ் இனம் தனது மண்ணைக் காப்பாற்றவேண்டிய மிகப்பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கிறது. வடக்கு, கிழக்கு எங்கிலும் திட்டமிடப்பட்ட முறையில் இந்த மண்பறிப்பு நடவடிக்கைகள் உச் சம் பெற்றுள்ளன.

இந்த வேளையில் தமிழ் இனம் தனது தாயக் கோட்பாட்டை இழக்கச்செய்யும் வகையில் பிர தேசவாதம் பேசுவதும் மேட்டுக்குடி, கிழ்குடி யென விஷப் பிரசாரங்களை மேற்கொள்வதும் உசிதமானதல்ல. இந்த எண்ணக்கிடக்கை களை கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்த லில் இங்கு வாழும் தமிழ் மக்கள் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர்.

மக்களின் உணர்வுகளை மதித்து பிரதேச வாதம் பேசுவோர் இத்தகைய தமது சிந்தனை- களை கைவிட வேண்டும் முதலில் பறிபோகும் நமது மண்ணை காப்பாற்றுவதற்கான ஒன்றித்த பணிகளை மேற்கொள்ள வேண்டும் இதுவே காலத்தின் கட்டாயமாகும்.



# பாசத்துக்கு அளவே இல்லையா?



தமது பிள்ளைகள் மீது அளவு கடந்த பாசம் கொண்டுள்ள சீனத் தம்பதியினர் குறித்த நெஞ்சை வருடும் சோகக் கதை இது.

2006ஆம் ஆண்டு இறந்த தமது மகனின் உடலை சீனாவைச் சேர்ந்த தம்பதியினர் ஆறு வருடங்களாக குளிர்சாதனப் பெட்டி ஒன்றில் வைத்து பாதுகாத்து வருகின்றனர்.

பிள்ளைப் பாசத்திற்காக ஏங்கும் இத்தம்பதியினர் 15 வருடங்களுக்கு முன்னர் தமது மகளை நோய் காரணமாக இழந்திருந்தனர். அதேபோல பின்னர் மகனையும் இழந்துள்ளனர்.

தமது பிள்ளைகளைப் பறிகொடுத்தமையால் தாம் மிகவும் நொந்துபோயுள்ளதாக வேதனைப்படும் இந்தத் தம்பதியினர். பாதுகாக்கப்பட்டுவரும் தமது மகனின் உடலைப் பார்க்கும்போதெல்லாம், அவர் தம்முடன் அருகில் இருப்பது போன்று உணர்வதாகக் குறிப்பிடுகின்றனர்.

உண்மையிலேயே இந்தத் தம்பதியினரின் பிள்ளைப் பாசத்துக்கு அளவே இல்லைத்தான்.

# 13000 அடி உயரத்தில் ஆரம்பித்த சாதனை

100 வீரர்கள் 13 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து 'ஸ்கை டைவ்' செய்து கின்னஸ் சாதனை படைத்தனர். இது அமெரிக்காவில் நடைபெற்றுள்ளது.

பல்வேறு நாடுகளை சேர்ந்த 'ஸ்கை டைவ்' வீரர்களைக் கொண்டு, இந்த சாதனை நிகழ்ச்சியை அமெரிக்காவைச் சேர்ந்த 'ரைஸ் த ஸ்கை' என்ற தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## விந்தையோ விந்தை



# டி.வியில் குரங்கார்

அழகிய பெண்களும் கட்டான ஆண்களும்தான் டி.விகளில் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவது வழமை. ஆனால், இவற்றுக்கு எல்லாம் மேலாக குரங்கு ஒன்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளராகியுள்ளது.

என்.பி.சி. தொலைக்காட்சியில் ஞாயிறு இரவு 10.30 மணிக்கு ஒளிபரப்பாகும் "அனிமல் பிராக்டிஸ்" நிகழ்ச்சியின் தொகுப்பாளர் ஒரு குரங்கு என்றால் நம்ப முடிகிறதா? நிச்சயம் நம்பித்தான் ஆகவேண்டும். அதுவும் இது சதாரண குரங்கு அல்ல ஜோர்ஜ் ஆப் த ஜங்கிள், நைட் அட் த மியூசியம், ஹேங் ஓவர் 2 என 20 படங்களுக்கு மேல் நடித்த கிரிஸ்டல்தான் இப்போது என்.பி.சி. தொலைக்காட்சியில் 'அனிமல் பிராக்டிஸ்' நிகழ்ச்சியின் தொகுப்பாளராகியிருக்கிறது.

இதைத் தொடர்ந்து நாய், பூனை, உள்ளிட்ட விலங்குகளையும் களம் இறக்க முடிவு செய்திருக்கிறார்களாம் டி.வி. நிர்வாகத்தினர்.

சினிமா நட்சத்திரங்கள் சின்னத்திரைக்கு வருவது செய்தி அல்லதான். என்றாலும் சினிமாவில் நடித்த குரங்கு ஒன்று சின்னத்திரைக்கு வந்திருப்பது செய்திதானே.







# வீரர்களும் அவர்களது விநோதங்களும்

விளையாட்டு அரங்கைப் பொறுத்த வரையில், விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதோ அல்லது முடிந்த பின்னரோ வீரர்கள் தாம் நினைத்த இலக்கை அடையும் தருணத்தில் தமது மகிழ்ச்சியை வெளிக்காட்ட பல்வேறு விதமான விநோதங்களை நிகழ்த்துவது வழமை. இதற்குக் கிரிக்கெட்டும் விதிவிலக்காக அமைவதில்லை.

இலங்கையில் நடைபெற்று முடிந்த இருபது-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடித்துடுப்பாட்ட வீரரும் பகுதி நேரப் பந்துவீச்சாளருமான கிறிஸ் கெய்ல் மற்றும் இலங்கை அணியின் பந்துவீச்சாளரான ஜீவன் மெண்டிஸ் ஆகியோர் தாம் எதிரணியினரின் விக்கெட்டுகளை வீழ்த்தும் தருணத்தில் மைதானத்துள் நின்றவண்ணம் நடனம் ஆடியமை உலகக் கிரிக்கெட் ரசிகர்களை வெகுவாகவே கவர்ந்து இழுத்துள்ளது.

இவர்களது நடனத்தைத் திரும்பத் திரும்பப் பார்ப்பதற்காக, யூ டியூப் மற்றும் ஏனைய இணையதளங்களில் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் தேடல் நடத்தி அதனூடாக தமது ஆசையைத் தீர்த்துள்ளனர்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறும் வீரர் அல்லது அந்த அணியினர் ரசிகர்களின் மனதில் இடம்பிடிப்பது தவிர்க்க முடியாதது. அதேபோலத்தான் வீரர்கள் நிகழ்த்தும் விநோதங்களும் ரசிகர்களின் மனங்களைவிட்டு அகல்வதில்லை என்பதும் நிதர்சனம்.



# உத்தரவாதமல்ல! சேவையே முக்கியம்

"ஆடு நனைகிறது என ஒநாய் அழுததாம்" இதுபோல் தமிழ் வாக்காளர்களின் தொகை குறைகின்றது என அறிக்கை விட்டு அமர்க் களப்படுத்தும் அரசியல்வாதிகளும் நம்மி டையே இருக்கிறார்கள்.

யுத்தம் முடிவடைந்து நாட்டில் அமைதி நிலை தோன்றிய பின்னரும் சொந்த மண் ணில் வாழ்வதற்கான வசதியின்றி - இன் றைய பொழுதை எப்படிக் கழிப்பது என்ற ஏக்கத்தோடு வாழும் பரிதாப நிலையில் வடக்கில் தமிழ் சமுகம் தத்தளித்து நிற்கிறது.

இந்த மக்களை வைத்துக் கொண்டு தலைநகரில் அரசியல் புழைப்பு நடத்திவருகின்றவர்களும் நம்மிடையே உள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் நவோதய அமைப்புகளின் தலைவர் எஸ்.கே. கிருஷ்ணா.

நவோதயம் மக்கள் முன்னணியின் மாதாந்த அமைப்பாளர் சந்திப்பு, அன்மையில் கட்சிப் பணிமனையில் நடைபெற்றது, இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தம்மை நம்பி வாக்களித்த மக்களை நட்டாற் றில் விட்டு விட்டு, தமது சுயலாபங்களுக்காக நிறங்களை மாற்றிக் கொள்ளும் அரசியல்வாதிக-ளின் முதுகெலும்பற்ற செயற்பாடுகளும், அக் கறையற்ற தன்மைகளுமே தமிழ் மக்கள் மனங் களில் வெறுப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின் றன.

தலைநகரில் வாழும் தமிழ்மக்கள் தமது நிம்ம தியான வாழ்க்கைக்கு வழிகாட்டி தமக்குரிய தேவைகளை அடிப்படை வசதிகளை வென்றெ டுத்து தருவார்கள் என்ற நம்பிக்கையிலேயே இவர்களுக்கு வாக்களித்தனர்.

எனினும் மக்களை மறந்து தமது அரசியல் இருப்பை தக்க வைப்பதற்கான நடவடிக்கைக-ளில் இவர்கள் செயற்படுவதையே நாம் பார்க்கி-றோம். இதிலிருந்து நாம் மாறுபட்டுச் செயற்பட வேண்டியது அவசியமானது.

அரசியல்வாதிகளின் உத்தரவாதங்கள் நம் பிக்கை தருபவையல்ல என்பது மக்களின் எண்ணமாகும்.

இந்த நிலையை மாற்ற வேண்டியது அவசி யமானது. எனவே ஒரு அரசியல் கட்சி என்ற நிலையில் நாம் வெறுமனே உத்தரவாதங்களை அள்ளி வழுங்கக்கூடாது எம்மால் எதனை செய்ய முடியுமே.

இதற்கான உத்தரவாதத்தையே வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் உத்தர வாதத்தையும் உரிய முறை-றயில் செய்து முடிக்க வேண்டும்.

எனவே, அமைப்பாளர்கள் இத னைக் கருத்தில் கொண்டு தமது பகுதிகள் தோறும் எமது கட்சிப் பணி-களை சிறந்த முறையில் முன்னெ டுக்க வேண்டும் என்றார்.



# அதிசயம் ஆனால் உண்மை

வீடுகட்ட அஸ்திவாரம் தோண்டிய போது, பூமிக்கு அடியில் கண்ணாடி மாளிகையும் சுரங்கப் பாதையும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தகவல் அறிந்த மக்கள் இங்கு திரண்டு அந்த இடத்தை பார்வையிட்டுள்ளனர்.

இந்த அதிசயம் இந்தியாவின் ஆந்திர மாநிலம் ஸ்ரீகாளஹஸ்தி மண்டலம் அம்மபாளையம் கிராமத்தில் நடந்துள்ளது. இக் கிராமத்தை சேர்ந்தவர் குருவய்யா நாற்பது வயதான இவர் ஒரு ஒருவிவசாயி. நகரி தெருவில் உள்ள இவருக்கு சொந்தமான இடத்தில் வீடு கட்ட திட்டமிட்டார். அஸ்திவாரத்துக்காக குழி தோண்டும் பணியில் தொழிலாளிகள் ஈடுபட்டிருந்த வேளை பூமிக்கு அடியில் கட்டிடம் தென்பட்டதை பார்த்து தொழிலாளிகள் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர்.

மேலும் ஆழமாக தோண்டிய போது கட்டிடத்துக்கு செல்லும் படிகட்டுகள் தெரிந்தன. மேலும் குழியைத் தோண்ட தோண்ட படிக்கட்டுகள் கீழிறங்கி சென்றன. பின்னர் பூமிக்கடியில் இருக்கும் கட்டிடத்துக்கு போகும் அளவுக்கு வழி தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்த சிவன் கோயில் நிர்வாக அதிகாரிகள் விரைந்து சென்று பார்வையிட்டனர். மேலும் அப்பகுதியில் பொது மக்கள் செல்ல தடை விதித்தனர். பலத்த பொலிஸ் பாதுகாப்பும் அங்கு போடப்பட்டது.

கடந்த 1885 ஆம் ஆண்டு ஸ்ரீகாளஹஸ்தி பகுதியில் ஆட்சி செய்த மன்னர் தாமர்லாவுக்கு சொந்தமான கண்ணாடி மாளிகை சம்பந்தப்பட்ட பகுதியில் இருந்ததாகவும் அதில் தான் மன்னரின் குடும்பத்தினர் தங்கி இருந்ததாகவும் கூறுகின்றனர்.

மேலும் தாமர்லாவின் ஆட்சிக்கு பின்பு அவரது வம்சாவளியை சேர்ந்த மஹிபால் நாயனி என்பவர் அந்த கண்ணாடி மாளிகையில் வசித்து வந்ததாக கூறப்படுகிறது.

கடந்த 1910ஆம் ஆண்டு மஹிபால் நாயனி, ஸ்ரீகாளஹஸ்தி பகுதியை ஆள பட்டாபிஷேகம் செய்யப்பட்டுள்ளார்.

வரலாற்று சான்றுகள்படி ஸ்ரீகாளஹஸ்தி பகுதியை ஆண்ட கடைசி மன்னன் மஹிபால் நாயனி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னர் மஹிபால் நாயனிக்கு பின்பு அவரது வம்சாவளியை சேர்ந்தவர்கள் அங்கு வசித்துள்ளனர்.

இந்திய சுதந்திரத்துக்கு பின்னர் மன்னரின் வம்சத்தார் தனி நபருக்கு அந்த இடத்தை விற்றுவிட்டு வேறு இடங்களுக்கு சென்று விட்டனர். பின்னர் பராமரிக்காமல் விடப்பட்ட மாளிகை, மண்ணில் புதைந்ததாக கூறப்படுகிறது.

ஸ்ரீகாளஹஸ்தி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்த கண்ணாடி மாளிகை, சுரங்கப் பாதை குறித்து தொல்லியல் துறையினரின் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தக் கணம் மட்டு

**நம்முடைய வாழ்க்கை எத்தனை நீண்டதாகவும் இருக்கலாம். ஆனால் நம் கட்டுப்பாட்டில் இருக்கும் காலம் நிகழ்காலம் மட்டுமே. கடந்து போன காலத்தை இனி மாற்ற முடியாது. நல்லதோ கெட்டதோ முடிந்ததெல்லாம் வாழ்க்கையின் வரலாறு ஆகி விட்டது. கடந்த காலத்தில் பயணித்து நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை நம் விருப்பப்படி மாற்றி விட முடியாது.**

எதிர்காலம் என்றுமே ஒரு கேள்விக் குறி தான்.

இனி மிஞ்சி இருக்கும் காலம் எத்தனை, அதில் நடக்க இருப்பதெல்லாம் என்னென்ன என்பதை நாம் அறிய மாட்டோம். எதிர்கால நிகழ்ச்சிகளை நாம் எட்டிப்பார்க்க முடியாது. இப்படி இருக்கையில் நம் கட்டுப்பாட்டில் இல்லாத கடந்த கால நினைவுகளிலும் எதிர்காலக் கனவுகளிலும் நம் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய நிகழ்காலத்தை நாம் வீணடிப்பது தான் வேடிக்கையிலும் வேடிக்கை.

இந்தக் கணம் மட்டுமே நம் முடையது. நாம் நினைத்தபடி நடந்து கொள்ள இந்தக் கணத்தில் மட்டுமே முடியும்.

நம்மால் செயலாற்ற முடிந்த இந்த ஒரு கணத்தை நாம் எப்படி பயன் படுத்துகிறோம் என்பதை வைத்தே நாம் நம் வாழ்க்கையை நிர்ணயம் செய்து கொள்கிறோம்.

நவீன மருத்துவத்தின் தந்தை என்றழைக்கப்படும் சர் வில்லியம் ஓஸ்லர் (Sir William Osler) தன் மேசையில் மகாகவி காளிதாசரின் ஒரு கவிதையின் ஆங்கில மொழி பெயர்ப்பை எப்போதும் வைத்திருந்த தாக சொல்லப்படுகிறது.

> "நேற்று என்பது வெறும் கனவு
> நாளை என்பதோ கற்பனை மட்டுமே
> இன்று சிறப்பாக வாழ்ந்தால்
> அது நேற்றைய கனவையும் இனிமையாக்கும்
> நாளைய தினத்தையும் நம்பிக்கைக்குரியதாக்கும்
> அதனால் இன்றைய தினத்தைக் கவனி
> அதில் தான் விடியலுக்கான தீர்வே உள்ளது" என்பதாகும்.
>
> -மகாகவி காளிதாசர்


காளிதாசரின் இன்றைய தினம் கூட சற்று அகலமான காலம் என்று சொல்லலாம். இன்றில் கூட இன்றைக் குட்பட்ட கடந்த காலம் எதிர்காலம் என்பதும் அடங்கி விடுகிறது. உண்மையில் வாழ்க்கையில் எல்லா வெற்றிகளுக்கும் மேன்மைகளுக்கும் சூட்சுமம் இந்தக் கணத்தில்தான் உள்ளது. இந்தக் கணத்தில் தான் நாம் ஏதாவது செய்ய முடியும். நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான கணம் இந்தக் கணம் தான்.

இருட்டில் ஒரு நெடும்பயணம் காரில் போக வேண்டி இருப்பதாக வைத்துக் கொள்வோம். அத்தனை தூரமும் தெரு விளக்குகள் இருந்தாக வேண்டும் என்பதில்லை. காரின் முன் விளக்குகள் சரியாக எரிந்தால் போதும். அத்தனை தூரத்தையும் சிரமம் இல்லாமல் கடந்து விடலாம். காரின் முன் விளக்குகளால் சில அடி தூரம் தான் வெளிச்சம் தர முடியும் என்பதால் பயணக்கடைசி வரை தெருவிளக்கு எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்ற கோரிக்கை எப்படி நகைப்பிற்கிடமாகுமோ அப்படித்தான் எதிர்காலம் முழுவதற்கும் தயார்படுத்திக் கொள்வதும்.

தோமஸ் கார்லைல் மிக அழகாகக் கூறுவார். "நம்முடைய முக்கிய வேலை தூரத்தில் மங்கலாகத் தெரிவது என்ன என்பதைத் தெரிந்து கொள்வதல்ல நம் முன்னால் இருப்

# மே உங்களுடையது!

-என்.கணேசன்



பது என்ன என்று தெரிந்து அதை சிறப்பாகச் செய்வது தான்". அப்படித் தான் இந்தக் கணத்தை நாம் சிறப்பாக உபயோகித்தால் அப்படியே ஒவ்வொரு கணம் நம் வாழ்க்கையில் வரும் போதும் சிறப்பாக பயன்படுத்தினால் எதிர்காலம் தானாக சிறப்பாய் உருவாகி விடும் என்பதில் சந்தேகமில்லை.

நேற்றைய நிகழ்வுகளில் இந்தக் கணத்தில் ஏதாவது பாடம் உணர்வோமானால் அது நம்மை பக்குவப்படுத்தும்.

நாளைய நாளின் சிறப்புக்காக திட்ட மிட்டு இந்தக் கணத்தில் ஏதாவது செய்வோமானால் அது நம்மை முன்னேற்றும்.

ஆக இந்த நாளில் இந்தக் கணத்தில் நாம் செய்வதை வைத்துத் தான் நேற்றைய அனுபவத்திற்கும் நாளைய நடப்பிற்கும் நாம் சிறப்பை ஏற்படுத்த முடியுமே தவிர அவற்றைக் குறித்த வருத்தங்களாலும் கவலைகளாலும் அல்ல. அப்படி செயல்படுவதை விட்டு விட்டு வருத்தங்களாலும்கவலைகளாலும் கழிக்கப்படும் காலங்கள் வீணடிக்கப் படுபவையே.

கடைசி வரை உங்களால் செயல் பட முடிந்த காலம் நிகழ்காலம் மட்டுமே.

எனவே நிகழ்காலத்தில் மிகுந்த கவனம் வையுங்கள். நிகழ்காலத்தில் சூழ்நிலைகள் எவ்வளவு மோசமாக இருந்தாலும் புலம்பலிலேயே கழித்து விடாதீர்கள்.

புலம்பலிலும் வருத்தங்களிலும் நிலைமை மேலும் மோசமாகுமே தவிர எதுவும் மாறி விடாது தீர்வும் கிடைக்காது. தரப்பட்டிருக்கும் சூழ்நிலைகளில் எப்படி முடிந்த அளவு சிறப்பாக செயல்படலாம் என்று யோசித்து அதன்படி செயல்படுங்கள். மோசமான சூழ்நிலைகளும் சிறிது சிறிதாக மாறி உங்களை மேலான சூழ்நிலைகளுக்குப் போக வழிவிடுவதைக் காண்பீர்கள்.

நமக்கு முழுக்கட்டுப்பாடு இருப்பது இந்தக் கணத்தில் தான் என்பதால் வாழ்க்கையின் வெற்றியின் சூட்சுமம் முழுவதும் இந்தக் கணத்தில் தான் இருக்கிறது. நதி நீரோட்டத்தில் ஒரு முறை காலை நனைத்த நீரில் இன்னொரு முறை காலை நனைக்க முடியாது என்று சொல்வார்கள். ஒவ்வொரு முறையும் நீர் புதிதாகவே இருக்கிறது. கால ஓட்டத்திலும் ஒவ்வொரு கணங்களும் புதியவையே. நாம் இந்தக் கணத்தில் வாழும் முறையைப் பொருத்தே இது நமக்கு அனுகூலமாவதும் பயனற்றுப் போவதும் தீர்மானமாகிறது.

காளிதாசர் சொன்னது போல நம் விடியலுக்கான தீர்வு இந்தக் கணத்தில்தான் உள்ளது. மாற ஆசைப் படுகிறீர்களா? அதற்கான முதல் அடியை இந்தக் கணத்தில் வையுங்கள்.

ஏதா வது சாதிக்க ஆசைப்படுகிறீர்களா? அதற்கான பிள்ளையார் சுழியை இந்தக் கணத்தில் போடுங்கள். நாளை செய்யலாம் என்று விட்டு வைப்பவைகளை நாம் என்றுமே செய்வதில்லை. ஏனென்றால் நாளை என்பது நம்மிடம் வருவதேயில்லை. நம்மிடம் இருப்பதெல்லாம் இந்தக் கணம் மட்டுமே.

இருப்பதை சரியாகப் பயன்படுத்தினால் மட்டுமே வருவதெல்லாம் சரியாகும்.

# சாதனைப் பாதையில் புனித

வரலாறு படைத்த கல்லூரிகள் வரிசையில் இம்மாதம் தினமகுடி இதழை அலங்கரிப்பது வரலாற்றில் மறை சாட்சிகள் வாழ்ந்த புனித பூமியாக கருதப்படுகின்ற மன்னார் பட்டினத்திலே அமைந்துள்ள புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியாகும். 1918 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 94 ஆண்டுகள் கடந்து சவால்களைத் தாண்டி சாதணைப்பாதையிலே பயணித்துக் கொண்டு இருக்கிறது. "விசுவாசத்தில் உறுதியாய் இரு" எனும் மகுட வாசகத்தோடு கல்வி-வீரம்-விசுவாசம் சூரிய உதயமும் சிகப்பு, மஞ்சள், பச்சை, நீலம் வண்ணமும் உறுதிக் கான செயற்பாடும். தொலைநோக்கு கூற்றாக- உன்னை அறிந்து கொண்டு சமூகத்திற்கு தொண்டு செய். பணிக் கூற்றாக சமய சமூக கல்வி கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து நவீன சமூகத்தில் தன்னை இயைபுபடுத்தி வாழக்கூடிய ஒழுக்கமும் மாணவ சமூதாயத்தை உருவாக்குதலும். 1918ஆம் ஆண்டு அமலமரித்தியாகி களினால் ஆரம் பிக்கப்பட்டு நல்லாயன் பாடசாலையென அழைக்கப்பட்டது. திருச்சபை வரலாற்றில் முக்கி யமான இடத்தை பெற்ற கல்லூரி முதலில் ஆங்கிலக் கல்வியினை போதிக்கவே ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1894இல் புனித வளனார் அருட்சகோ தரர்களினால் கையேற்கப்பட்டு முதல் அதிபராக அருட்சகோதரர் பீலிக்ஸ் கடமையாற்றினார் இச்சகோதரர்களின் பராமரிப்பில் வளர்ச்சிப்பாதையில் மெது மெதுவாக வளர்ச்சிப்பாதையில் நகரத்தொடங்கியிருந்தது. ஆரம்பத்தில் இக்கல்லூரி யானது ஆண்கள் மட்டும் என்றாலும் பின்னர் இருபாலரும் இணைந்த கலவன் பாடசாலையாக மாற்றம் பெற்றது. 1950 ஆம் ஆண்டு பெண்களின் சமத்துவக் கல்விக்காக இரண்டாக பிரிக்கப்பட்டதோடு திருக்குடும்ப கன்னியர் சபையினர் பெண்கள் கல்லூரியை பொறுப்பேற்றுக் கொண்டனர். அப்போது ஆண்கள் கல்லூரியானது இடைநிலை மேல்நிலை இரு பெரும் பிரிவுகளாக காணப்பட்டது. 1951இல் இக்கல்லூரி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலப்பகுதி இக்கல்லூரிக்கு முகாமைத்துவ திறனும் கல்வியின் பாண்டித்தியம் பெற்ற அருட்சகோதரர் அல்பெட் சீசர் பொறுப்பேற்றுக் கொண்டார். அன்று தொடக்கம் இன்று வரை இக்கல்லூரியானது பல துறைகளிலும் வீறு நடைபோட்டு வருகின்றது. புனித திருமுழுக்கு அருளப்பர் டிசாலியன் பெயருக்கு அர்பணிக்கப்பட்டுள்ளது. பாதுகாவலனாக புனித சவேரியார் உள்ளார்.

17ஆம் நூற்றாண்டில் யாழ். மறைமாவட்ட பேராயர் கிறிஸ்த்தோப்பர் பென்ஜமீன் இக்கல்லூரியின் பெருமை பற்றிக் குறிப்பிடும்போது கத்தோலிக்க கல்வியிலும் விசுவாசத்திலும் ஒழுக்கத்திலும் மாணவர்களை வளர்ப்பதோடு மட்டுமல்லாது புனிதரின் நற்பெயரையும் பிரதிபலிக்கின்றது. 1951-2012 இன்று வரைக்கும் bro. அல்பெட் சீசர் 1951-1956- bro.ஹில்லறி ஜோசப் 1956-1976 S.பங்கிராஜ் 1976-1980 bro.S.பஸ்ரியன 1980-1983 bro.ஜோசப் மைக்கல் 1984-1987 S.வேதநாயகம் 1987-1990 J.G.L.பிகிராடோ 1990-1991 A.R.L.சிறில் 1992-1993 M.L.றெவ்வல் 1993-1997 J.ஸ்ரணிஸ்லஸ் 1997-2010 இவர்கள் அதிபர்களாகவும் bro.விஜயதாசன் 1999-2001வரை ஆரம்ப பிரிவு அதிபராகவும் bro.S.G.றெயினோல்ட் 2003-2004 பதில்அதிபர் bro.S.சந்தியோகு கார்த்திகை 2010- சித்திரை 2011வரை பதில் அதிபராக கடமையாற்றியுள்ளனர். இவ்வாறாக பலரின் இடைவிடாமுயற்சியினாலும் அருட்சகோதரர்களின் தொடர்ச்சியான வழிகாட்டலிலும் பல வெற்றிப் படிகளை

19 வயது பிரிவு அகில இலங்கை சம்பியன்-2012



தாண்டிக் கொண்டிருக்கிறது இக்கல்லூரி. இங்கே மிகவும் குறிப்பிட்டாகவேண்டும். J.ஸ்ரணிஸ்லஸ் அதிபர் அவர்களை 1997-2010 கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் அதீத ஆர்வமும் ஆளுமைத்தன்மையும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் செயற்படும் திறனும். சிலமாடிக்கட்டிடங்கள் பலமாடிக் கட்டிடங்களாகவும் பாரிய சேவை கூரிய பார்வை நேரிய வழிநடத்தலின் இக்கல்லூரியானது. பலவகையான சாதனைகளோடு இன்றும் ஜொலிப்பதற்கு இவரின் பங்கு அளப்பரியது எனலாம்.

புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையானது. கல்வி விளையாட்டு கலைகலாசாரத்திலும் முன்னிலை வகிக்கின்றது. கல்வியை எடுத்துக் கொண்டால் தற்போது 2010இல் 28 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கும் 2011இல் சதாரண தரத்தில் 92 வீதமான மாணவர்கள் சித்தியடைந்ததோடு J.E.ரொசிங்ரன் 9A எடுத்துள்ளார். S.B.J.மிதுசன் பிகிறாடோ தேசிய ரீதியிலான கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வடமாகாணத்தில் முதலாவது இடத்தையும் தேசிய அளவில் 8ஆவது இடத்தைப்பெற்று வெள்ளி பதக்கத் தையும் பெற்றுள்ளார். 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் தேசிய மட்டம் மூன்றாமிடம். 2012ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிட்சையில் மன்னார் பாடசாலைகளிளே புனித சவேரியார்

# சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி



கல்லூரி மாணவர்கள் 26பேர் சித்தியடைந்துள்ளனர்.

புனித சவேரியார் என்றால் ஞாபகத்திற்கு வருவது வரலாற்றுப் புகழ்மிக்க உதைபந்தாட்ட அணியினர் தான் 1999-2012 வரை 17மற்றும் 19 வயது பிரிவில் 11தடவை முதல் இடத்தையும் 4தடவை இரண்டாம் இடத்தையும் 4 தடவை மூன்றாம் இடத்தையும் பெற்று பலபாடசாலைகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்குகின்றது. விஷேட விதமாக 2004ஆம் ஆண்டு கொரி யாவில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் 4ஆம் இடத்தைப் பெற்றமை சிறப்பம்சமாகும். இப்போட்டிகளில் வீரர்களுக்கு பயிற்சியாளராக உள்ள சிறப்பான அனுபவம் உடைய ஞானராஜ் அவர்கள் தேசிய 19 வயது கால்பந்தாட்ட அணிக்கு பிரதான பயிற்சியாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதே. அத்தோடு இக்கல்லூரியின் 2012ஆம் ஆண்டின் அகில இலங்கை ரீதியில் 19 வயதுப்பிரிவில் சம்பியன் ஆன உதைபந்தாட்ட அணியின் தலைவர் கில்மன் சொய்ஸா இலங்கை தேசிய அணியில் விளையாட தெரிவு செய்யப்பட்டடை இரட்டிப்பு மகிழ்ச்சியே. மன்னாரில் இக்கல்லூரியில் தான் முதன் முறையாக சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரியானது பலதுறையிலும் பல புத்தி ஜீவிகளையும் கல்வி மான்களையும் குருக்களையும் சிறந்த விளையாட்டு வீரர்களையும் கலைஞர்களையும் உருவாக்கிய பெருமையோடு கம்பீரமாய் காட்சியளிக்கிறது

தற்போது அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் அருட்சகோதரர் J.அகஸ்ரின் அவர்கள் வைகாசி 2012 இருந்து அதிபராக பொறுப்பேற்று திறமையாக வழிநடத்தி வருகின்றமை யாவரும் அறிந்ததே இக்கல்லூரியானது நவின-முறையில் அமையப்பெற்ற விஞ்ஞா ஆய்வு கூடங்கள் நூலகம் இணைய வசதிகள் சிற்றுண்டிச்சாலை விசாலமான வகுப்பறைகள் 20 மேற்பட்ட விளையாட்டுக்களை உள்ளடக்கிய உள்ளக-வெளியக மைதான வசதியோடும் 1850இற்கு மேற்பட்ட மாணவர்கள் 96 மேற்பட்ட ஆசிரியர் குழாமையும் மாணவத் தலைவர்கள் பழையமாணவர் ஒன்றியம் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களையும் பெற்றோர்கள் நலன் விரும்பிகளையும் ஒன்றிணைத்து ஒத்துழைப்புடன் கல்லூரியை வளர்ச்சிப்பாதையில் வழிநடத்துகிறார் இவரின் பணி சிறக்க இன்னும் பல வெற்றிக்கனி பறிக்க தினமகுடி வாழ்த்தி நிற்கின்றது.

பழைய மாணவன் வை.கஜேந்திரன் .






# புனித வியாகுல

புனிதத்தலங்கள் வரிசையில் இம்முறை தினமகுடியை அலங்கரிப்பது கொழும்பு மாநகரில் தன்னிகரில்லா புகழ் பூத்த புதுச்செட்டித்தெரு புனித வியாகுல அன்னை ஆலயம். 192 ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்று சிறப்பைக் கொண்ட ஆலயமாக இது திகழ்கின்றது. காரணம் மேல் மாகாணத்திலே இரண்டு வியாகுல அன்னை ஆலயங்கள் மட்டுமே உள்ளன. ஒன்று நீர்கொழும்பிலும் மற்றது புதுச்செட்டித்தெருவிலும் உள்ளது.

1820 ஆண்டு இந்தியா கோவையை சேர்ந்த ஒரற்றோரின் சபையைச் சேர்ந்த குருக்களால் மாட்டர. டொலொ றோசா எனும் பெயரில் இவ்வாலயம் கட்டப்பட்டது. இப்பிரதேசத்தில் வாழ்ந்த கொழும்புச் செட்டிச்சமூகத்தினரின் வழிபாடுகளுக்கான அமையப் பெற்றதுடன் தொடர்ந்தும் அவர்களால் இவ்வாலயம் பராமரிக்கப்பட்டு வந்தது. அப்போது இவ்வாலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நவநாள் சிறப்பாக நடைபெறும். இவ்வேளை கொச்சிக்கடைவாழ் மக்கள் புனித லூசியாள் பேராலயத்தை தம் பங்கு ஆலயமாக கொண்டிருந்தனர் தமது அனைத்து தேவைகளையும் கொட்டாஞ்சேனை பங்கிலே நிறைவேற்றி வந்தனர் எனினும் பிற்காலத்தின் மக்களின் தொகை பெருகியதன் விளைவாக புதுச்செட்டித்தெரு வியாகுல அன்னை ஆலயத்தை பங்கு ஆலயமாக மாற்ற கோரிக்கை முன்வைத்தனர். அப்போதைய கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிவந்தனைக்குரிய நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை 1990ஆம் ஆண்டு ஆடி மாதம் 15ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புனித வியாகுல அன்னை ஆலயத்தை 105ஆவது பங்கு ஆலயமாக பிரகடனம் செய்தார்.

இதன் பின்னர் இவ்வாலயத்தின் முதலாவது பங்குத் தந்தையாக அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி றெயினோல்ட் லூசியன் 1994ஆம் ஆண்டு ஆவணி மாதம் பங்குத்தந்தையாகவும் லொயிட் சாந்திகுமார் அடிகள் உதவிப்பங்குத்தந்தையாகவும் கடமையாற்றினர். முதலின் பங்கின் கட்டமைப்பை உருவாக்கி மக்களின் சமூக, ஆன்மீக தேவைகளை திறம்பட நிறைவேற்றினார்கள். இவர்களுடைய காலத்தில் 175ஆவது யூபிலி கொண்டாடப்பட்டது. 2ஆவது பங்கு தந்தையாக அருட்பணி ஆனந்த பெர்ணாண்டோபுள்ளே அடிகளாரும் மக்கள் யாவரும் போற்றும் வண்ணமாக மோட்சம் என்று அழைக்கப்பெற்ற அழகிய நற்கருணை சிற்றாலயம் ஒன்றையமைத்தார்.இத்தோடு 3ஆவது பங்குத்தந்தையாக அருட்பணி அ.த.நியூமன் முத்துதம்பி. அ.ம.தி அடிகளின் காலம் பொற்காலம் எனலாம் பழைய ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதிய ஆலயத்தின் அபிஷேக விழா 2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 16ஆம் திகதி நடைபெற்றது. இதன் பின் 4ஆவது பங்குத்தந்தையாக பொறுப்பேற்ற அருட்பணி இக்னேசியஸ்லொயலா வருணகுலசிங்கம் அடிகள் 2010ஆண்டு முதல் 2012 வரை மக்களின் ஆன்மீக வாழ்வையும் வழிபாட்டையும் ஒன்றிணைத்து அருட்தந்தை அவர்கள் பங்குத்தந்தையாக மட்டுமல்லாது தேசிய வழிபாட்டு ஆனைக்குழுவின் செயலாளராகவும் பணியாற்றினார்.

5ஆவது பங்குத்தந்தையாக பொறுப்பேற்ற அருட்பணி A.குமார்சிலியர் அ.ம.தி சிறந்த அனுபவமும் ஆற்றலும் கொண்டவர் தனது 37வருட குருத்துவ வாழ்வில் பல பங்குகளில் சேவையாற்றி பங்கிற்கு இணைக்கப்பட்டார். அடிகளாரின் வழிநடத்தலின் கீழ் ஆலயத்தின் 192ஆவது வருடாந்த திருவிழா இனிதே கொண்டாடப்பட்டது.

இவ்வாறு பல படிமுறை வளர்ச்சி கண்டு பணியாற்றிய பங்குத்தந்தையர்களின் விடா முயற்சியாலும் பங்கு மக்களின் விசுவாச ஒற்றுமையினாலும் 1340தமிழ் குடும்பங்களையும் 129சிங்களக் குடும்பங்களையும் கொண்ட தனித்துவமான பங்காக திகழ்கிறது. ஆன்மீக தேவையினையும் வியாகுல அன்னையின் ஆசீர்வாதத்தினையும் பெற்றுக் கொண்ட மக்கள் ஆலயத்தின் 200ஆவது ஆண்டு விழாவையும் பங்கின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவையும் கொண்டாட ஆயத்தமாகி வருகின்றனர்.



பெ. டிலோய்ட்சன்

# அன்னை ஆலயம்

"எம் வியாகுல மாதவே-உம்
பாதம் சரணடைந்தோம்-எம்
மானிட வாழ்வினிலே
எமக்காதரவாய் வாராய்"



தினமகுடி
14.10.2012


# சித்து


இங்கிலாந்தைச் சேர்ந்த புகழ்பெற்ற தத்துவஞானி போல் ப்ரண்டன் (Paul Brunton) இவர் இந்தியாவிலுள்ள சித்தர்களின் சித்து விளையாட்டுக்களை நேராகக் கண்டு, உணர்ந்து A search in secret India என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். அதிலிருந்து தினமகுழ வாசகர்களுக்காக...


இவர் "உங்கள் தேசத்தில் உண்மையான சித்தர்கள் அமானுஷ்ய சக்திகள் படைத்த படைத்த யோகிகள் இன்றும் இருக்கிறார்களா?" என இந்தியர் ஒருவரிடம்கேட்டார். இங்கிலாந்தில் தற்செயலாகச் சந்தித்த அந்த இந்தியரிடம் ஏதோ ஒரு வசீகர சக்தியால் ஈர்க்கப்பட்ட போல் ப்ரண்டன் அவரிடம் பேச்சுக் கொடுக்க, பேச்சு இந்தியா பக்கமும், இந்தியாவின் யோகிகளைப் பற்றியும் திரும்பியது. இந்திய யோகிகளிடம் இருந்த மகா சக்திகளைக் கேட்டு பிரமித்த போல் ப்ரண்டன் அப்போது தான் இந்தக் கேள்வியைக் கேட்டார்.

"இருக்கிறார்கள். ஆனால் அவர்களை அடையாளம் கண்டு கொள்வது மிகவும் கஷ்டமான காரியம். ஏனென்றால் யோகிகளாகத் தெரிபவர்களில் பலர் போலிகளாக இருக்கிறார்கள் என்பது கசப்பான உண்மை. மலிந்திருக்கும் போலிகளின் கூட்டத்தின் மத்தியில் உண்மையான யோகிகளைக் கண்டுபிடிப்பது மிகவும் சிரமமே. உண்மையான யோகிகள் எத்தனை சக்திகள் பெற்றிருந்தாலும் அவசியம் ஏற்பட்டால் ஒழிய அவற்றை உபயோகிப்பதில்லை. பணமும், புகழும் அவர்களுக்கு பொருட்டல்லாததால் அவர்கள் மற்றவர்களைக் கவர எந்த முயற்சியும் எடுப்பதில்லை. அவர்களுக்கு ஆத்ம ஞானமே முக்கிய குறிக்கோளாக இருக்கிறது. ஆனால் யோக சக்தியை முறைப்படியான பயிற்சியில் அடைந்த யோகிகளல்லாதவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களிடம் பல அபூர்வ சக்திகள் இருந்தாலும் உண்மையான யோகிகள் என்று கூறிவிட முடியாது..." என்றார் அந்த இந்தியர்.

அந்த இந்தியர்,இந்தியாவின் யோகிகளைப் பற்றி சொன்னதையெல்லாம் கேட்டு ஆவல் அதிகமான போல் ப்ரண்டன் அப்படிப்பட்ட உண்மையான ஒரு யோகியையாவது சந்தித்து விட வேண்டும் என்று பேராவலுடன் உடனே இந்தியாவுக்கு வந்தார்.இந்த நிகழ்ச்சி நடைபெற்றது கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில்.அந்த இந்தியர் சொன்னது போல் பல அபூர்வமான சக்தி படைத்தவர்களை போல் ப்ரண்டன் இந்தியாவில் சந்தித்தார்.





அவர் தனது இந்திய ஆன்மீகப் பயண அனுபவங்களை இரகசிய இந்தியாவில் ஒரு தேடல் (A search in secret India) என்ற நூலில் 1934 ஆம் ஆண்டில் சுவைபட எழுதியுள்ளார். அவரது இந்திய அனுபவங்களில் சுவாரசியமான சிலவற்றை இங்கே பார்ப்போமா?

உண்மையான யோகியைத் தேடி பம்பாயில் வந்திறங்கிய போல் ப்ரண்டன் முதலில் கண்ட அபூர்வ சக்தி மனிதர் இந்தியரல்லர். எகிப்தைச் சேர்ந்த ஒரு மேஜிக் நிபுணர். போல் ப்ரண்டன் தங்கியிருந்த ஹோட்டலிலேயே தங்கி இருந்தார். அவர் சக்திகளைப்பற்றி ஹோட்டலில் பலரும் உயர்வாகச் சொல்ல போல் ப்ரண்டன் ஆர்வத்துடன் அவரைச் சந்தித்தார். அந்த எகிப்தியர் போல் ப்ரண்டனிடம் "ஒரு வெள்ளைத் தாளில் உங்கள் சம்பந்தப்பட்ட ஒரு கேள்வியை பென்சிலால் எழுதிக் கொள்ளுங்கள்"

போல் ப்ரண்டன் அப்படியே ஒரு கேள்வியை ஒரு வெள்ளைத்தாளில் எழுதினார்.

"அந்தத் தாளை நான்காக மடியுங்கள்....". போல் ப்ரண்டன் மடித்தார். மேலும் நான்கு நான்காய் முடிகிற வரை மடித்து வைத்துக் கொள்ளச் சொன்னார். போல் ப்ரண்டன் அப்படியே முடிகிற வரை மடித்தார். கடைசியில் அந்தத் தாளையும், பென்சிலையும் சேர்ந்தாற்போல கெட்டியாக வலது கையில் பிடித்துக் கொள்ளச் சொன்னார் அந்த எகிப்தியர். அப்படியே செய்தார்.

பின் சிறிது நேரம் அந்த எகிப்திய மேஜிக் நிபுணர் கண்களை மூடிக்



# விளையாட்டேனி

கொண்டு ஒருவித தியான நிலைக்குச் சென்றார். சில நிமிடங்கள் கழிந்து கண்களைத் திறந்த அவர் "நீங்கள் அந்தத் தாளில் எழுதிய கேள்வி இது தானே?" என்று கேட்டு அவர் எழுதிய கேள்வியை அப்படியே சொன்னார். போல் ப்ரண்டன் திகைத்துப் போனார்.

அந்த மேஜிக் நிபுணர் அந்தத் தாளைப் பிரித்துப் பார்க்கச் சொன்னார். போல் ப்ரண்டன் அதைப் பிரித்துப் பார்த்தார். அந்தக் கேள்வியின் கீழ் அதற்கான பதில் பென்சிலில் எழுதியிருந்தது. போல் ப்ரண்டனிற்கு பிரமிப்பாக இருந்தது. இது என்ன கண்கட்டு வித்தையோ என்று நினைத்த அவரை மேலும் சில கேள்விகள் எழுதிக் கொள்ளச் சொன்னார் அந்த எகிப்தியர். போல் ப்ரண்டன் தனக்கு மட்டுமே தெரிந்த தன் சம்பந்தப்பட்ட மனிதர்கள் பெயர் கள், தேதிகள் குறித்து மிகவும் கடினமான கேள்விகளாகத் தேர்ந்தெடுத்து எழுதிக் கொண்டார். அந்தத் தாளையும் மடித்து முன்பை விட இறுக்கமாக பென்சிலோடு பிடித்துக் கொண்டார். ஆனால் அவை எல்லாவற்றையும் அந்த எகிப்தியர் சொன்னதோடு அந்தத் தாளைப் பிரித்துப் பார்த்தபோது அந்தக் கேள்விகளின் கீழே பென் சிலால் சரியான பதில்கள் எழுதப்பட்டிருநதன.


பிரிக்க முடியாதபடி தன் கையிலேயே மிக இறுக்கமாக மடித்துப் பிடித்து வைத்துக் கொண்ட தாளில் உள்ள கேள்விகள் அந்த எகிப்தியரால் எப்படி அறியப்பட்டன என்பதும் எந்த விதத்திலும் தன் வாழ்க்கையில் நெருங்கியவர்கள் கூட அறிந்திராத அந்தப் பதில்கள் எப்படி அறியப்பட்டன என்பதும் பென்சிலை மடித்து வைத்திருந்த தாளுடன் இறுக்கிப் பிடித்திருந்தபோதும் அந்த பென்சிலால் அந்தப் பதில்கள் அந்தத் தாளில் எப்படி எழுதப்பட முடியும் என்பதும் போல் ப்ரண்டனுக்குப் புரியாத புதிராக இருந்தது.

வியப்பின் எல்லைக்கே போன போல் ப்ரண்டன் இது எப்படி சாத்தியமாகிறது என்று கேட்டபோது அந்த எகிப்தியர் அந்த இரகசியத்தைச் சொல்ல மறுத்து விட்டார். போல் ப்ரண்டன் வற்புறுத்தியபோது "இந்த இரகசிய வித்தையை வெறும் ஆர்வமுடையவர்களுக்கு சொல்லித் தர முடியாது. நீங்கள் என் உதவியாளராக மாறி என்னுடனேயே வருவதாக இருந்தால் மட்டுமே நான் உங்களுக்கு இந்த இரகசிய வித்தையைக் கற்றுத் தர முடியும்." என்று உறுதியாகச் சொல்லி விட்டார். போல் ப்ரண்டனுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனால் இங்கிலாந் திலிருந்து தான் இந்தியா வந்த உண்மையான காரணத்தை அந்த எகிப்தியரிடம் சொல்லிப் பின் வாங்கினார்.

தன் தேடலில் அவர் கண்ட இன்னொரு சுவாரசியமான நபர் சென்னைக்கு அருகே இருந்த ஒரு ஹத யோகி. அவரது அபூர்வ சக்திகள் பற்றி அடுத்த பதிவில் காண்போமா? ■

# உலக அதிசய


உலக அதிசயங்கள் எவை எவை என்பது பற்றிய தகவல்களை விரல் நுனியில் வைத்திருக்கும் நம்மில் பலருக்கு உலக அதிசயங்களை முதன் முதலில் பட்டியலிட்டவர் யார் ? என்ற கேள்விக்கு விடை தெரிந் திருக்குமா என்பது சந்தேகமே. கிரேக்க நாட்டை (தற்போதைய கிரீஸ்) சேர்ந்த சில சுற்றுலா பயணிகள் தான் உலகில் முதன் முதலில் உலக அதிசயங்ககளைப் பட்டியலிட்டவர்கள் என்று சொன்னால் உங்க ளால் நம்பமுடிகிறதா? வாசகர்களே வாருங்கள் இது பற்றி மேலும் தெரிந்து கொள்வோம்...!






அரேபியர்களின் நாகரீங்கள் மற்றும் அவர்களின் பெருமைகள் பற்றி உலகம் ஏற்கனவே அறிந்திருந்தாலும் கூட அலெக்ஸாண்டரின் பெர்சிய படையெடுப்பிற்கு பிறகுதான் அரே பியர்களின் பெருமைகள் அதிக அளவில் வெளியுலகத்திற்கு தெரிய ஆரம்பித்தது. கி.மு. 323-ஆம் ஆண்டு அலெக்ஸாண்டரின் மறைவுக்கு பின்னர் கிரேக்கத்தில் தோன்றிய புகழ் பெற்ற நாகரீகம் ஹெல்லினிஸ்டிக் நாகரீகம் (Hellenistic Civilization கி.மு.323-146) ஆகும். ஹெல்லினிஸ்டிக் நாகரீகத்தை சேர்ந்த நாடோடி மக்களில் சிலருக்கு அலெக்ஸாண்டரின் பெர்சிய படையெடுப்பின் மூலம் அரேபியர்களின் வியக்கத் தகு கட்டடங்கள் பற்றி தெரியவந்தது இதனால் அவற்றை நேரில் பார்க்கும் ஆர்வம் கொண்டு மத்தியதரைக்கடலை சுற்றி அமைந்துள்ள நகரங்களுக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டனர்.

பயணத்தின் போது அவர்கள் கண்டு வியந்த இடங்கள் மற்றும் கட்டிடங்களை தங்களிடமிருந்த கைக் குறியேடுகளில் குறித்து வைத்துக் கொண்டனர், அவற்றில் சில முக்கியமான இடங்களையும் கட்டிடங்களை யும் எளிதாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டி அவற்றை பார்க்க வேண்டிய இடங்கள் (Things to be seen) அல்லது பார்வை (Sights) என்கின்ற தலைப்பில் பட்டியலிட்டனர். எண்ணிக்கையா னாலும் சரி இடங்களானாலும் சரி ஒவ்வொரு பயணிகளின் பட்டியலும் இன்னொரு பயணிகளின் பட்டியலிலி ருந்து வேறுபட்டது என்று தான் சொல்லவேண்டும். இது தான் உலக அதிசயப்பட்டியல் உருவாவதற்கான முன்னோடி சிந்தனை ஆகும்



கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் புகழ் பெற்று விளங்கிய அண் டிபாட்டர் (Andipater) என்ற கவிஞரின் கைகளில் இந்தப் பட்டியல் அடங் கிய குறிப்புகள் ஒரு நாள் தற்செயலாக கிடைக்க, ஆர்வமடைந்த அவர் அந்த இடங்களை நேரில் சென்று பார்த்துவிடும் முடிவுகொண்டு குறிப்பேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த அனைத்து இடங்களையும் நேரில் சென்று பார்வையிட் டார். பயணமுடிவில் கி.மு. 140-ஆம் ஆண்டு அவர் எழுதிய கவிதை ஒன்றில் 'அதிசயங்கள்-7' என்ற தலைப்பில் கிசாவின் பெரிய பிரமிட் (எகிப்து, கி.மு-2680), பபிலோனின் தொங்கு தோட்டம் (Iraq, கி.மு.600), ஒலிம்பியாவின் ஸேயுஸ் சிலை (Greece, கி.மு-433), ஆர்ட்டெமிஸ் கோயில் (Turkey, கி.மு.350 (பழையது) ரூ கி.பி.550 (புதியது), மௌ சோல்லொஸின் மௌசோலியம் (Turkey, கி.மு.350) ரோடொஸின் கொலோசஸ் (Greece, கி.மு.280), அலெக் ஸாந்திரியாவின் கலங்கரை விளக்கம் (Egypt, கி.மு. 300) ஆகிய ஏழு இடங்களின் கட்டுமானம் பற்றி வியந்து குறிப்பிட்டார். நாளடைவில் 'அதிச யங்கள்-7' என்பதற்கு முன்னால் 'உல கம்' என்ற சொல் ஒட்டிக் கொண்டு 'உலக அதிச யங்கள் - 7'



# ங்கள் எவை?



என்று அழைக்கப்பட்டது. இதுதான் ஆதாரபூர்வமான முதல் உலக ஏழு அதிசயபட்டியல் ஆகும்.

பதினாறாம் நூற்றாண்டு வரை ஆண்டிபாட்டர் பட்டியலிட்ட அதிசயங்கள் தான் உலக அதிசயங்களாக வழக்கத்தில் இருந்தன. எகிப்து பிரமிடைத் தவிர ஏனையவை அழிந்துவிட்டதால் பதினாறாம் நூற்றாண்டிற்கு பிறகு சில எழுத்தாளர்கள் உலக அதிசயங்கள் என்று வேறு சில இடங்களை பரிந்துரை செய்ய ஆரம்பித்தனர். இந்நிலையில் கோபான் ப்ரீவர் (Cobhan Brewer) என்ற இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் 1870-ஆம் ஆண்டு வேற்றுமொழி சொல்களுக்கான விளக்கம், பழமொழி விளக்கம், விடுகதை விளக்கம், மற்றும் சில வரலாற்று புள்ளிவிபரங்கள் அடங்கிய Brewers Dictionary of Phrase & Fable என்ற அகராதி (Dictionary) ஒன்றை வெளியிட்டார்.

ப்ரீவரின் அந்த அகராதியில் இடைக்காலத்தில் கட்டப்பட்ட சில கட்டிடங்களும் நவீன காலத்தில் கட்டப்பட்ட சில கட்டிடங்களும் (ஸ்டோன் ஹெஞ் (England), சிச்சென் இட்சாபிரமிட் (Mexico), கொலோசியம் (Italy, Rome), சீனப் பெருஞ்சுவர் (China) , பைசா நகர் சாய்ந்த கோபுரம், தாஜ் மஹால் (India), எம்பயர் ஸ்டேட் கட்டிடம் (America), ஈபெல் கோபுரம் (France) புதிதாக உலக அதிசயங்களுக்கான தகுதியான கட்டிடங்களாக பரிந்துரை செய்யப்பட்டன. இதில் தான் முதன் முதலாக இந்தியாவின் தாஜ்மஹால் உலக அதிசயங்களுக்கான பட்டியலுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இதை தொடர்ந்து சில நூற்றாண்டுகளாக அதிகாரபூர்வமற்ற உலக அதிசயபட்டியல் வழக்கத்தில் இருந்தது.

இந்நிலையில் 1999-ஆம் ஆண்டு கனடா நாட்டைச் சேர்ந்த பெர்னார்ட் வெபர் என்ற திரைப்பட இயக்குனர் அதிகாரபூர்வமான புதிய ஏழு உலக அதிசயங்களை கொண்ட பட்டியலைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். இதற்காக அவர் நியூ 7 வொண்டர்ஸ் என்ற அறக்கட்டளையை ஏற்படுத்தினார். 2001-ஆம் ஆண்டு புதிய பட்டியல் தயாரிக்கும் பணிக்கான இணையத்தளம் தொடங்கப்பட்டது. உலகம் முழுவதிலும் இருந்து புதிய உலக அதிசயங்களுக்காக போட்டியிடும் நினைவுச் சின்னங்களுக்கான விண்ணப்பங்கள் 2005-ஆம் ஆண்டு நவம்பர்-24வரை பெற்றுக்கொள்ளப்பட்டது. உலகம் முழுவதிலும் இருந்து 177-நினைவுச் சின்னங்கள் பரிசீலனைக்கு வந்ததாகவும் அவற்றில்21-தளங்களை மட்டும் உலகின் தலைசிறந்த கட்டிடக்கலை வல்லுனர்களைக் கொண்டு போட்டிக்கு தகுதியானவை என்று தேர்ந்தெடுத்ததாகவும் நியூ 7 வொண்டர்ஸ் அறக்கட்டளை ஜனவரி 1, 2006இல் அறிவித்தது.

இந்த 21-தளங்களில் உலகின் பண்டைய உலகஅதிசயபட்டியலில் இடம் பிடித்திருந்த எகிப்து பிரமிட்டும் ஒன்று, எகிப்திய மக்கள் பிரமிட்டை வாக்கெடுப்புக்குள் கொண்டுவர எதிர்ப்புத் தெரிவித்ததால் பிரமிட் மதிப்புமிக்க தளமாக கருதப்பட்டு வாக்கெடுப்பு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது. தொடர்ந்து எஞ்சியிருந்த 20-தளங்கள் மட்டும் மக்களின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.


2007-ஆம் ஆண்டு ஜுன் மாதம் வாக்கெடுப்பு முடித்துக்கொள்ளப்பட்டு 2007-ஆம் ஆண்டு ஜூலை 7- ஆம் திகதி போரத்துக்கல் நாட்டிலுள்ள லிஸ்பன் நகரில் வெற்றி பெற்ற புதிய ஏழு உலக அதிசயங்களாக சிச்சென் இட்சா (Mexico), மீட்பர் கிறிஸ்து சிலை (Brazil), கொலோசியம் (Rome), சீனப் பெருஞ்சுவர் (China), மாச்சு பிச்சு (Peru), பெட்ரா (Jordan), தாஜ் மஹால் (India) ஆகியவை அறிவிக்கப்பட்டன.





# பாகிஸ்தானைக் கலங்கடித்த
# காதல்

## பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சராக ஹீனா நியமிக்கப்பட்டபோது அவரின் அழகு குறித்துப் பேசாதவர்கள் எவரும் இல்லை என்றே கூறலாம்.





உலகளவில் பிரபல்யங்களின் காதல்கள் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்துவது வழமை. அவை பெரும்பாலும் உள்நோக்கம் கொண்டவையாக சிலரால் பரவவிடப்பட்டு, அதிலிருந்து ஆதாயம் தேடப்படுபவையாகவே காணப்படும். இத்தகைய ஒரு காதல் விவகாரம் தற்போது பெரும் பரபரப்பாகப் பேசப்படுகிறது. இது பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டதாக உள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சராக இருக்கும் ஹீனா ரப்பானி கர் (வயது-34), பணக்கார வர்க்கைத்தைச் சேர்ந்தவர். பிரோஸ் குல்சார் என்ற பெரும் பணக்கார தொழில் அதிபரை மணந்து அன்னயா மற்றும் தினா ஆகிய 2 பெண் குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.

அந்நாட்டு அதிபர் ஆசிப் அலி சர்தாரி - பெனாசிர் பூட்டோ தம்பதியின் மகனும், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவருமானவர் பிலாவால் பூட்டோ (வயது-24).

பிலாவால் - ஹீனாவுக்கிடையே காதல் மலர்ந்து, அது திருமணம் என்ற எல்லையை அடைந்துவிட்டதாக பங்களாதேஷ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி தற்போது பாகிஸ்தானை கலங்கடித்து வருகிறது.

இந்த விடயம் பிலாவின் தந்தையான சர்தாரியின் காதுகளுக்கு எட்டவே, அவர் ஏற்கனவே திருமணமாகி 2 குழந்தைகளுக்கு தாயான ஹீனாவை மணக்கக் கூடாது என்று தனது மகனைக் கண்டித்துள்ளாராம். அதற்கு பிலாவல் அளித்த பதில், நான் மணந்தால் ஹீனாவைத்தான் மணப்பேன் என்பதாகும்.

இந்த காதல் விவகாரம் நீண்ட காலமாக நடைபெற்றுவந்துள்ளது. மேலும் அதிபர் மாளிகையில் பிலாவலும், ஹீனாவும் படுக்கையில் இருந்ததை சர்தாரியே நேரில் பார்த்தார் என்றும் கூறப்படுகிறது.

இவை இவ்வாறிருக்க, ஹீனா - பிலாவலுக்கு மத்தியில் காதல் உருவாகுவதற்கு முன்னரே ஹீனாவின் கணவர் பிரோஸ் குல்சார், தனது நிறுவனத்தில் பணிபுரியும் பெண்ணுடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்தார் எனவும், இந்த விவகாரம் ஹீனாவுக்குத் தெரியவர, இருவருக்குமிடையில் பிரச்சினை உருவாகியிருக்கிறது.

இதனால் அதிக தற்கொலைக்கும் முயன்றிருக்கிறாராம் ஹீனா. இதன் பின்னரே ஹீனா, பிலாவலுடன் பழக ஆரம்பித்திருக்கிறார் எனவும் கூறப்படுகிறது.

பின்னர் ஹீனா, பிலாவல் காதல் விவகாரம் ஹீனாவின் கணவருக்குத் தெரியவர, இதுகுறித்து அவர் ஹீனாவிடம் வினாவியுள்ளார். அப்போது கடுப்பாகிய ஹீனா, நான் உங்களை விவாகரத்துச் செய்யவும் தயார் என முகத்தில் அறைந்தது போல கூறியுள்ளார்.

நீண்ட காலமாக தொடர்ந்துள்ள இந்தக் காதல் விவகாரம் தற்போது வெளிவந்துள்ளமைக்கு அடுத்த வருடம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலை இலக்காகக் கொண்டு எதிர்க்கட்சியினரால் பரப்பிவிடப்பட்ட வதந்தி என்று கூறும் ஆளும் தரப்பினரும் உள்ளர்.

அதேவேளை, இந்த விடயத்தை பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே பங்களாதேஷ் பத்திரிக்கை செய்தி வெளியிட்டதாக பிரிட்டன் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இதை ஐ.எஸ்.ஐ அமைப்பு மறுத்துள்ளபோதும், பிரிட்டன் ஊடகம் உறுதிபட ஐ.எஸ்.ஐ. அமைப்பையே குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்தக் காதல் விவகாரத்தால் பாகிஸ்தான் வெளியுறவுத்துறையை, காதல் விவகாரத்துறை எனக் கிண்டலாக பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டும் உள்ளன.

நீண்ட காலமாகத் தொடர்ந்த இந்தக் காதல் விவகாரம் தக்க தருணம் பார்த்து வெளியிடப்பட்டிருப்பதால், இது பாகிஸ்தான் அரசியல் மட்டத்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தப்போகிறது என்பது மாத்திரம் உண்மை.

அதற்கமைய, இதன் விளைவுகளை வரும் தேர்தல் சுமந்துவரும் எனக் கூறலாம்.

**இந்த காதல் விவகாரம் நீண்டகாலமாக திரை மறைவில் நடைபெற்று தற்போதுதான் வெளியே தெரியவந்ததா அல்லது அதிபர் தேர்தலை இலக்கு வைக்கப்பட்டு எதிர்க்கட்சியினரால் திட்டமிடப்பட்டு வெளியிடப்பட்டதா அல்லது இவற்றுக்கும் மேலாக வேறேதும் காரணங்கள் உள்ளனவா என பல்வேறு கோணங்களில் சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

ஆக்கம் :என்கே (தமிழகம்)



# பிழைக்கத் தெரியாதவர்...?

பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த பச்சைச்சட்டைக்காரரைப் பார்த்த போது சத்யமூர்த்தி போலத் தெரிந்தது. கார் அந்த பஸ் ஸ்டாப்பைக் கடந்து சில அடிகள் முன்னோக்கிச் சென்று விட்டிருந்தாலும் காரை நிறுத்தி ஜெயக்குமார் அந்த மனிதரை உற்றுப் பார்த்தார். சத்யமூர்த்தி தான். மனிதர் வேலையில் இருந்தபோது எப்படி இருந்தாரோ பார்க்க அப்படியே தான் இப்போதும் தெரிந்தார். எந்தப் பெரிய முன்னேற்றமும் தெரியவில்லை. ஜெயக்குமார் ஏளனமாக நினைத்துக் கொண்டார்.

அவரும் சத்யமூர்த்தியும் ஒரே அரசுத் துறையில் இன்ஜினியர்களாக பல வருடங்கள் சேர்ந்து வேலை பார்த்தவர்கள், சம வயதினர்கள், ஒரு மாத இடைவெளியில் ஒரே அலுவலகத்திலிருந்துரிடையர் ஆனவர்கள். அதனால் தானோ என்னவோ தன்னை அடிக்கடி சத்யமூர்த்தியோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பழக்கம் ஜெயக்குமாருக்கு ஏற்பட்டிருந்தது.

இருவரும் பணம் கொழிக்கும் அரசுத்துறையில் அதிகாரிகளாக இருந்தாலும் சத்யமூர்த்தி பிழைக்கத் தெரியாத மனிதராகவே கடைசி வரை இருந்து விட்டார். அந்தத் துறையில் சம்பளத்தைத் தவிர ஒரு பைசா அதிகமாக சம்பாதிக்காதவர் அனேகமாக அவர் ஒருவர் தான். அந்தத் துறையில் கையை நீட்டவே வேண்டியிருக்கவில்லை. வேலையாக வேண்டியிருந்தவர்கள் தாங்களாகவே பணமாகவும், பொருளாகவும் கொண்டு வந்து கொட்டினார்கள். அந்தத் துறையில் அனைவரும் சம்பாதித்ததில் அளவில்லை என்றாலும்

ஜெயக்குமார் தன் தனி சாமர்த்தியத்தால் மற்றவர்களை விட இரட்டிப்பாக சம்பாதித்து விட்டிருந்தார். ஆனால் திறமையாகவும் கச்சிதமாகமாகவும் வேலை செய்தாலும் சத்யமூர்த்தி மட்டும் கடைசி வரை அப்படி வரும் பணத்தையும் பொருளையும் உறுதியாக மறுக்கிறவராகவே இருந்து விட்டார்.

அந்த நேர்மை ஜெயக்குமாருக்கு முட்டாள்தனமாகவே பட்டது. மற்றவர்களும் சத்யமூர்த்தியைப் பிழைக்கத் தெரியாத மனிதர் என்றே அழைத்தார்கள். ஆனாலும் அவர்கள் அனைவருக்கும் சத்யமூர்த்தி மீது மிகுந்த மரியாதை இருந்தது. மேல் அதிகாரிகள் கூட அவரிடம் ஒரு தனி மரியாதையோடு நடந்து கொண்டனர். அதைக் கவனிக்கும் போதெல்லாம் பணம் வேண்டுமளவு கிடைத்த போதிலும் அந்தத் தனி மரியாதை தனக்குக் கிடைக்கவில்லையே என்ற பொறாமையில் ஜெயக்குமார் வெந்தார்.

சத்யமூர்த்தி ரிட்டையரான இறுதி நாள் மாலை நடந்த பிரிவுபசார விருந்தில் அவர்களது திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நேரில் வந்து கலந்து கொண்டு சிறப்பித்ததும் அல்லாமல் அவரை வழியனுப்பி விட்டு மற்றவர்களிடம் சொன்னார் “தங்கமான மனுசன். இந்த மாதிரி ஆளைப் பார்க்கிறது கஷ்டம்”.

ஒரு மனிதனின் பின்னால் கிடைக்கும் பாராட்டு தான் உண்மையான பாராட்டு என்பதை உணர்ந்திருந்த ஜெயக்குமார் அன்று உள்ளூரப் பொருமினார்.

சத்யமூர்த்தி ரிட்டையரான அடுத்தமாதம் ஜெயக்குமார் ரிட்டை ஆனார். பின்னர் சொந்தமாய் ஒரு பிசினஸ் ஆரம்பித்து வெற்றிகரமாக வாழ்ந்த அவருக்கு ஏனோ அப்போதும் சத்யமூர்த்தியை அலட்சியப்படுத்த முடியவில்லை. ஒவ்வொன்றிலும் அவ்வப்போது தன்னையும் சத்யமூர்த்தியையும் ஒப்பிட்டுக் கொள்ளாமல்

அவருக்கு இருக்க முடியவில்லை. ஒப்பிடும் போதெல்லாம் தான் சேர்த்து வைத்திருந்த சொத்துகளை கணக்கிடுகையில் தானே வெற்றி யாளன் என்றும்,சத்யமூர்த்தி முட்டாள் என்றும் ஜெயக்குமாருக் குத் தோன்றும். ஆனால் சத்யமூர்த்தியோ கடைசி வரை அதை உணர்ந்ததாகவே தெரியவில்லை. அதை எப்படியாவது அவ ருக்கு உணர்த்தி, அவர் முகத்தில் தெரியும் பெருமிதம் கலந்த நிறைவை விலக்கி விட வேண்டும் என்று பல முறை ஜெயக்கு மாருக்குத் தோன்றி இருக்கிறது.

இன்று பஸ் ஸ்டாப்பில் கூட்டத்தோடு கூட்டமாக பஸ்ஸிற்காக காத்து நிற்கும் சத்யமூர்த்தியைப் பார்க்கும் போது அந்த எண்ணம் வலுப்பட அவர் தன் விலையுயர்ந்த காரைப் பின்னோக்கி செலுத்தி கிட்ட நெருங்கி அழைத்தார்.

சத்யமூர்த்தி அவரைப் பார்த்து சந்தோஷப்பட்டது போல் தெரிந்தது. காரை நெருங்கியவர் கேட்டார், சௌக்கியமா?

"ஏதோ இருக்கேன். நீங்க எங்கே போக இங்கே நிக்கறீங்க"

"வீட்டுக்குப் போகத்தான். 91 ஆம் நம்பர் பஸ்ஸுக்காக நிற்கறேன். "நானும் என் வீட்டுக்குத் தான் போய்கிட்டிருக்கேன். நீங்களும் வாங்களேன். பார்த்து பேசி பல காலம் ஆயிடுச்சு"

"இல்லை.... 91 இப்ப வந்துடும்"

"பக்கத்தில் தான் என் புதிய வீடிருக்கு. வந்து ஒரு அரைமணி நேரம் இருந்துட்டு போங்க. பிறகு நானே உங்களை வீட்டில் ட்ராப் செய்து விடறேன்"

சத்யமூர்த்தி தயங்கினார். ஜெயக்குமார் கட்டாயப்படுத்தி சம்மதிக்க வைத்து காரில் அவரை ஏற்றினார். வெளியே கடுமையான வெயில் இருந்ததால் அந்தக் காரில் ஏறி அமர்ந்த சத்யமூர்த்தி காரினுள் இருந்த ஏ.சி காற்றை நிஜமாகவே ரசித்தார்.

போகும் வழியில் தங்களுடன் வேலை பார்த்தவர்களைப் பற்றி ஒருவரை ஒருவர் விசாரித்துக் கொண்டார்கள். பெரிய பங்களா போல் இருந்த தன் வீட்டின் முன் காரை நிறுத்தி இறங்கிய போது சத்யமூர்த்தி முகபாவத்தை ஜெயக்குமார் உற்றுப் பார்த்தார். சொந்தமாய் இரண்டு பெட்ரூம் ஃப்ளாட் மட்டுமே வைத்திருக்கும் சத்யமூர்த்தி முகத்தில் எந்த மாற்றமும் தெரியவில்லை.

ஜெயக்குமார் அவரை உள்ளே அழைத்துக் கொண்டு போனார். வீட்டில் அவர் மனைவி இருக்கவில்லை. "அவளும் என் மூத்த மகனும் ஒரு கல்யாணத்திற்கு பெங்களூர் போயிருக்காங்க. காலை பிளைட்ல தான் போனாங்க சின்னவன் இப்ப யூ எஸ்ல எம்.பி.ஏ செய்துகிட்டிருக்கான்" என்று தெரிவித்தார். சத்யமூர்த்தி அப்படியா என்பது போல கேட்டுக் கொண்டார்.

"என்ன சாப்பிடறீங்க? டீ, ஜூஸ்?"

"ஜூஸே கொடுங்க"

ஒரு பெரிய கண்ணாடி தம்ளரில் ஜூஸும் பெரிய வெள்ளித் தட்டில் முந்திரி பாதாம்களையும் கொண்டு வந்து தந்து விட்டு ஜெயக்குமார் ஏ.சியை ஒன் செய்தார். "இப்பவெல்லாம் ஏ.சி இல்லாமல் இருக்கவே முடியறதில்லை"

"போன வருஷம் தான் பத்து லட்சம் செலவு செய்து வீட்டை-ரெனவேட் செய்தேன். வாங்க வீட்டை சுத்திப் பார்க்கலாம்" என்று சொல்லிய ஜெயக்குமார் சத்யமூர்த்திக்குத் தன் பங்களாவை சுற்றிக் காண்பித்தார்.

சினிமாவில் காண்பிக்கப்படுவதுபோல இருந்தது அவர் பங்களா. ஒவ்வொரு அழகான வேலைப்பாடும் பணம் பணம் என்றது. ஒவ்வொன்றையும் சத்யமூர்த்தி ரசித்தாலும் அவர் முகத்தில் பொறாமை தெரியாததும் இப்போதும் தான் இழந்ததெல்லாம் என்ன என்று உணராததும் ஜெயக்குமாருக்கு என்னவோ போலிருந்தது. பிறகு ஜெயக்குமார் சத்யமூர்த்தியைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார். "இப்ப உங்க மகன் என்ன செய்யறான்?"

"அவன் சி ஏ முடிச்சுட்டான். தனியா ஆடிட்டிங் ப்ராக்டிஸ் செய்யறான்."

"நீங்க என்ன செய்யறீங்க? எங்கேயாவது வேலைக்குப் போறீங்களா?"

"பையன் வேண்டாம்கிறான். இத்தனை நாள் எங்களுக்காக உழைச்சது போதும், இனி சும்மா இருங்கன்னு சொல்றான்"

ஜெயக்குமாருக்கு சுருக்கென்றது. அந்த வார்த்தை அவர் குடும்பத்தினரிடமிருந்து இது வரை வந்ததில்லை.

"...ஆனா எனக்கு சும்மா இருக்க முடியலை. இது நாள் வரைக்கும் குடும்பத்தைத் தவிர வேற யாருக்கும் எதுவும் செய்யாமல் இருந்துட்டேன். இனியாவது நாலு பேருக்காவது உபகாரமாய் இருக்கணும், ஏதாவது செய்யணும்னு இப்ப ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமா டியூசன் எடுக்கறேன்..."

சத்யமூர்த்தி உற்சாகமாக அந்த ஏழை மாணவ மாணவிகளின் முன்னேற்றத்தைப் பற்றி சொல்லிக் கொண்டே போனார். அவர் சொல்லிக் கொடுத்த ஒரு ஏழை மாணவன் சென்ற வருடம் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநிலத்தில் மூன்றாவதாய் வந்ததைச் சொல்கிற போது அவர் குரலில் தெரிந்த பெருமிதம் ஒரு தந்தையினுடையதாக இருந்தது.

ஒரு சிறு இடைவெளி கிடைத்த போது ஜெயக்குமார் கேட்டார், "உங்க ஸ்கூட்டர் என்னாச்சு"

"அது ஆறு மாசம் முன்னாடி ரிப்பேர் ஆயிடுச்சு. மெக்கானிக் கிட்ட போனா அவன் இதை சரி செய்ய இதுல எதுவுமே உருப்படியாய் இல்லைன்னு சொல்றான். இவ்வளவு வருஷமா இதை உபயோகிக்கறீங்கன்னு அந்த ஸ்கூட்டர் கம்பெனிக்கு தெரிவிச்சா அவங்க உங்களைக் கூப்பிட்டு கவுரவிச்சாலும் கவுரவிக்கலாம்னு சொல்றான்." என்று சொல்லி விட்டு சத்யமூர்த்தி கலகலவென்று சிரித்தார். அதை மறைக்காமல் சிரித்துக் கொண்டே சொன்னது ஜெயக்குமாருக்கு ஒரு மாதிரியாக இருந்தது. "ஏன் நீங்க ஒரு கார் வாங்கலாமே"

"என் மகன் எனக்கு ஒரு கார் வாங்கித் தரணும்னு ரொம்ப நாளா சொல்லிகிட்டே இருந்தான். நான் அவன் கிட்டே சொன்னேன். "எனக்கு கார் வேண்டாம்டா. இந்த வயசுக்கு மேல நான் கார்ல எங்கே போகப் போகிறேன். ஸ்டேட் ரேங்க வாங்கின அந்த ஏழைப் பையனைப் படிக்க வைக்க அவன் அப்பாவுக்கு பணமில்லை. பாவம் கூலி வேலை செய்யறவர் அவர். எனக்கு கார் வாங்க செலவு செய்யற பணத்துல அந்தப் பையன் படிக்க உதவி செய். அது போதும்முன்னேன்... இப்ப அந்தப் பையன் என் மகன் உதவியால படிக்கிறான். நல்லாவே படிக்கிறான்"


சொல்லிக் கொண்டே போன சத்யமூர்த்தியின் முகத்தில் தெரிந்த நிறைவான மகிழ்ச்சியை ஜெயக்குமாரால் ரசிக்க முடியவில்லை. பேச்சை அதிகமாக வளர்க்காமல் சீக்கிரமாகவே அவரை அவர் வீட்டில் கொண்டு போய் விட்டார். சத்யமூர்த்தி தன் வீட்டுக்குள்ளே வர அவரை அழைத்தார்.

"நேரமாயிடுச்சு. இன்னொரு நாள் வர்றேன்" என்று அவசரமாக அங்கிருந்து ஜெயக்குமார் கிளம்பிய போது அவர் மனதில் ஒரு இனம் புரியாத வெறுமை நிறைந்திருந்தது. சத்யமூர்த்தியிடம் வலியப் போய் பேசாமல் இருந்திருக்கலாம் என்று தோன்ற ஆரம்பித்தது....


புத்தம் புதிய டிசைன்களில்
NAIDU MAH
www.n
SPECIALIST IN
Wedding &
Home Coming Saree,
Shalwar,
Gents & Kidswear
No. 52, W.A. Silva Mawatha,
Colombo-06
Tel: 011 2588664, Email: naidumahaal@yahoo.c


நவநாகரிக ஆடைகளுக்கு
AAL
aidumahaal.lk
om

# வெற்றிகளை நிகழ்த்துவது எது?



பல வருடங்களுக்கு முன் அமெரிக்காவில் உள்ள ஜான் ஹாப் கின்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் மாணவர் குழு ஒன்றை ஏற் படுத்தி அந்தக் குழுவிடம் வித்தியாச மான ஒரு ஆராய்ச்சிப் பணியை ஒப் படைத்திருந்தார். "பின் தங்கிய குடிசைப் பகுதி ஒன்றிற்குச் செல்லுங்கள். 12 வயது முதல் 16 வயது வரை உள்ள 200 சிறுவர் களைத் தேர்ந்தெடுங்கள். அவர்களைப் பற்றிய முழு விவரங்களைச் சேகரியுங்கள். பின் அவர்களுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்று உங்கள் அனுமானத்தைச் சொல்லுங்கள்" என்று அவர்களிடம் சொன் னார்.

அந்த மாணவர்கள் குழு மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள குடிசைப் பகுதி யைத் தேர்ந்தெடுத்து அங்கு சென்றது. அந்த மாணவர்கள் அங்குள்ள 12 முதல் 16 வயது டைய ஒவ்வொரு இளம் வயதினரிடமும் நீண்ட நேரம் பேசினார்கள், கேள்விகள் கேட்டார்கள். தாங்கள் பேச்சின் மூலம் அறிந்து கொண்டதை யும் பேசாமலேயே கவனித்து அறிந்து கொண்ட தையும் வைத்து அந்த ஆராய்ச்சி மாணவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். "இந்த சிறுவர்களில் 90 சதவீதம் பேர் எதிர்காலத்தில் சிறிது சமயமா வது சிறைச்சாலையில் கழிப்பார்கள்".

அந்த முடிவுக்கு அவர்கள் வரக் காரணமாக இருந்தது அந்த சிறுவர்களின் மனப் போக்கில் அவர்கள் சில தீய பண்புகள், தீய ஆர்வங் கள், சமூகப் பொறுப்பற்ற தன்மை போன்ற வற்றைக் கண்டது தான்.

அந்த மாணவர் குழு சமர்ப்பித்த தக வல்களையும், அந்த தகவல்களை அடிப் படையாக வைத்து அவர்கள் வந்த முடிவையும் பத்திரமாகப் பாதுகாத்த அந்த பேராசிரியர் பல வருடங்கள் கழித்து அந்தக் குடிசைப் பகுதியில் உள்ள சிறுவர்கள் பெரியவர்களாக ஆன பின்னர் மீண்டும் வேறொரு மாணவர் குழுவை அதே பகுதிக்கு

அனுப்பினார். "இந்த 200 பேரும் தற்போது எப்படி இருக்கிறார்கள், அதில் எத்தனை பேர் முந்தைய குழு எண்ணியது போல் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து வாருங்கள்"

அந்த வேலை இரண்டாவதாகப் போன குழுவிற்கு சுலபமானதாக இருக்கவில்லை. அந்த 200 பேரில் சிலர் இடம் பெயர்ந்திருந்தார்கள். சிலர் இறந்திருந்தார்கள். இடம் பெயர்ந்தவர்களில் சிலரது தற்போதைய விலாசம் கிடைக்கவில்லை. ஆனாலும் இரண்டாவது மாணவர் குழுவின் விடாமுயற்சியால் 200 பேரில் 180 பேரை தொடர்பு கொள்ள முடிந்தது. அவர்களில் நான்கு பேர் மட்டுமே சிறைக்குச் சென்றிருந்தார்கள்.

பேராசிரியருக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்ட மாணவர் குழுவிற்கும் அந்தத் தகவல் பெருத்த ஆச்சரியத்தை அளித்தது. முதல் குழுவின் கருத்து எந்தத் தகவல்களின் அடிப்படையில் எழுந்ததோ அந்தத் தகவல்களை மீண்டும் ஒரு முறை சரி பார்த்தனர். அன்றைய அனுமானம் இன்றைக்கும் அறிவு சார்ந்ததாகவே இருந்தது. குற்றம் புரியத் தேவையான மனநிலைகளிலும், சூழ்நிலைகளிலும் தான் அன்று அந்த சிறுவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அப்படியானால் இப்படி இந்த 176 பேரும் சிறைக்குச் செல்லாமல் இருக்கக் காரணம் என்ன என்ற மிகப் பெரிய கேள்வி எழுந்தது.



மீண்டும் சென்று சிறைக்குச் செல்லாமல் நல்ல முறையில் வாழ்ந்து கொண்டிருந்த அந்த 176 நபர்களிடமும் அவர்கள் பேட்டி எடுத்தார்கள். அவர்கள் போகவிருந்த அழிவுப்பாதையில் இருந்து அவர்களைக் காத்தது என்ன என்ற கேள்வியைப் பிரதானமாக வைத்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் ஒரு பதிலையே சொன்னார்கள். "எங்கள் பள்ளிக்கு ஒரு புதிய ஆசிரியை வந்தார்...."

உடனே பெரும்பாலானோர் சொன்ன அந்த ஆசிரியையைத் தேடி ஆராய்ச்சியாளர்கள் சென்றனர். இத்தனை பேர் வாழ்க்கையை மாற்றி அமைத்த அந்த ஆசிரியை எந்த வழிமுறையைப் பின்பற்றினார் என்பதை அறிய அவர்களுக்கு ஆவலாக இருந்தது.

அந்த ஆசிரியை தற்போது ஆசிரியைப் பணியில் இருந்து ஓய்வு பெற்றிருந்தார். அவரிடம் அவர்கள் சரமாரியாகக் கேள்வி கேட்டார்கள். "உங்களுடைய அந்தப் பள்ளி மாணவர்களில் பெரும்பாலானோர் உங்களை இன்றும் நினைவு வைத்திருக்கிறார்கள். அதன் காரணம் என்ன?" "அவர்கள் உங்களுடைய தாக்கத்தால் நிறையவே மாறி இருக்கிறார்கள். நீங்கள் அவர்களுக்கு கல்வி புகட்டிய முறை என்ன?"

அந்த முதிய ஆசிரியைக்கு குறிப்பிடும்படியாக எதையும் சொல்லத் தெரியவில்லை. ஒரு நீண்ட பதிலை எதிர்பார்த்துச் சென்றவர்களுக்கு ஒரே ஏமாற்றம். அந்த ஆசிரியை தன் பழைய நாட்களின் நினைவுகளில் மூழ்கினார். வந்தவர்களுக்குச் சொல்வது போலவும், தனக்குள்ளேயே பேசிக்கொள்வது போலவும் அவர் மிகவும் கனிவுடன் சொன்னார். "அந்தக் குழந்தைகளை நான் நிறையவே நேசித்தேன்..."

பெரிய பெரிய சித்தாந்தங்களையும், வித்தியாசமான கல்வி நுணுக்கங்களையும் எதிர்பார்த்து வந்தவர்கள் அந்த தகவலில் மெய்சிலிர்த்துப் போனார்கள். இதிலிருந்து என்ன நாம் தெரிந்து கொண்டது என்ன? எல்லா சீர்திருத்தங்களுக்கும் அன்பே மூலாதாரம். அன்பினால் மட்டுமே முழுமையான, உண்மையான மாற்றங்களைக் கொண்டு வருவது சாத்தியம்.

சட்டங்களாலும், கண்டிப்புகளாலும், தண்டனைகளாலும் எந்த மிகப்பெரிய மாற்றத்தையும் உலகில் கொண்டு வரமுடிந்ததில்லை. இதுவே வரலாறும் கூட. மாற்றம் எங்கு வரவேண்டும் என்று நினைத்தாலும் அங்கு அன்பு செலுத்துவதில் இருந்து ஆரம்பியுங்கள். அந்த அன்பு சுயநலம் இல்லாததாக இருக்கும் பட்சத்தில், அந்த அன்பு குறுகியதாக இல்லாத பட்சத்தில் அற்புதங்கள் நிகழ்த்த வல்லது. ■

**ஆக்கம்: என்கே**

# இசையோடு நான்

தினமகுடியின் கலைஞர் சந்திப்பில் இம்மாத இதழை அலங்கரிப்பவர் காதல் பிசாசே திரைப்படத்தின் இசையமைப்பாளர் பிருந்தன்.

**தங்களைப் பற்றி-** நான் யாழ்ப்பாணம் உடுவிலை சொந்த இடமாக கொண்டவன். தற்போது இசையமைப்பு பணிக்காக இந்தியாவில் இருக்கிறேன். எனது தாத்தா இசைப்புலவர் என்.சண்முகரெட்ணம், அப்பா கலாசூடாமணி சண்முகராகவன் கர்நாடக சங்கீத வித்துவான். தம்பி ஸ்ரீ விஜயன் தென்னிந்திய இசையமைப்பாளர் (தா திரைப்படம்) ஜெயா ராகவன் பாடகர்- தங்கைசாந்தினி கிஷோன் பாடகி (தா-திரைப்படம்)மனைவி கௌரி, பிள்ளைகள் ஹரிநிகேஷ் ஹரிநிஷா தெஹிவளையில் வசித்து வருகின்றனர்.

**இசையில் உங்களின் பங்களிப்பு** -2004 ஆம் ஆண்டு சுனாமி அவலத்தை குறித்து நான் பாடிய பாடல் கடலம்மா கடலம்மா இதற்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரமும் பாராட்டும் கிடைத்தது-2008 ஆம் ஆண்டு சிங்கள மொழியில் முதல் பாடல் ஒன்றையும் வெளியிட்டுள்ளேன். ஜேர்மனியில் இரண்டு இசை நிகழ்ச்சி செய்துள்ளேன். இந்தியாவில் புதுக் கோட்டை தமிழ் வித்தியாலய பாடசாலை கீதத்திற்கு இசையமைத்துள்ளேன்.

**இசைத்துறைக்கு தங்களின் பிரவேசம் பற்றி-** இசைக்குடும்பம் தான் ஆனால் எனக்கு பெரிதாக நாட்டம் இல்லை பொழுதுபோக்காக நண்பர்களின் தூண்டுதலினால் இசைத்தொகுப்பு ஒன்று வெளியிடவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. எனது முதலாவது இசைத்தொகுப்பு **துளிகள** என்ற பெயரில் வெளிவந்தது. இத்தொகுப்பில் 12பாடல்களில் "ஒரு பொய் சொல்லாயோ நீ" "இனி எங்கள் பூமியில் யுத்தமில்லை" பாடல்கள் மிகவும் பரபலமானது.

2ஆவது தொகுப்பு **நதியே** அதிலும் 12பாடல்கள் தான் எதிர்பார்த்த வெற்றியையும் வரவேற்பையும் பெற்று தந்தது. அதே வருடத்தில் 3ஆவது தொகுப்பு **நட்சத்திரா** 2009 ஆம் ஆண்டு இலங்கை கலைஞர்களின் பங்களிப்புடன் வந்தது. 4ஆவது தொகுப்பு **அஞ்சனா** லண்டனில் உள்ள நண்பன் ராகவன தயாரிப்பில் உருவானது. 11பாடல் அடங்கிய தொகுப்பு 5ஆவது **மண்ணிப்பாய** முழுக்க வித்தியாச மான முயற்சியாய் மகாராஜ வெளியீடாக வரவி ருக்கிறது.

**இங்கிருந்து இந்தியாவுக்கு சென்று இசையமைத்த அனுபவங்கள் பற்றி-**

எனது கனவு எப்படியாவது ஒரு சினிமாப்படத்திற்கு இசையமைக்க வேண்டும் என்பதுதான் அது போலவே முதல் முறையாக சினிமாவில் வாய்ப்பு தந்தவர் அரவிந்தன். அவர் முன்பணம் தந்தவுடன் சொன்ன வார்த்தை பாடல் வரி களுக்கு இசையமையுங்கள் என்றுதான் சொன்னார். பாடல் வரிகளுக்குத்தான் இசையமைத்தேன். உங்களில் யார் இவன்-சுவாசமாய் சுவாசமாய்-யுத்தங்கள் செய்யாதே, பெண் பூவே, எங்கிருந்தோ இங்கு பிறந்தோம் போன்ற பாடல்களை பிரபலமான பாடகர்களை வைத்துதான் ஹரிஸ்ராகவேந்திரா, முகேஷ், ஹரிச்சரன், கவிதா ஜெயராம் Recording பதிவு செய்தோம். இசைவெளியீடும் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. அதன் பிறகு நிறைய வாய்ப்புகள் வந்தன. இருந்தும் நான் சில காரணங்களினால் ஏற்றுக்கொள்ளவில்லை ஓரிருபடங் களுக்கு இசையமைத்து கொண்டிருக்கிறேன். மிகவிரைவில் அவை வெளிவரவிருக்கின்றன.

**இந்தியாவில் படத்துக்கு இசையமைத்தபோது வர வேற்பு எவ்வாறு இருந்தது-**

எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது இலங்கை இசையமைப்பாளனுக்கு இவ்வளவு வரவேற்பா! எல் லோரும் பாராட்டினார்கள் வரவேற்றார்கள் சிறப்பாக என்னை பாராட்டியதோடு தகுந்த ஆலோசனை, ஊக்குவிப்பு தந்தார்கள் இதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர் இயக்குநர் A. வெங்கடேஷ் அவர்கள் மிகவிரைவில் அவரோடு இணைந்து படத்துக்கு இசையமைக்க இருக்கிறேன்.


**இசைத்துறைக்கு வராவிட்டால் நீங்கள் தெரிவுசெய்திருக்கும் துறை**



**எது?**

இசைத்துறைக்கு வராவிட்டால் வர்த்தகம் தான் வெளிநாடு வாய்ப்பு வந்தும் நான் போக வில்லை காரணம் எங்கு சென்றாலும் பணம் சேர்க்கலாம் ஆனால் மனநிம்மதி கிடைக்காது எமக்கு பிடித்த துறையாயினும் வேலையாயினும் செய்யும் போது பணம் குறைவாக இருந்தாலும் மனம் திருப்தியடை-கிறது. இசைதான் எனது வாழ்வு.

**தற்போது பாடலை விட இசைதானே அதிகம் பங்களிப்பு செய்கிறது இதுகுறித்து உங்கள் கருத்து-** உண்மைதான் அப்போதைய படங்களில் பாடல்கள் தரமாய் இருந்தன. பாடலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் தற்போது எல்லாமே மாறியுள்ளது உதாரணம் **வை திஸ் கொலை வெறி** இதுபோன்ற இன்னும் பல பாடல்கள் உள்ளன பொருள் புரிவதில்லை ஆங்கில வார்த்தைகள் இரட்டை அர்த்தங்கள் இவற்றைத்தானே மக்களும் ரசிக்கிறார்கள் வரவேற்கிறார்கள் அவர்களின் ரசினையை பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது.அப்போது தானே வெற்றி பெற முடியும்.



**பாடல் ஒன்று இசையமைப்பதற்கு தேவையான நாட்கள் மற்றும் இசைக் கருவிகள் பற்றி-**

மெட்டு மட்டும் என்றால் 2மணித்தியாலங்கள். பாடல் 2நாட்கள் போதுமானது இசையமைக்கவெனும் போது அன்றைய காலகட்டத்தில் நிறையவே இசைக்கருவிகளும் இசைக்கலைஞர்களும் தேவை தற்போதைய சூழலில் கணனியின் உதவியுடன் ஓரிரு இசைக்கருவிகளோடு இசையமைத்துவிடுகிறார்கள் எல்லாம் கலியுக வளர்ச்சி தானே.

**இலங்கையின் இசை மற்றும் இசையமைப்பாளர்களின் நிலை-**

இலங்கைத் தமிழ் இசைத்துறை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இலங்கை இசைக்கு சர்வதேச அங்கீகாரம் வேண்டும். இசைக்கலைஞர்கள் எனும் போது நிறையப்பேர் உள்ளனர் தங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்துகின்றனர். குறும்படம் இசையல்பம்கள் போன்றவற்றிலும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களின் பங்களிப்பு அதிகம் எனலாம்.பெரிய அளவில் பிரகாசிக்க அவர்களுக்கான வாய்ப்பு அமையுமானால் சர்வதேச ரீதியில் இலங்கை தமிழிசை அங்கீகாரம் பெறுவது நிச்சயம்.

**தினமகுடி இதழ் பற்றி தங்களின் கருத்து-**

தினமகுடி சஞ்சிகையானது வண்ணமயமாகவும் நல்ல பிரயோசனமான அம்சங்களையும் சுவராஸ்சியமான விடயங்கள் பலவற்றை கொண்டு வித்தியாசமான பல்சுவையிதழாகவெளிவருகிறது. இப்பணியை நிச்சயம் பாராட்ட வேண்டும் தினமகுடி தொடர்ந்து பல படிகளைத் தாண்டி வெளி-வரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**சந்திப்பு–வை.கஜேந்திரன்**



# சருமத்தைப் பாதுகாக்க

தேங்காய் உடலுக்கு மட்டும் ஆரோக்கியத்தை தரவில்லை, சருமத்திற்கும் பல நன்மைகளை தருகிறது.அதுமட்டுமல்லாமல் இந்த தேங்காயிலிருந்து தேங்காய் எண்ணெய் ஆகவும் அதற்கு முன் உடல் ஆரோக்கியத்திற்கு இளநீராகவும் மற்றும் இதன் ஓடு சமைப்பதற்கு உதவுகி றது.

**சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்க**

ஒரு டேபிள் ஸ்பூன் தேங்காய் எண்ணெய் அல்லது தேங்காய் கூழ் எடுத்துக் கொண்டு, அதில் சிறிது பேக்கிங் சோடாவை கலந்து, முகம், கை மற்றும் கால்களுக்கு 2-3 நிமிடம் ஸ்கரப் செய்து,பின் அதனை வெதுவெதுப்பான நீரால் கழுவி விட வேண்டும். இது சருமத்திற்கு ஏற்ற ஒரு சிறந்த ஸ்கரப். இதனால் சருமத்தில் இருக்கும் இறந்த செல்கள் நீங்குவதோடு, சருமத்தின் நிறமும் சற்று கூடும்.

மற்றொரு முறை தேங்காய் தண்ணீரை வைத்து செய்வது. அதில் 1 டேபிள் ஸ்பூன் தேங்காய் நீர் மற்றும் ஏதேனும் பருப்பு பேஸ்ட் எடுத்து கலந்து கொண்டு,சருமத்திற்கு 1-2 நிமிடம் தேய்த்து, பின்னர் கழுவ வேண்டும். இதனால் சருமத்திற்கு தேவையான நீர் சத்து கிடைப்பதோடு, அழகும் அதிகரிக்கும்.

தேங்காயை சிறிது ஒப்ரிக்காட் பழத்துடன் அரைத்து, முகத்திற்கு ஃபேசி யல் ஸ்கரப் செய்ய வேண்டும். இதனால் முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் நீங்குவதோடு, சருமமும் சற்று இறுக்கமடைந்து இளமை தோற்றத்தை தரும்.

**சருமத்தை ஈரப்பதத்துடன் வைக்க**

தேங்காய் சருமத்திற்கு அதிக சக்தியை தரக்கூடியது.. தினமும் படுக்கும் முன் சிறிது தேங்காய் நீரை சருமத்திற்கு தடவி, பின்னர் படுக்க வேண்டும். இதனால் முகத்தில் இருக்கும் அனைத்து புள்ளிகளும் நீங்கி,சருமமும் ஈரப்பசையுடன் இருக்கும்.

தேங்காய் நீருடன் சிறிது எலுமிச்சை சாற்றை விட்டு, பின் சருமம் முழுவதும் தடவி, ஊற வைத்து பின் கழுவ வேண்டும். இதனால் சருமம் எண்ணெய் பசையுடன் காணப்படுவ தோடு,பளபளப்பாக மின்னவும் செய்யும்.

தினமும் குளித்த பின்னர், தேங்காய் பாலை வைத்து முகத்தினை கழுவி 10-15 நிமிடம் ஊற வைத்து பின்னர் சுத்தமான நீரால் கழுவ வேண்டும். ஆகவே முகம் நன்கு பொலி-வோடு இருப்பதோடு, சற்று சருமத்தின் நிறம் அதிகரித்தும் காணப்படும்.

**முகப்பரு நீங்க**

முகப்பரு விரைவில் போவதற்கு, ஈஸியான வழி இருக்கிறது. அதற்கு தொடர்ந்து இரவில் படுக்கும் முன் தேங்காய் நீரை முகத்திற்கு தடவி பிறகு தூங்க வேண்டும். இதனை ஒரு வாரத்திற்கு தொடர்ந்து செய்தால், முகப்பரு நீங்கி சருமம் மென்மையாகவும், சருமத்துளைகள் நீங்கியும் காணப்படும்.

இல்லையென்றால் தேங்காயின் கூழ் மற்றும் எலுமிச்சை சாற்றை கலந்து ஒரு ஃபேஸ் பேக் போன்று,வாரத்திற்கு ஒரு முறை செய்யலாம்.





**மேடம்** ஒக்.15– நவ.15

இம்மாதத்தில் காலையில் எழுந்ததிலிருந்து அன்றாட வேலைகளைச் செய்து முடிப்பதில் மிகுந்த அவசரம் காட்டுவீர்கள். அதனால் சில தவறுகள் ஏற்பட்டு உங்களைத் தடுமாற வைக்கும். இம்மாதத்தைப் பொறுத்தவரை தாங்கள் அவசியம் நிதானத்தை கடைபிடித்தே தீர வேண்டும்.




# நிம லராஜன் படுகொலை

1951 - ஒக்டோபர் 15 ஆம் திகதி மெக்சிக்கோவின் லூயி மிரமோண்டெஸ் முதற்தடவையாக கருத்தடை மாத்திரையை அறிமுகப்படுத்தினார்.

1997 - இதே தினத்தில் நாசாவின் ஹியூஜென்ஸ் விண்ணுளவி சனி கோளை நோக்கி ஏவப்பட்டது.

1964 - ஒக்டோபர் 16 ஆம் திகதி- மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை மேற் கொண்டது.

2006 - இதே தினத்தில் இலங்கையில் 1987 இல் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதி மன்றம் அறிவித்தது.

1979 - ஒக்டோபர் 17 ஆம் திகதி அன்னை தெரேசா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

1995 - .இதே தினத்தில் யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்ற இலங்கை இராணுவம் ரிவி-ரெச நடவடிக்கையை ஆரம்பித்தது.

1922 - ஒக்டோபர் 18 ஆம் திகதி பி.பி.சி வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

.1991 - இதே தினத்தில் அசர்பைஜான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்து விலகியது.

1944 - ஒக்டோபர் 19 ஆம் திகதி இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்ஸில் தரையிறங்கின.

2000 - இதே தினத்தில் பிரபல செய்தியாளர் நிம லராஜன் படுகொலை செய்யப்பட்டார்.

1982 - ஒக்டோபர் 20 ஆம் திகதி இலங்கையில் முதன் முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

1917 - ஒக்டோபர் 23 ஆம் லெனின் அக்டோபர் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்.


2006 - இதே தினத்தில் இலங்கை சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1964 - ஒக்டோபர் 30 ஆம் இலங்கையின் மலையகத் தமிழர்களை நாடு கடத்த உதவிய சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.



# இது தேவையா ?

உலகில் மிகப் பயங்கரமான நீச்சல் தடாகம் இது. இங்கு சுமார் 128 அடி ஆளமான நீர்வீழ்ச்சி உள்ளது. சிம்பாப்வே நாட்டிலுள்ள இத்தாடகம் “டெவில்ஸ் பூல்” என அழைக்கப்படுகிறது. நீர்வீழ்ச்சியின் உச்சியிலுள்ள இதில் நீராடுவதற்கு ஆபத்தையும் பொருட்படுத்தாமல் குடும்பம் குடும்பமாக வருவோரை பாருங்களே




# 3000 வருடங்களுக்கு முற்பட்ட நீர்தேக்கம்


ஜெருசேலத்தில் தொல்பொருள் ஆய்வாளர்கள் 3000 வருடங்களுக்கு முற்பட்ட நீர்தேக்கத்தையும் நிலக்கீழ் சுரங்கத்தையும் கண்டு பிடித்துள்ளனர். இந்த நீர்த்தேக் கத்தில் 66, கலன்கள் நீரை தேக்கி வைக்க முடியும். ஜெருசலத்தில் அக்காலத்தில் காணப்பட்ட நகரங்களுக்கு இதன் மூலமே நீர்விநியோகம் செய்யப்பட்டது. ஆம் நூன்றாண்டில் வாழ்ந்த அரசன் சாலமன் Solomon இனால் நிர்மா ணிக் கப்பட்ட இந்த நீர்த்தேக்கம் 400 வருடங்களுக்கு பின்னர் உடைக்கப் பட்டதாக சான்றுகள் கூறுகின்றன!

ஜெருசேலத்தில் புனித பிரதேசமாக காணப்படும் இப்பகுதியில் மேலும் ஆய்வுகளை மேற்கொள்ளும் போது புராதன விடயங்கள் வெளி-வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

# அழகுதரும் நகங்கள்







நகங்கள் கைகளின் அழகில் மட்டுமின்றி உடல் ஆரோக்கியத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே அவற்றை பராமரிப்பது மிக வும் அவசியம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அகத்தின் அழகை பிரதிபலிப்பதில் நகத்துக்கும் பங்கு உண்டு. உடல் உள்ளுறுப்புகளில் ஏதாவது பாதிப்பு இருந்தால் நகம் அதை வெளிக் காட்டி விடும். எனவே நகங்கள் பாதிக்கப்பட்டால், அலட்சியப்படுத்தாமல் உடனே மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும்.

நகங்களை முறையாக பராம ரிக்க உணவு சாப்பிடும் முன்பு கைகளை நன்கு கழுவ வேண்டும். பெண்கள் பாத்திரம் தேய்த்த பின்பு கைகளை சுத்தமாக கழுவ வேண்டும். பாத்திரம் தேய்க்க பயன்படுத்தும் ரசாயனங்கள் நகக்கணுககளில் தங்கிவிட்டால் நகங்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

அதேபோல் மலம் கழித்த பின்னரும் சோப்பு போட்டு கைகளை நன்றாக கழுவ வேண்டும். குழந்தை பருவம் முதலே இத்தகைய பழக்கங்களை வாடிக்கையாக்க வேண்டும். சர்க்கரை நோயாளிகள் நக பராமரிப்பில் தனிகவனம் செலுத்துவது அவசியம். கை நகங்களை போலவே கால் நகங்களையும் முறையாக பராமரிக்க வேண்டும். பெரும்பாலான நோய்தொற்றுகளுக்கு நகமே முக்கிய காரணமாக உள்ளது.

பெடிக்யூர், மெனிக்யூர் என நகங்களை பராமரிக்க பிரத்யேக பராமரிப்பு முறைகளும் சாதனங்களும் உள்ளன. இதற்கென அழகு நிலையங்கள் இருந்தாலும் வீட்டிலேயே செய்து கொள்வதும் எளிது. வாரத்தில் 2 அல்லது 3 முறை இந்த பராமரிப்பு முறையை செய்து கொள்ளலாம்.

நகங்களில் அடிபட்டாலோ, சொத்தை, நகச்சுற்று போன்ற பாதிப்புகள் இருந்தாலோ மருத்துவ சிகிச்சை பெறுவதே பாதுகாப்பானது. மருத்துவ குணம் கொண்ட மருதாணி இலைகளை அரைத்து கைகளில் இடுவது நகங்களை பாதுகாப்பதோடு, உடலுக்கும் குளிர்ச்சி தரும்.கடைகளில் பொடியாகவும், கூழாகவும் கிடைக்கும் மருதாணியில் மருத்துவ குணம் இருப்பதில்லை. தரமான நெயில் பாலிஷ்களை உபயோகிப்பது நகங்களுக்கு பாதுகாப்பானது.

அடிக்கடி நகக்கணுக்களில் மிருதுவான பிரஷ் அல்லது துணிகளைக் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். நகம் வெட்டும் போது சதைப்பகுதி பாதிக்கப்படாமல் கவனமாக வெட்ட வேண்டும். நகங்கள் சிலருக்கு உடைந்து போகும். இதற்கு கால்சியம் குறை பாடுதான் காரணம். உணவில் அதிகம் கால்சியம் சேர்த்துக் கொள்வதாலும் மருத்துவர் பரிந்துரையின் பேரில் கால்சியம் மாத்திரைகளை எடுத்துக் கொள்வதாலும் இந்த பாதிப்பு சரி யாகும். சர்க்கரை நோயாளிகள் இதில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். காய்கறிகள், பழங்கள் என ஊட்டச்சத் துள்ள சரிவிகித உணவு சாப்பிடுவதன் மூலம் நகங்களை பாது காக்கலாம்.



**இடபம்** **ஒக்.15– நவ.15**

இம்மாதத்தில் புதிய பொருட்களை வாங்குதல், வீட்டில் சிறுசிறு மராமத்து வேலைகள் செய்தல், வாகனத்தைப் பழுது பார்த்தல், பழைய வாகனத்தைக் கொடுத்து விட்டுப் புது வாகனம் வாங்குதல் போன்ற வகையில் பணம் தாராளமாகச் செலவாகும். சில விரையங்களும் ஏற்படலாம்.

# எண்ணங்களே பிரதானம்

அந்த வயதான மனிதர் தனது தோட்டத்தில் உருளைக் கிழங்கு பயிரிட விரும்பினார். அதனை அவரால் செய்யமுடியாத அளவிற்கு அவரது உடல் நிலை ஒத்துழைக்க வில்லை. அவருக்கென்று உதவியாக இருந்த அவரது ஒரே மகனும் சந்தேகத்தின் பேரில் கைதாகி சிறையிலிருந்தான் அந்த வயதான மனிதர் தன் மகனுக்கு ஒரு கடிதம் எழுதினார்:

*அன்புள்ள மகனுக்கு,*

*நான் இந்த வருடம் உருளைக்கிழங்கு தோட்டம் நடமுடியாமல் போனது எனக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. நான் இந்த வருடம் தோட்டம் பயிரிடாதிருப்பது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது ஏனென்றால் உனது அம்மாவிற்கு தோட்டம் பயிரிடுதால் மிகவும் பிரியமாயிருந்தது. எனக்கு மிகவும் வயதான காரணத்தினால் தோட்டத்தை பயிரிட உழவு வேலை செய்யமுடியவில்லை. நீ இங்கு இருந்திருந்தால் என்னுடைய எல்லா பிரச்சினைகளும் தீர்ந்திருக்கும். எனக்கு தெரியும் நீ சிறையிலில்லாமலிருந்தால் எனக்காக தோட்டத்தை உழவு செய்து கொடுத்திருப்பாய்.*

அன்புடன்

அப்பா.


சிறிது நாட்களில் அந்த வயதான மனிதருக்கு ஒரு தகவல்வந்தது உங்கள் தோட்டத்தில் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன எனத் தகவல் கிடைத்துள்ளது எங்கும் போக வேண்டாம் பொலிஸார் வருவர் என்பதே அதுவாகும். ஒரு கணம் ஆடிப்போனார் வயோதிபர்.


அடுத்த நாள் விடிகாலை 4 மணியளவில் பொலிஸார் வீட்டிற்கு வந்தார்கள். பின்னர் அந்தத் தோட்டத்தில் ஆயுதங்களை தேடுவதற்காக எல்லா இடங்களிலும் தோண்டிப் பார்த்தனர். ஆனால் எந்த ஆயுதமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

குழப்பத்திலிருந்த அந்த மனிதர் அடுத்த நாளன்று அவரது மகனிற்கு இன்னொரு கடிதம் எழுதி என்ன நடந்தவற்றை விளக்கினார்

மகனிடம் இருந்து பதில் வந்தது: "நீங்கள் சென்று உருளைக்கிழங்கு தோட்டத்தை அங்கே பயிருடுங்கள் அப்பா, இதுதான் நான் இங்கே இருந்து கொண்டு உங்களுக்கு செய்ய முடிந்த உபகாரம்".என்றிருந்தது.

நீதி : நீங்கள் உலகில் எங்கே இருக்கிறீர்கள் என்பது பெரிதல்ல, ஒன்று செய்ய வேண்டுமென்று உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் நீங்கள் முடிவு செய்து கொண்டால் உங்களால் அதனை செய்ய முடியும். எண்ணங்கள் தான் மிகவும் முக்கியம். நாம் எங்கு இருக்கிறோமோ அல்லது அந்த மனிதர் எங்கு இருக்கின்றார்களோ அது அல்ல.






# மருத்துவ அமிர்தம் பப்பாளி

**தாவரப்பெயர் -: CARICA PAPAYA.**

**தாவரக்குடும்பம் -: CARUCACEAE.**

மருத்துவப் பயன்கள்-: பப்பாளி வயிற்றில் உள்ள புழுக்களை கொல்லும், தாய்பால் பெருக்கை அதிகரிக்கும், மாதவிலக்கைத் தூண்டும்., நாடி நடையை உயர்த்தி உடலுக்கு வெப்பம் தரும்,மலத்தை இளக்கி மலச்சிக்கலைப் போக்கும், சிறுநீர்ப பெருக்குவது கொழுப்பைக் கரைத்து உடலை இளைக்க வைக்கும்.

பப்பாளி பாலை விளக்கெண் ணையில் கலந்து கொடுக்க வயிற்றுப் பூச்சிகள் நீங்கும்.

வயிற்றை இழுத்துப் பிடித்து வலிப்பது குன்மம் எனப்படும். காயின் பாலை சேகரித்துக் காய்ச்சினால் பொடித்து உப்பாகி விடும். இந்த உப்பில் ஒரு கிராம் அளவு நெய் கலந்து சாப்பிட பித்த குன்மம், பிறவயிற்றுவலி, வாய்வு, வயிற்றுப் புண் குணமாகும்.

இதன் பாலை தேங்காய் நெய்யில் கலந்து தடவ வாய்புண், உதட்டுப்புண் குணமாகும். இப்பாலுடன் பொரித்த வெங்காரம் சேர்த்துத் தடவ வேர்க்குரு குணாகும். மண்டைக்கரப்பான்,சொறிக்கு படிகாரத்துடன் இப்பாலை மத்திதுப் போட குணமடையும்.

பப்பாளிக்காயைச் சமைத்து வாரம் மூன்று நாள் உண்டு வரத் தடித்த உடம்பு குறையும். பழம் நாளும் ஒரு துண்டு சாப்பிடலாம். தாய்ப் பால் பெருகும்.

மாத விலக்கில் தடை இருந்தால் பப்பாளிப் பழம் சாப்பிட்டால் நீங்கும். ஓரிரு மாதக்கருவும் கலையும். விதை-தயைத் தூள் செய்து 5 கிராம் வெல்லத்தில் சாப்பிட கரு கலையும். தடைபட்ட விலக்கு வெளியேறும்.

புலால் செய்வோர் 2-3 துண்டு பப்பாளிகாயைப் போட்டு வேக வைத்தால் எளிதில் வேகும். பதமாகவும் சுவையாகவும் இருக்கும்.

நாள்தோறும் ஒரு துண்டு பப்பாளிப் பழம் சாப்பிட்டு வர கல்லீரல், மண்ணீரல், வீக்கம் குறையும். செரிபாற்றல் பெருகும் குன்மம், ரணம், அழற்சி,வயிற்றுப் பூச்சி, மலச் சிக்கல், சிறுநீர்பாதை அழற்சி ஆகியவை தீரும்.

பல்லரணையால் வீக்கம் ஏற்பட்டு வலி இருந்தால் பாலைத் தடவ கரைந்து குணமடையும். பழம் அதிக அளவில் சாப்பிட்டால் வயிற்றுக்கடுப்பு வரும்.



**மிதுனம்** ஒக்.15– நவ.15

இம்மாதத்தில் தொழில், வியாபாரத்தில் புதிய நெருக்கடிகள் தோன்றும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு அலுவலகத்தில் அதிருப்தியான சூழ்நிலை நிலவும் குடும்பத்தில் கணவனும் மனைவியும் இணக்கமாக நடந்து கொள்வார்கள். பிள்ளைகளின் படிப்பு வகையில் சற்று அதிகமாகச் செலவாகும்

# மெய்ஞான மருத்துவம்

**கடந்த இதழின் தொடர்ச்சி...**

ஒவ்வொரு நோய்க்கும் மருத்துவம் கூறும் காரணங்கள் நீங்கள் அனைவரும் நன்கு அறிந்தவை எனினும் சாஸ்திரம் கூறும் காரணங்கள் நீங்கள் அறிந்தவை அல்ல. அவை குறித்து பார்ப்போம்.

### சுக்கிரன் கிரகத்தின் ஆகர்ஷணம்

பிறப்பு ஜாதகத்தில் சுக்கிரன் கிரகம் பலமில்லா விட்டாலும், பெற்ற தாய், தகப்பன் ஜாதகத்தில் புத்ர தோஷம் சுக்கிரன் கிரகத்தால் ஏற்ப்பட்டிருந்தாலும். கட்டிய கணவன் (அல்லது) மனைவி ஜாதகத்தில் மாங்கல்ய தோஷம்.

பிறந்த குழந்தைகள் ஜாதகத்தில் தாய், தகப்பனுக்கு தோஷம் கொடுத்த கிரகம் சுக்கிரன் இருந்தாலும்.

விந்து நாளம், சிறுநீரகம் தொண்டை இவைகள் சம்பந்தப்பட்ட அனைத்து நோயகள் ஏற்படும்.

ஆனால் சுக்கிரன் சக்தியை உடலில் சேமிப்பதன் மூலம்

பல தவறான பழக்கத்தினால் நோய் ஏற்பட்டிருந்தாலும் அப்பழக்கங்களை கைவிட்டு மேற்படி உறுப்பில் ஏற்படும் அனைத்து நோய்களையும் எளிதில் தீர்க்கலாம். மேற்படி கிரக சக்தியை உடலில் அதிகப்படுத்தினாலே

மேற்படி நோயின் தீவிரம் குறைந்து குணம் உண்டாகும்.



வாஸ்து ஜோதிட நிபுணர்
மருதை பத்மரர்ஜன்

### சுக்கிரனின் ஜீவகாந்த சக்தியினால் ஏற்படும் நன்மைகள்:

1. விந்து கெட்டிப்படும். நீர்த்துப் போகாது
2. பெண்ணிற்கு கர்ப்பப்பை கோளாறு நீங்கும்
3. சிறுநீரகம் நன்கு செயல்படும்.
4. தைராய்டு பாதிப்பு ஏற்படாது.
5. அழகுணர்ச்சி ஏற்படும்.
6. இல்லற இன்பத்திற்கு உடல் தகுதிபெறும்.
7. மலட்டு தன்மை நீங்கும். ஆண்மை அதிகரிக்கும்
8. இந்திரியம் சார்ந்த எந்த நோயும் அணுகாது

### செவ்வாய் கிரகத்தின் ஆகர்ஷணம்

பிறப்பு ஜாதகத்தில் செவ்வாய் கிரகம் பலமில்லா விட்டாலும், பெற்ற தாய், தகப்பன் ஜாதகத்தில் புத்ர தோஷம்

செவ்வாய் கிரகத்தால் ஏற்பட்டிருந்தாலும். கட்டிய கணவன் (அல்லது) மனைவி ஜாதகத்தில்

மாங்கல்ய தோஷம் செவ்வாய் கிரகத்தால் ஏற்பட்டிருந்தாலும்,பிறந்த குழந்தைகள் ஜாதகத்தில்

தாய், தகப்பனுக்கு தோஷம் கொடுத்த கிரகம் செவ்வாய் இருந்தாலும், உடலில் ரத்தமும், ரத்த நாளமும், உஷ்ணம், இவைகள் சார்ந்த அனைத்து நோய்கள் ஏற்படும். மேற்படி செவ்வாய் கிரக ஜீவகாந்த சக்தியை உடலுக்கு அதிகம் கிடைக்கும்படி செய்தாலே சம்பந்தப்பட்ட நோய்கள் தானே சரியாகும். பல தவறான பழக்கத்தினால் நோய் ஏற்பட்டிருந்தாலும் அப்பழக் கங்களை கைவிட்டு மேற்படி கிரக சக்தியை

உடலில் அதிகப்படுத்தினாலே மேற்படி நோயின் தீவிரம் குறைந்து குணம் உண்டாகும்.

### செவ்வாய் ஜீவகாந்த சக்தியை அதிகப்படுத்தினால் கிடைக்கும் நன்மைகள்

1. உடல் உஷ்ணம் தேவைக்கு மேல் ஏற்படாமல் காக்கும்
2. ரத்தம் சம்பந்தப்பட்ட அனைத்து பிணியும் நீங்கும்.
3. வீர உணர்ச்சி ஏற்படும்
4. ரத்த நாளம் அனைத்தும் செம்மையாக செயல்படும்.
5. உடல் செந்நிறமாக ஜொலிக்கும்.

### சனி கிரகத்தின் ஆகர்ஷணம்

பிறப்பு ஜாதகத்தில் சனி கிரகம் பலமில்லாவிட்டாலும், கட்டிய கணவன் (அல்லது) மனைவி ஜாதகத்தில் மாங்கல்ய தோஷம் சனி கிரகத்தால் ஏற்பட்டிருந்தாலும் உடலின் எலும்பு, பல், கல்லீரல், மண்ணீரல், உடலின் குளிர்ச்சி தன்மை இவைகள் சம்பந்தப்பட்ட நோய்கள ஏற்படும்.

மேற்படி சனி கிரக ஜீவகாந்த சக்தியை உடலுக்கு அதிகம் கிடைக்கும்படி செய்தாலே சம்பந்தப்பட்ட நோய்கள் தானே சரியாகும்.

### சனி கிரக சக்தியை உடலில் சேமிப்பதால் ஏற்படும் நன்மைகள்:

1. உடல் அதிக வெப்பமடையாமல் தடுக்கும்.
2. எலும்பு பலம் பெறும். மூட்டு சம்பந்தப்பட்ட அனைத்து நோயும் நீங்கும்.
3. எலும்பு எளிதில் தேயாது.
4. பற்கள் பலமடையும், பற்கள் சார்ந்த நோய் ஒருபோதும் ஏற்படாது.
5. கல்லீரல் சார்ந்த எந்த நோயும் நீங்கும்.
6. மண்ணீரல் செம்மையாக செயல்படும்
7. தர்மகுணம் ஏற்படும்.

தொடரும்...



# அங்கவீனம் பலவீனமா?

பலவீனம் இல்லாமல் வாழ்வில்லை
பலமாய் மாறிடில் தாழ்வில்லை.

ஜப்பானில் பத்து வயதுப் பையன் ஒருவன் இருந்தான். ஜூடோ சாம்பியனாக வேண்டும் என்பது அவனுடைய கனவு. ஆனால் அவனுக்கு இடது கை கிடையாது. கையும் காலும் வலுவாய் இருப்பவர்களுக்கே ஜூடோ சாம்பியன் ஆவது சிம்ம சொப்பனம். கையில்லாத பையன் என்ன செய்வான்? பல மாஸ்டர்களிடம் போனான். எல்லோரும் அவனை பரிதாபமாய்ப் பார்த்துவிட்டு திருப்பி அனுப்பிவிட்டார்கள். கடைசியில் ஒரு குரு அவனுக்கு ஜூடோ கற்றுத் தர ஒப்புக் கொண்டார்.

பயிற்சி ஆரம்பமானது. குரு ஒரே ஒரு தாக்குதலை மட்டும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஓடின. குரு வேறு எதையும் கற்றுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. பையன் சோர்ந்து போனான்

"குருவே.. ஜூடோ சம்பியன் ஆக இந்த ஒரு தாக்குதல் தெரிந்தால் மட்டும் போதாதே. வேறு எதுவும் சொல்லித் தருவீர்களா?" என்றான்.

"இந்த ஒரே ஒரு தாக்குதலில் நீ வல்லவன் ஆனால் போதும்" என்றார் குரு. குரு சொல்லிவிட்டால் மறு பேச்சு ஏது? பையனும் பயிற்சியைத் தொடர்ந்தான். சம்பியன்களுக்கான போட்டி ஆரம்பமானது!

முதல் போட்டி. சர்வமும் கற்றுத் தேர்ந்த எதிராளி. ஒரே ஒரு தாக்குதல் மட்டும் தெரிந்த இந்தப் பையன். போட்டி ஆரம்பமானது. எல்லோரும் ஆச்சரியப் படும் விதமாக பையன் வெற்றி பெற்றான். இரண்டாவது போட்டி. அதிலும் அவனுக்கே வெற்றி. அப்படியே முன்னேறி அரை இறுதிப் போட்டி வரை வந்தான். அதிலும் கொஞ்சம் போராடி ஜெயித்து விட்டான்.

கடைசிப் போட்டி. எதிரே இருப்பவன் பலமுறை சம்பியன் பட்டம் பெற்றவன். ஒரு கை இல்லாத எதிராளியைப் பார்த்து அவனுக்கு கொஞ்சம் பரிதாபமும், இளக்கா ரமும். பையன் சளைக்கவில்லை. போட்டி ஆரம்பமானது. முதல் சுற்றில் பையனை அடித்து வீழ்த்தினான்.

பையனின் நிலையைக் கண்டு பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி. போட்டியை நிறுத்திவிடலாமா என்கின்றனர் போட்டி நடத்துபவர்கள். "வேண்டாம்., பையன் சண்டையிடட்டும்" என்கிறார் குரு. இந்தப் பையனோடு போரிட இனிமேல் பாதுகாப்புக் கவசம் தேவையில்லை என எதிராளி அலட்சியமாய் வந்திறங்கினான்.

பையன் தனக்குத் தெரிந்த அந்த ஒரே தாக்குதலை பலமாய் நிகழ்த்தினான். எதிராளி வீழ்ந்தான். பையன் சம்பியனானான். பார்வையாளர்கள் நம்ப முடியாமல் பார்த்தார்கள், போட்டியாளர்களுக்கு ஆச்சரியம். அந்தப் பையனுக்கே தனது வெற்றியை நம்ப முடியவில்லை. அன்று மாலை குருவின் பாதங்களில் பணிந்த அவன் கேட்டான்

"குருவே. நான் எப்படி இந்த போட்டியில் வெற்றி பெற்றேன்? ஒரே ஒரு தாக்குதலை மட்டும் வைத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறேனே" என்றான்

புன்னகைத்தபடியே குரு சொன்னார் "உனது வெற்றிக்கு இரண்டு காரணங்கள். ஒன்று ஜூடோவிலுள்ள மிகக் கடுமையான ஒரு தாக்குதலை நீ கற்றுத் தேர்ந்திருக்கிறாய்.

இரண்டாவது இந்தத் தாக்குதலைத் தடுக்க வேண்டுமானால் எதிராளிக்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. உனது இடது கையைப் பிடிக்க வேண்டும். உனக்குத் தான் இடது கை கிடையாதே! உன்னுடைய அந்த பலவீனம் தான் பலமானதாய் மாறி உன்னை சம்பியன் ஆக்கியிருக்கிறது!"

குரு சொல்லச் சொல்ல பையன் வியந்தான். தனது பலவீனமே பலமாய் மாறிய அதிசயத்தை நினைத்து நினைத்து ஆனந்தித்தான்.

நமது மனம் திறமைகளின் கடல். அதில் முத்தெடுப்பதும் நத்தையெடுப்பதும் மூச்சடக்கி நாம் மூழ்குவதைப் பொறுத்தது. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கை, தனித் தனித் திறமைகளைக் கொடுத்திருக்கிறது.

பலவேளைகளில் பிறர் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ அந்த வடிவமாகவே நாம் மாறிவிடுகிறோம். பிறருடைய விருப்பங்களின் படி நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வது நமது இலட்சியங்களை நோக்கிய ஓட்டத்தில் வேகத் தடையாக அமைந்து விடுகிறது.

பல வேளைகளில் அந்த விமர்சனங்கள் பெரும் புதைகுழிகளாய் மாறி நம்மை விழுங்கி விடுவதும் உண்டு.

பல வேளைகளில் நம்மால் எதைச் செய்ய முடியாது என்பதைப் பற்றியே நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். பெரும்பாலும் அது சமூகத்தில் ஏற்கனவே நடந்து முடிந்த விஷயங்களுடனான ஒப்பீடாகவே இருக்கும்.

பிறர் பலவீனமாய் நினைக்கும் விஷயம் தான் நம்மை உலகுக்கே கொண்டு போய் சேர்க்கும் பலமான விஷயமாய் இருக்கும்.

இது என்னோட பலவீனம் என நாம் நம்பும் வரை அது நம்முடைய பலவீனமாய் தான் இருக்கும். இது பலவீனமல்ல பலம் என நாம் நம்பும் வினாடியில் நமது பலவீனமே நமது மிகப்பெரிய பலமாய் மாறிவிடும்.

**சாமினி**



**கடகம்** ஒக்.15– நவ.15

இம்மாதத்தில் சின்ன சின்ன அளெகரியங்களும் அடிக்கடி ஏற்படும். சின்னச் சின்ன வேலைகளைச் செய்து முடிக்க அதிக முயற்சி தேவைப்படும். இம்மாதத்தைப் பொறுத்த வரை எதிலும் சற்று கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம்

**கேள்வி : பாம்பாட்டியாரே பிரம்ம கமலம் என்றொரு பூ உண்டாமே இதுபற்றி உமக்குத் தெரியுமா?**

**சாவித்திரி - கொட்டாஞ்சேனை.**



**பதில்:** இந்தியாவின் ஹிமாலாயப் பிரதேசத்தில் அதிகம் காணப்படும் இந்த மலர் 14 ஆண்டுக்கு ஒரு முறையே மலருமாம். இந்த மலர் மலருகின்ற வேளை நாம் எதை நினைத்து வேண்டுதல் செய்தாலும் அது நிறைவேறும் என்பது ஐதிகம்.

**கேள்வி: பாம்பாட்டியாரே எதுக்கெடுத்தாலும் சகுனம் பார்ப்பது குறித்து உமது அபிப்பிராயம் என்ன?**

**மைதிலி வவுனியா.**

**பதில் :** அர்த்தமில்லாதவற்றை எல்லாம் நம்பி ஏமாந்தவன் தமிழன் என்பதுக்கு இதுவே சரி யான அடையாளம்.

**கேள்வி: அறிவாளிகள் என்று யாரைச் சொல் லலாம்?**

**குணசேகரன் சேதவத்தை.**

**பதில் :** யாரெல்லாம் பொண்டாட்டி திட்டும்போது சிரிச்சுகிட்டிருக்காங்களோ அவங்க எல்லோரையும் சொல்லலாமே.

**கேள்வி: ஹாய் எனக்கொரு டவுட். மனித வாழ்க்கை என்பது ஒரு போராட்டமா? பூந்தோட்டமா?**

**சாங்கர். வத்தளை.**

**பதில்:** போராட்டம் நிறைந்த பூந்தோட்டம் என்கிறார்கள் தன்னம்பிக்கையாளர்கள். அதாகப்பட்டது தன்னம்பிக்கையாளர்களுக்கு அடிக்கடி டவுட் வருவதில்லையாம்

**கேள்வி : கிழக்கு மாகாணசபை தொடர்பில் மு.கா. எடுத்த முடிவு சரியானதா? தவறானதா?**

**சமீர். கொழும்பு- 12.**

**பதில்:** மக்களின் அபிலாஷைகளை உதறி விட்டு தலைமைகள் எடுக்கும் எந்த முடிவும் எதிர்காலத்துக்கு ஏற்புடையதல்ல. சுயலாபங்களுக்காக அரசியலை விலை பேசுவதும் தாம் சார்ந்த சமூகத்துக்கு ஆரோக்கியமான தல்ல.

**கேள்வி : யோவ் உம்மை அடிச்சு கொல்ல வேண்டும் என்று தோன்றுது அப்படி நடந்த என்ன செய்வீர்?**

**கஜன் மன்னார்**

அடிச்சு கொல்ல நினைக்கும் ஜந்துவைக்கூட ஆடவைப்பவர்களை அடிக்கனும் என்னு நினைப்பது அவ்வளவு நல்ல இல்லை எதுக்கும் ஒருக்கா ரைய் பண்ணிப்பாரும்.


**கேள்வி: பாம்பாட்டியரே. பஞ்சவர்ணகிளிப் பூ என்ற ஒரு பூ இருக்கிறதா? இது பற்றி உமக்கேதும் தெரியுமா?**

**இந்துமதி தலாவாக்கலை.**

**பதில் :** ஆம் உள்ளது இந்தப் பூ தாய்லாந்தில் காணப்படுகின்றது இதனை பேரட் பிளவர் என்று அழைக்கிறார்கள் நீங்கள் பார்ப்ப தற் காக இதே அந்தப்பூ.



# நறுக்கு நான்கு



## நறுக்கு 1

அரசியலில் உபாயங்களும் தந்திரோபாயங்களும் முக்கியமானவை. இந்த தந்திரோபாயங்களை கொண்டு நமது அரசியல் தரப்புகள் மக்களை மடையர்களாக்கி விடுவதுண்டு இப்படியானதொரு சம்பவமே கிழக்கு மாகாணத் தேர்தலில் நிகழ்ந்தேறியுள்ளது. இதனை கச்சிதமாக நடத்திய பெருமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையே சாரும்.

## நறுக்கு 2

வேட்பாளர் தெரிவில் வில்லங்கம் ஏற்பட்டதால் அரச தரப்பு குடைக்குள் இருந்து விலகி கொண்ட மு.கா தனித்துவமாகப் போட்டியிட்டு தமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்போம் என வரிந்து கட்டிக் கொண்டது. இதுமட்டுமின்றி களத்தில் அரசை இயன்ற மட்டும் திட்டித் தீர்த்து முன்னர் நடந்தது பொம்மை ஆட்சி அவ்வாறானதொரு நிலை இனியும் ஏற்பட இடமளியோம் எனச் சூளுரைத்தது.

## நறுக்கு 3

பெரும் ஆரவாரங்களுக்கு மத்தியில் நிறைவடைந்த இத்திருவிழாவின் முடிவில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையை பெற முடியாத நிலை ஏற்பட்டது. மு.காவின் ஆதரவு யாருக்கு கிடைக்குமோ அவர்கள்தான் ஆட்சியமைக்க முடியும் என்ற நிலையும் ஏற்பட்டது. இதிலும் தந்திரோபாயத்துக்குள் நுழைந்த மு.கா. தமிழர்தரப்பு விடுத்த அழைப்பை நிராகரித்து - மீண்டும் பல்டி அடித்து - பழைய குருடி கதவை திறவடி என்ற மொழிக்கு ஏற்ப தனது கைங்கரியங்களை கச்சிதமாக அரங்கேற்றியுள்ளது.

## நறுக்கு 4

இப்படித்தான் நடக்கும் என்பதை நிச்சயமாக தெரிந்திருந்த போதும், சமகால நிகழ்வுகளின் பின்னராவது இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்கள் ஒருமித்த எண்ணப்பாட்டில் செயற்பட முனையலாம் என்ற எண்ணம் தமிழ்தரப்பினரிடம் இருந்தது.

இதற்காக பிரதானமாக கருதப்படும் முதலமைச்சர் பதவியைக்கூட விட்டுக் கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தனர்.

இந்த நல்லெண்ணத்தையும் அக்குவேறு ஆணிவேறாக செய்துள்ள மு.காவின் சுயலாப அரசியல்.

மக்களை மடையர்களாக்கி இவ்வாறு சுயலாப அரசியல் நடத்தும் அனைவருக்கும் எதிராக மக்கள் எதிர்காலத்தில் சரியான தீர்ப்பை வழங்க முன்வ ரவேண்டும்.



**சிம்மம்** ஒக்.15– நவ.15

இம்மாதத்தில் கருத்து வேறுபாடு காரணமாக விலகிச் சென்றவர்கள் இப்போது நெருங்கி வந்து நட்பு பாராட்டுவார்கள். ஆரோக்கியம் சீராக இருக்கும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும். அதனால் நோய்கள் வந்தால் உடனுக்குடன் குணமாகி விடும். அடுத்தவர்களை நம்புவதை விட தன்னைத் தானே நம்பி செயல்படுவது நல்லது.

# போடா போடி

சரத்குமார் மகள் வரலட்சுமிக்கு இதுதான் முதல்படம். மிக நீண்ட நாள் தயாரிப்பிலிருந்த பெருமை கொண்ட, இந்தப் படம் இப்போதுதான் முடிவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடந்து வருகின்றன. ஆனால் தீபாவளிக்கு விஜய் நடித்த துப்பாக்கி வெளியாகிறது. விஜய் படம் கிட்டத்தட்ட 1000-க்கும் மேற்பட்ட அரங்குகளில் வெளியாகும் சூழலில், சிம்பு தன் படத்தையும் வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படம் குறித்து சிம்பு கூறுகையில், "நீண்ட நாட்களுக்குப் பிறகு எனது படம் ஒன்று தீபாவளிக்கு வெளியாவது மகிழ்ச்சியாக உள்ளது" என்றார்.

படத்தின் இயக்குநர் விக்னேஷ் சிவா கூறுகையில், "துப்பாக்கி மற்றும் போடா போடி இரண்டு படங்களின் தயாரிப்பாளருமே ஒருவர்தான். எனவே எங்களுக்குள் போட்டியில்லை. மக்கள் இரண்டையுமே விரும்பி ரசிப்பார்கள்" என்றார்.



நேத்து உனக்கு எத்தன தடவ போன் பண்ணினேன். கெடைக்கவே இல்ல' கடைக்குள் நுழையும் பொழுதே சொல்லிக்கொண்டு வந்தவர், சாமியின் எதிரே உள்ள நாற்காலியில் அமர்ந்தார்.

என் போன் பழுதாகிடிச்சு. செய்யக் கடையில குடுத்துருக்கேன். ஏன்? என்ன விஷயம் ராஜா?

'நம்ம மூணுமுருகேசனுக்கு நேத்து ரொம்ப சீரியஸாகிடிச்சு ஹோஸ்பிட்டல்ல அட்மிட்டாகியிருக்காரு . அத சொல்றதுக்குதான்..' ராஜாவின் முகத்தில் கவலை இளையோடியது.

'ஆமாவா? முந்தா நாளுதான நம்மகூட ஒக்கார்ந்து சாப்பிட்டாரு. ஏன்? என்னாச்சி? ஆக்ஸிடெண்டா?

'இல்ல சாமி, நேத்து விடியகாலையில ரொம்ப முடியாம போச்சாம். நெஞ்சு வலிக்கறாப்பல இருக்குதுனு சொன்னவரு மயக்கம் போட்டு விழுந்துட்டாராம். அவரு சின்ன மகன்தான் ஹோஸ்பிட்டல்ல சேத்திருக்காரு. நான் போய் நேத்து பார்த்தேன். ஐ. சி. யூல வைச்சிருக்காங்க இன்னும் கண்ணு தொறக்கல. அவுஸ்திரேலியாவுல படிச்சிக்கிட்டு இருக்கிற அவரு பெரிய மகனுக்கு சொல்லிட்டாங்களாம். நேத்து ராத்திரி வந்துருப்பாருனு நெனக்கறேன்' சுருக்கமாக சொல்லி முடித்தார் ராஜா.

'ரொம்ப நல்ல மனுஷன். டாக்டருங்க என்ன சொன்னங்களாம்?' 'மூணு' முருகேசனின் நிலை கேட்டு தவித்தவராய் சாமி இருப்பதை அவரின் பதற்றத்தனமான வார்த்தைகள் காட்டின.

'மாரடைப்பு மாதிரிதான். ரத்தக் கொதிப்பு, சுகர், கொலஸ்ரால் எல்லாம் அளவுக்கு மீறி போச்சாம். அவரு மகன்தான் சொன்னாரு'


'மூணு முருகேசனின் இயற்பெயர் முருகேசன் மட்டுமே. எனும் அடைச்சொல் அவராகவே சேர்த்துக் கொண்டது. மற்றவர்களுக்கும் 'மூணு' எனும் அடைச்சொல்லுடன் கூப்பிட்டால்தான் அவரைத் தெரியும். இந்த 'மூணு' எனும் சொல் 'மூன்று' என்ற எண்ணிலிருந்து திரிந்து சுருங்கியது. இந்த சொல்லுக்குப் பின்னால் முருகேசனின் வாழ்க்கையில் பெரிய வரலாற்றைக் கொண்டிருந்தது. 20 வருடங்களுக்கு முன்பு அவர் திருமணம் செய்த புதிதில் ஒரு தாடிச் சாமியாரைத் தற்செயலாக வழியில் சந்தித்தாராம். மூன்றாம் எண் இவருக்கு அதிர்ஷ்டத்தைத் தரும் என சாமியார் காதில் ஓதியுள்ளார். முதலில் அரைகுறை மனதுடன் ஏற்றுக்கொண்டவர், விளையாட்டாக 3333 என தான் எழுதிய நான்கு நம்பர் மறுநாளே முதல் பரிசை வென்றபோது முழு தாய் தன் வாழ்க்கையை அதிர்ஷ்ட எண்ணான மூன்றிடம் சமர்ப்பித்தார். பரிசு பணத்தைக் கொண்டு கட்டி முடிக்கப் பட்ட புது கடை வரிசையில் மூன்றாம் எண் கொண்ட கடையை வாங்கி 'கெடாய் ருன்சிட் நொம்பொர் தீகா' (மூன்றாம் எண் மளிகை கடை) என்ற மளிகை கடையை ஆரம்பித்தபொழுது பெருத்த லாபம்.

அதிர்ஷ்ட எண்ணிடம் தன்னையும் தன் வாழ்க்கையையும் சமர்ப்பணம் செய்ததில் சிறிதளவும் தவறில்லை என தொடர்ந்து வந்து குவிந்த லாபங்கள் தெளிவாக்கிக் கொண்டிருந்தன. அடுத்ததாக வாங்கிய இரு கடைகளின் எண்கள் மூன்றாம் எண்ணாக இல்லாத பட்சத்திலும் அந்த கடைகளின் பெயர் மூன்றாம் எண்ணையே தங்களின் பெயராக கொண்டிருந்தன. 'கெடாய் ருன்சிட் நொம்பொர் தீகா' மளிகைகடைகளின் வழி மலாய், சீன இனத்தவரும் இவரைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தனர். காரின் எண், வீட்டின் எண் என எல்லாவற்றையும் மூன்றாம் எண் கைப் பற்றியிருந்தது. வழங்கும் நன்கொடைகளைக் கூட 3 ரிங்கிட், 33 ரிங்கிட், 333 ரிங்கிட், 3333 ரிங்கிட் என நிர்ணயம் செய்திருந்தார். இவ்வாறாக அவர் புகழ் மூன்றாம் எண்ணோடு சேர்ந்து பரவியிருந்தது.

எல்லாரும் 'மூணு முருகேசன்' என்றே அழைக்கத் தொடங்கியிருந்தனர். அந்தத் தாடிச் சாமியாரை அதன் பின்னர் சந்திக்கவே இல்லை என பல முறை வருத்தப்பட்டுக் கொள்வார். வழியில் எந்தச் சாமியாரைப் பார்த்தாலும் உற்றுப் பார்ப்பார். என்றாவதொருநாள் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும் என நம்பிக்கை அவரிடம் இருந்தது. அவரின் வரலாறு தெரிந்தவர்கள் அந்தச் சாமியாரைப் பற்றி வினவுவதுண்டு. மூன்றாம் எண் பணத்தைக் குவித்தாலும் பந்தா இல்லாமல் பழைய நண்பர்களுடன் கலந்துறவாடுபவராகவே இருந்தார். ராஜாவும் சாமியும் அவரின் உற்ற நண்பர்கள். ஊர் நடப்பு தொடங்கி உலக நடப்பு வரை விவாதிக்கவும் பேசவும் ஏற்ற திண்ணையாக அமைந்திருந்தது 'கோவிந்த் கறி ஹவுஸ்'.

'ஏன் முருகேசா.. நாங்களெல்லாம் இனிப்பு இல்லாம தண்ணி, எண்ணெய் சேக்காத சப்பாத்தி, இடியாப்பம்னு பாத்து பாத்து சாப்பிடறோம். நீ என்னான்னா கொஞ்சம் கூட கொன்ரொல் இல்லாம இனிப்பு, கோழி, இறச்சினு வெளுத்து கட்டுற. சுகர், ரத்த கொதிப்பு பத்தி எல்லாம் பயமில்லயா உனக்கு?

'எனக்கு அத பத்தில்லாம் கவலயே இல்ல சாமி. என்னை காப்பாத்த மூணாம் நம்பர் இருக்கு. என்னை சுத்தி இருக்கிற



**கன்னி** ஒக். 14 - நவ. 14

இம்மாதத்தில் உங்களுக்கு ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிகள் படிப்படியாக அகலும். உங்களுக்குத் தேவைப்படும் உதவிகள் சற்று தாமதமாகக் கிடைக்கும். கொடுக்கல், வாங்கல் சரளமாக நடைபெறும். அடுத்தவர்களை நம்புவதை விட தன்னைத்தானே நம்பி செயல்படுவது நல்லது.

# மூன்றுக்குள் அதிர்ஷ்டம்

– கூராஜிம்ரஞ்சனி (மலேஷியா)

மூணாம் நம்பரு எந்த சீக்கையும் எங்கிட்ட வர விடாது' பலமாக சிரித்துக் கொண்டார் மூணு முருகேசன்.

'அதிர்ஷ்டம் வேற, ஒடம்பு ஆரோக்கியம் வேற. 40 வயச தாண்டிட்டாலே சாப்பாட்டு விஷயத்துல கவனமா இருக்கணும். நமக்கெல்லாம் இப்ப 60 வயசுகிட்ட ஆவ போவுது. மறந்துறாத. இன்னும் 30 வயதுனு ஒன் மூனாம் நம்பர நெனச்சிக்காத' கேலியாக சாமி சொன்னதைக் கேட்டு மேசையில் இருந்த அனைவரும் சிரித்துக் கொண்டனர்.

'சாமி சொல்றது உண்மைதான் முருகேசன். அடிக்கடி டாக்டருகிட்ட போயி சுகர், பிரஸ்ஸர் செக் பண்ணிக்கிட்டா நல்லது' ராஜாவும் கூற முருகேசன் தலையாட்டிக் கொண்டாரே தவிர காதில் வாங்கி கொள்ளவேவில்லை. அவருக்கு மூன்றாம் எண்ணின் மீது வைத்திருந்த தீரா நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருந்தது.

ஒரு முறை மூணு முருகேசனின் சின்ன மகன் இதைத் தொட்டுப் பேச முயற்சி செய்த போது, 'என்னடா? ஆஸ்பத்திரி, மெடிக்கல் செக் அப்னு கூப்படற? எனக்கு மூனாம் நம்பர் இருக்கு. எந்த சீக்கும் வராது தெரிஞ்சிக்க..'

'அப்பா சும்மா சும்மா மூணாம் நம்பருனு சொல்லிகிட்டு இருக்காதீங்க. ஏதோ மொத தடவ நம்பர் ஃபர்ஸ்ட் ப்ரைஸ் விழுந்துடுச்சுனு இப்படி ஒரேடியா மூட நம்பிக்கையா இருக்காதீங்க. பணம் தேட உழைப்புதான் முக்கியம், நம்பர் இல்ல. நம்ம உடம்ப நம்பரு காப்பாத்தும்னு சொல்றதும் முட்டாள்தனம்ப்பா'

'ரொம்ப படிச்சிட்டல, அதான் மூட நம்பிக்கைனு பேசற. நம்மல தூக்கி உட்ட நம்பருடா அது. அத மறந்துட்டு தவறா பேசாத' கோபத்தில் உச்சத்தில் இருந்தார் மூனு முருகேசன்.

'ஓகேப்பா, விடுங்க. இனிமே நான் உங்கள மெடிக்கல் செக் அப் கூப்படல' அப்பாவின் கோபத்தைக் கண்டு பேச இயலாதவனாய் அதற்கு முற்றுப்புள்ளி வைத்தான். எளிதாக கோபம் வராதவர் மூன்றாம் எண்ணுக்காக கோபப்பட்டது அவரது மகனையும் வியப்பில் ஆழ்த்தவே செய்தது.

காலையில் குறுந்தகவல் ஒலி உறக்கதிலிருந்து சாமியையும் ராஜாவையும் தட்டி எழுப்பியது. அதிகாலை மூன்று மணிக்கு முருகேசன் காலமானதைத் தாங்கி வந்த செய்தி அது. அன்றைய தினம் மூன்றாம் தேதியென இருவருக்குமே ஞாபகம் இருந்தது.



# ஒரு சிற்பியின் ஏக்கம்

தினமகுடியின் இளம்சாதனையாளர்கள் தேடலில் இம்முறை இம்மாத இதழை அலங்கரிப்பவர் மன்னார், வங்காலையைச் சேர்ந்த ஓவியர், சிற்பக்கலைஞர், விரிவுரையாளரான ஜெரோமி மார்க் அவருடனான சந்திப்பிலிருந்து உங்களுக்காக.

**இத்துறைக்கு தங்களின் பிரவேசம்-** இதுவொரு பரம்பரைக்கலையென்றுதான் சொல்லனும் எனது அப்பாவினுடைய அப்பாவின் காலத்தில் இருந்தே தொடர்ச்சியாக செய்து வருகிறோம். இயல்பாகவே எனக்கும் இத்துறை மீது ஆர்வம் ஏற்பட்டது. தரம் 11ல் கல்வி கற்கும் போதே எனது பாடசாலை இலச்சினையிணை மாற்றியமைத்தேன். அத்தோடு மாணவர் ஒன்றிய இலட்சினை மற்றும் பல இலட்சினைகள் ஓவியங்களை வரைந்தும் உள்ளேன். பிறகு கலைப்பிரிவில் பல்கலைக் கழகம் இணைந்தேன்.









**பல்கலைக்கழகத்தில் கற்கும் போது-** நுண்கலை சித்திர வடிவ மைப்புசிறப்பு கற்கை நெறி பாடத்திட்டத்தின் ஊடாக உலகளவிய ரீதியில் ஓவியம்- சிற்பம்-சித்திரம்-நிலை எவ்வாறு உள்ளன என்பதை விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அங்கு எனது முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருந்தவர். ரமணன் ஆசிரியரை குறிப்பிடலாம். இக் கற்கை நெறியினை V.C.பாலசுந்தரம்பிள்ளை அறிமுகம் செய்தார். எனது முதல் சிற்பம் மனதுக் குள் சண்டை fighting in the hart என்பதாகும்

**உங்கள் முதல் சிற்ப உருவாக்கம் பற்றி-** எனது சொந்த ஊரில் பிரதானமான மறைந்த மேரிபஸ்ரியன் அடிகளாரின் உருவச்சிலையினை புதிதாக வடிவமைக்க முற்பட்ட போது. யாரும் என்னை மதிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் இல்லை காரணம் நான் தோற்றத்தில் சிறியவனாக இருந்தேன். பழைய சிலை அப்படியே இருக்கட்டும் சரியான முறையில் அமைந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றனர். சவாலோடு செய்தேன். சரி யான அளவுப்பரிமானத்தினையும் உருவ அமைப்பு முறையினையும் தெளிவான முறையில் செய்து முடித்தபோது. எல்லோ ருடைய வரவேற்பையும் மன்னார் ஆயரின் அங்கீகாரத்தையும் பெற்றது.

**உங்களுக்கு கிடைத்த கௌரவங்கள் குறித்து-**

எனக்கு எனது சொந்த மண்ணிலே முதல் பாராட்டும் விருதும் கிடைத்தது. மேரிபஸ்ரியன் அடிகளாரின் திருவுருவச்சிலையினை வடிவமைத்தமைக்காக மன்னார் ஆயர் அவர்களினாலும் சுவாமி விபுலானந்தர் அவர்களின் உருவச்சிலையினை மட்டக்களப்பில் வடிவமைத்தமைக்காக கிழக்கு பல்கலைக்கழக சிறப்பு விருது வழங்கப்பட்டது, பல்கலைக் கழகத்தில் வருகை தரும் விரிவுரையாளராக கடமையாற்றவும் வாய்ப்பு கிடைத்தது. 2010 செம்மொழி விழாவில் விருதும் பல முறை பொன்னாடை மற்றும் பொற்கிழிகள் தந்து பாராட்டியுள்ளார்கள்.

**உங்களுடைய இலக்கு பற்றி-** இத்துறையை அழிய விடாமல் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்கான முயற்சியாக அமைப்பொன்றை உருவாக்க வேண்டும். பல சிற்பக்கூடங்களை அமைத்து பல கலாநிதிகளை உருவாக்க வேண்டும். அதற்கு முதல் நான் தகுதியானவனாக இருக்க வேண்டும் அல்லவா இத்துறையில் கலாநிதிப் பட்டத்தை பெற வேண்டும். அதற்கான வழி இந்தியாவில் தான் உள்ளது.



**துலாம்**

உங்களுடைய பொருளாதார நிலை திருப்திகரமாக காணப்படும். கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் மரச்சாமான்கள் அலமாரி போன்றவற்றை வாங்குவீர்கள். காரியம் நடக்கிறதோ இல்லையோ மனதில் மட்டும் பெரியதாகத் திட்டம் போட்டுக்கொண்டே இருப்பீர்கள்

# சிற்பத்துறையில் M.A படிக்க வாய்ப்பில்லை

இலங்கையில் இரண்டு இடங்களில் மட்டுமே இத்துறையினை கற்கலாம். யாழ்ப்பாணம் இராமநாதன் பல்கலைக்கழகம் மற்றும் மட்டக்க ளப்பு பல்க லைக்கழகம் இவ்விரண்டிலும் B.A மட்டும் தான் உள்ளது. M.A. மற்றும் M.phil பட்டப்படிப்புகள் இல்லை இது எங்களைப் போன்றவர்களுக்கு பெரும் வேதனை தரும் விடையமாகும். இதற்கு சரியான தீர்வொன்றை பல்கலைக் கழகங்கள் பெற்றுத்தரவேண்டும்.

**சிற்பத்தில் உங்களின் கைவண்ணம் எவ்வாறு-**

இதுவரைக்கும் 18 மேற்பட்ட சிற்பங்கள் செய்துள்ளேன். ஆரம்பத்தில் கஷ்ரமாகத்தான் இருந்தது. பிறகு கற்றுக் கொண்டு அதில் உள்ள நுட்பங்களை இணங்கண்டதோடு எனக்கென தனியான நுட்பங்ளை கையாளப் பழகிக் கொண்டேன். கைவசம் ஓரேநாளில் ஒரு சிலையின் முழுக்கட்டமைப்பையும் கொண்டு வரக்கூடிய பல நுட்பங் களையும் அணுகுமுறைகளையும் தெரிந்து வைத்திருக் கிறேன். நிரந்தர விரிவுரையாளராக பல்கலைக்கழகத்திற்குள் உள்வாங்கப்படும் பட்சத்தில் மாணவர்களுக்கான சிறந்த சிற்ப விரிவுரையாளராக பணியாற்ற முடியும்.

**போரடிச் செய்த சிற்பம் என்று எதும் உண்டா-**

சுனாமிச் சிறுவன் சிற்பம் என்றுதான் சொல்ல வேண்டும் சுனாமியின் அகோரத்தை மக்கள் உணரும் வண்ணம் அச்சிற்பமுறையினை அமைக்க மிகவும் சிரத்தையோடு விரும்பிச் செய்தேன். இறுதி யில் காகம் ஒன்றை செய்ய மிகவும் சிரமப்பட்டேன்.இரண்டு முறை செய்தும் சரியான முறையில் அமையவில்லை என்னை நினைத்து நானே வெட்கப்பட்டேன் எத்தனை முறை பக்கத்தில் பார்த்த காகத்தை உடனே செய்ய இயலாதபோது. பின்பு காகம் ஒன்றைப்பிடித்து கட்டிவைத்து பார்த்துதான் செய்து முடித்தேன். கலைஞனுக்கு அதிகமான ரசிப்புத்தன்மையும் அவதானிப்பும் மிகவும் முக்கியமானது.

**இத்தொழிலில் வருமானம் போதுமானதாகவுள்ளதா-**

கலையை விற்கவும் முடியாது அதற்குரிய பெறுமதியை கணிக் கவும் முடியாது. ஆனால் வாழ்க்கை தேவையையும் அவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றால் போலவும் குறிப்பிட்ட விலையினை நிர்ணயிப்போம். சுனாமிச்சிறுவன் சிற்பத்தினை செய்து முடித்தபோது எனக்கு மிகவும் பணம் தேவைப்பட்டது அத்தரு ணத்தில் வெளிநாட்டவர் ஒருவர் ஒரு இலட்சம் ரூபாவுக்கு அதனைக் கேட்டார் நான் கொடுக்கவில்லை காரணம் கலைக்கான உணர்வுடன் மதித்து செய்ததினால் அதனை விற்கவில்லை தற்போது யாழ்ப்பாண பிரதாண நூலகத்திற்குள் வரலாற்றுப் பதிவாக வைத்துள்ளார்கள். இதில் கிடைக்கும் மதிப்பு கௌரவம் மனச்சந்தோஷம் பணத்தால் பெற்றுவிட முடியாதல்லவா.

**மறக்கமுடியாத சம்பவம் ஏதும்**

பலவுள்ளன ஒரு முறை தேசிய அளவில் நடைபெற்ற ஓவியப்போட்டிக்கு நடுவராக பங்கு பற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் படிக்கிற காலத்தில் யார் யார் ஓவியர் என்று படிச்சோமோ அவர்களோடு சேர்ந்து பணியாற்றகிடைத்தது. சமீபத்தில் ரோம் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மேதகு ஜோசப் ஸ்பிட்டரி ஆண்டகை அவர்களின் இல்லத்திற்கு இலச்சிணை ஒன்றை எனது கைவண்ணத்தில் செய்து கொடுத்தமையும் அதையேற்றுக்கொண்ட பேராயர் பாராட்டியதோடு விருந்தளித்தார் வாழ்த்து மடல்களையும் அனுப்பியுள்ளார் இவையாவும் என்றுமே மறக்கமுடியாத சம்பவங்களாகும். சங்குவடிவத்தில் அமைக்கப்பட்ட தேரில் புனித அன்னம்மாளின் திருச்சுருபம் (யூலை-26) திருவி ழாவின் பவனி சிறப்பம்சம் எனலாம்.

**இளைஞர்களுக்கான ஆலோசனை-** பட்டப்படிப்பிற்காக வேண்டி படிப்பதைவிட்டு அக்கலையை கலையாகவே விரும்பி தேடி கற்க வேண்டும். படித்துவிட்டு அதோடு சம்மந்தமில்லாது வேலைகள் செய்வதினாலும் கல்வியி னுடாக வெளிப்படுத்த வேண்டும் இப்போதுதான் கலை சீரான வளர்ச்சி பெறும் இக்கலையை கற்க விரும்புபவர்கள் முழுமூச்சாக தமது நேரத்தையும் திறமையையும் செலவு செய்கிறார்களோ அந்தளவுக்கு அக்கலையில் பிரகாசிக் கலாம் சாதிக்கலாம்.

***தினமகுடி* பற்றி–** இந்தியாவின் குங்குமம் போல உள்ளது. மாத இதழுக்கான அத்தனை அம்சங்களையும் உள்ளடக் கப்பட்டதுடன். சிறந்த முறையில் எல்லா இடமும் கிடைக் ககூடியவாறு எல்லோரும் விரும்பிப்படிக்கும் அளவிற்கு தரமான சஞ்சிகையாக தொடர்ந்து வெளிவரவேண்டும். குறிப்பாக இலங்கை கலைஞர்களை வெளிக்கொணர்வது சிறப்பான விடயம் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

**சந்திப்பு–வை. கஜேந்திரன்**





# நம்பினால் நம்புங்கள்!



ஒரு சிறு பொறி நம் மீது பட்டாலே உடல் வெந்து விடும். ஆனால் ஒருவர் நெருப்பின் மேல் அமர்கிறார், படுக்கிறார். பல்வேறு புதுமைகள் புரிகிறார் என்றால் நம்ப முடியுமா? யோக முறையினால் இது சாத்தியமே என்கிறார் தஞ்சாவூரில் இருக்கும் இந்த யோகி. இந்தக் கலையை இவர் தமது குருமூலம் கற்றுக் கொண்டதாக கூறுகிறார்.

அதிசயங்கள் எல்லாம் சாதாரண புலனறிவிற்கு அப்பாற்பட்டவை. அதனால்தான் அது பற்றிய ஆய்வுகள் உலகெங்கும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இந்த யோகியின் இப்பயிற்சியும் இப்படியே!

வெளிநாட்டினர் பலர் இவரை வந்து சந் தித்தும், பேட்டி எடுத்தும், புகைப் படங்கள், வீடியோவென எடுத்துச் செல்கின்றனர் அவற்றில் சில தினமகுடி வாசகர்களுக்காக...





**விருச்சிகம்** ஒக். 17 - நவ. 17

இம்மாதத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். நாலைந்து வழிகளிலிருந்தும் பணம் கைக்கு வந்து சேரும். உங்களுக்கு ஏற்படப் போகும் எல்லா செலவுகளைச் சமாளிப்பதற்காக அனைத்து வேலைகளிலும் நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். அப்போது தான் ஓரளவு பலனாவது கிட்டும். தொழில், வேலை வாய்ப்புகளில் கூடுதல் கவனம் தேவை.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

ஆயாதி கணித ஆகம சிற்ப சாஸ்த்திர
தியான விதிமுறைக்கமைய சிலாவிக்கிரகம்,
தாம்பரவிக்கிரகம்
கலங்கள்
கோடிஸ்தம்பம்
சோட உபசாரங்கள்
பட்டுக் குடைகள்
யாகசாலை, தேர் அலங்காரப் பொருட்கள்
சில்வர், பித்தலை, தகட்டுத்திருவாசிகள்
சில்வர் பித்தளை,
ஆசனங்கள்
காண்டாமணிகள்
தேர்மணிகள்
ஆசனக்கற்கள்
தளவரிசைக்கற்கள்
கோமுகைக்கற்கள்
ஸ்நபன கும்பச்செம்புகள்
கும்பகோண, கேரள நகாஸ் குத்துவிளக்குகள்
வெள்ளி, தங்க அங்கிகள், கிரீடங்கள்
திருக்கோயில் பிரதிஷ்டா யந்திரங்கள் மற்றும்
தங்கப் பிளேட்டிங்கும்
செய்துக் கொடுக்கப்படும்.



# காயத்திரி

## டிரேட் சென்டர்




142-P, ஆண்டிவால் வீதி, கொழும்பு - 11. 94-11-4979684,
40/7, கோயில் வீதி, முகத்துவாரம், கொழும்பு - 15. 94-11-4978185

**சென்ற மாத தொடர்ச்சி...**

# ரிமோன் கண்ட உண்மைகள்

இவனது திட்டுக்களை உல்லாசமாக இரசிப்பார்கள். இவன் பெயர் அப்பெமெண்ட்ஸ். இவனுக்கு ஒரு சீடன் உண்டு. அவன் பெயர் முட்டாள்.



செல்வம் என்பது என்ன வற்றாத ஊற்றா? ரிமோனுக்கும் பணமுடை என்ன என்பது தெரியும் சமயம் வந்தது. ஒரு நாள் வேட்டையாடிவிட்டு உற்சாகமாக விருந்துக்குத் திரும்புகிறான் ரிமோன் . கடன்காரர் களுடைய வேலைக் காரர்கள் பணத்துக்கு அவனிடம் நேரில் இடைமறித்துக் கேட்கிறார்கள். சிறிது மண் கரைந்தால் போதுமல் லவா? கரை உடைத்துக் கொண் டது போல் நாலா திசையிலும் கடன் காரர்கள் பிச்சுப் பிடுங்குகிறார்கள். கணக்குப்பிள்ளை பிளாவியஸ் எத்தனையோ நாள் அவர்களை சால்ஜாப்புச் சொல்லி அனுப்பிப் பார்த்தான். கடன்காரர்கள் எத்தனை நாட்கள் தான் பொறுத்திருப் பார்கள்? ரிமோன் "கொடு கொடு" என்பதைத் தவிர கணக்குப் பார்க்க உட்காரவில்லை.

ரிமோனுக்கு உட்கார்ந்து கணக்கைப் பார்த்ததும் அச்சமாகத் தானிருந்தது. இத்தனை நாள் ஏன் சொல்லவில்லை என்று கோபிக்கிறான். சொல்லுவதற்கு வாயெடுக்க விட்டால் தானே? பணத்தைத் திருப்பிக் கொடுப்பதில் என்ன பிரமாதம். உயிர்த் தோழர்களுக்கும், உதவி பெற்றவர் களுக்கும் ஆள் அனுப்புகிறான். அவர்களுக்கு என்ன பைத்தியமா! "இப்பொழுதில்லையே." "ஒரு மணி நேரத்துக்கு முன் வந்திருக்கக் கூடாதா?" "என் பணம் வேறு ஒரு இடத்தில் சிக்கிக் கிடக்கிறதே." "ஐயோ பாவம், ரிமோனுக்கா இப்படி வரவேணும்" என்று சொல்லி அனுப்பிவி டுகிறார்கள்.

"இத்தனை நாள் வெறும் அந்தரத்தில் அல்லவா நடமாடிக் கொண்டிருந்தோம். தடுமாறிய காலுக்குத் தாங்கல் இல்லை" என்ற உண்மை ரிமோனை நிலை குலையச் செய்கிறது. அவனுடைய சித்தம் கலங்கிவிடுகிறது. ஒரே நாளில் பிச்சைக்காரனாகி, இத்தனை நாள் கூடிக் குலாவியவர்கள் ஏறெடுத்தும் பார்க்காமல் போனால் யாருக்குத்தான் மூளை கலங்கிவிடாது. மனம் கைத்துப்போய் நண்பர்களை மறுபடியும் விருந்துக்கு அழைக்கும்படி பிளாவியஸ/க்கு உத்தரவு போடுகிறான்.

தலைவனுடைய கோபத்தைச் சமாளித்துக் கொண்டு வந்த கணக்குப் பிள்ளைக்கு, இன்னுமா வெறித்தனம் என்று படுகிறது.

"போ, போய் அழைத்துக் கொண்டு வா" என்று கர்ஜிக்கும்போது என்ன செய்ய முடியும்?

அழைப்பைக் கண்ட நண்பர்கள் ரிமோன்அடியோடு அழிந்துவிடவில்லை என்று நினைக்கிறார்கள். அவனுடைய மனம் கள்ளங் கபடு அற்றது, பிறரைச் சந்தேகிக்காதது என்பது அவர்களுக்குத் தெரியும். பஞ்சப்பாட்டுப் பாடி இன்னும் கிடைக்கிறதைத் தட்டிக்கொண்டு போகலாம் என்று நினைக்கிறார்கள். ருசி கண்ட பூனைகள் அல்லவா?

ரிமோன்மாளிகைக்கு ஒவ்வொருவராக வந்து பழைய கும்பல் கூடுகிறது. அதிதிகளுக்கு மூடியிட்ட பாத்திரங்களில் பரிமாறப்பட்டிருக்கிறது. நம்மை அயர வைத்து மகிழ வைக்கப் புதுமாதிரியான பரிசில் வந்திருக்கும் என்று மனப்பால் குடிக்கிறது இந்தச் சீலைப்பேன் கும்பல்.

"தகுதிக்குத் தக்கபடி விருந்து கொடுக்கிற விருந்தை ஏற்று இன்புறுங்கள் கொடுக்கிறவனை நினைக்க வேண்டாம்! இருபது பேர் கூடினால் இருபது பேரில் யோக்கியர்களே இருக்கக்கூடாது லோகம் அப்படி. அழைப்புப் பற்றி எனக்குக் கவலையில்லை பாத் திரத்தைத் திறந்து நக்குங்களடா நாய்களா" என்கிறான் ரிமோன். பாத்திரத்தில் மூடி வைத்திருந்தது வெறும் வெந்நீர்தான்.

வெந்நீரை இந்த அயோக்கியக் கும்பல்மேல் ஊற்றி அடித்துத் துரத்தி விடுகிறான் ரிமோன்.

**தொடரும்....**



**தனுசு:** ஓக். 15-நவ.15

இம்மாதம் தொழில், வியாபாரத்தில் திடீரென்று சிக்கல்களும் நெருக்கடிகளும் தோன்றி நீங்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மறைமுக எதிர்ப்பு ஏற்பட்டு அடங்கும். கலைஞர்கள் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்க நேர்ந்தாலும் அவற்றை சமாளித்து விடுவார்கள். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும்.



ஊனமுற்ற பெண் ஒருவருக்கு அவரது வீட்டுக்கு சென்று
உதவித் தொகை வழங்கும் எஸ்.கே.கிருஷ்ணா



பரமானந்தா விகாரைக்கு நிதி உதவி
வழங்கும் எஸ்.கே.கிருஷ்ணா

14.10.2012

# பொட்டு வைத்த முகமோ?

பெண்களின் முகத்திற்கு அழகும் வசீகரமும் சேர்ப்பது பொட்டு. முந்தைய காலத்தில் நெற்றி நிறைய அகலமான குங்குமப் பொட்டு வைப்பது வழக்கம். இரு புருவங்களுக்குமத்தியில் உள்ள இடத்தை நெற்றிப் பொட்டு என்பர்.

மருத்துவ ஆராய்ச்சிகளின்படி, நினைவாற்றலுக்கும் சிந்திக்கும் திறனுக்கும் உரிய இடம் இது. யோகக் கலை இதனை ஆக்ஞா சக்கரம் என்கிறது. எலக்ட்ரோ மேக்னடிக் என்ற மின்காந்த அலைகளாக மனித உடல் சக்தியை வெளிப்படுத்தும். அதிலும் முன்நெற்றி மற்றும் நெற்றிப் பொட்டு இரண்டும் மின்காந்த அலைகளை வெளியிடுவதில் முக்கியமானவை.

அதனால்தான், மனம் கவலையால் வாடும்போது, தலைவலி அதிகமாவதை உணரலாம்.

நெற்றியில் இடும் திலகம்:அந்தப் பகுதியைக் குளிர்விக்கிறது. நம் உடலின் சக்தி வெளியேறி விரயமாவதைத் தடுக்கிறது. எனவே வெறும் நெற்றியாக இருக்கக் கூடாது என்கின்றனர் முன்னோர்கள்.

இன்றைக்கு ஸ்டிக்கர் பொட்டுக்களின் வருகைக்குப் பின்னர் பலவித டிசைன்களில் பொட்டுக்கள் மங்கையரின் முகத்தை அலங்கரிக்கின்றன. நாம் வைக்கும் பொட்டு நம்முகத்திற்கு ஏற்றதாக இருந்தால் அது அழகினை அதிகரித்துக் காட்டும். எனவே முக அமைப்பிற்கு ஏற்ற பொட்டுகளை கூறியுள்ளனர் அழகியல் நிபுணர்கள்.



**நீளமான பொட்டு**

வட்ட வடிவ முகம் உடையவர்கள் நீளமான பொட்டுகளை உபயோகிக்கவேண்டும். நீளமான பொட்டு இவர்களது உருண்டை முகத்தை சற்று நீளவாக்காக மாற்றியதுபோல் அழகு தரும். இவர்கள் நெற்றி குறுகலாக இருந்தால், அவர்கள் புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைக்கவேண்டும்.

**இதய வடிவ முகம்**

இதய வடிவ முகம் கொண்டவர்கள் சற்றே வித்தியாசமானவர்கள். இவர்கள் குங்குமத்தினால் பொட்டு இட்டுக்கொள்வது முகத்தை அழகாக்கும். ஸ்டிக்கர் பொட்டுக்களில் சிறிய அளவில் நீளமான பொட்டுகள் முக வசீகரத்தை அதிகரித்துக் காட்டும்.

**ஓவல் வடிவ முகம்**

ஓவல் வடிவ முகம் கொண்டவர்கள் புருவத்திற்கு சற்று மேலே நெற்றியில் வட்டப் பொட்டு வைப்பது அழகை அதிகரிக்கும். நீளமான ஸ்டிக்கர் பொட்டு வைத்தாலும் வசீகரமாக இருக்கும்.

**சதுர வடிவ முகம**

சதுர முகம் உள்ளவர்கள் நீளமாக பொட்டுகளை வைக்கக்கூடாது. அகலம் அதிக முள்ள பொட்டுகளை வைத்துக் கொள்ளலாம். உருண்டை மற்றும் முட்டை வடிவி லான பொட்டுகள் இவர்களுக்கு பொருத்தமாக இருக்கும்.

**முக்கோணப் பொட்டுக்கள்**

முக்கோண வடிவ முகம் உள்ளவர்களுக்கு அனேகமாக எல்லாவகைப் பொட்டுகளும் பொருந்தும். நெற்றி அகலமாக இருந்தால்,நீளமான பொட்டுகளை பயன்படுத்த வேண்டும். முக்கோண வடிவிலான பொட்டுகளும் இவர்களுக்கு நன்றாக இருக்கும். அகலமான நெற்றியாக இருந்தால், புருவத்தில் இருந்து ஒரு சென்டிமீட்டருக்கு மேல் பொட்டுவைக்க வேண்டும்.

முகத்தின் வடிவம் மட்டுமின்றி உடை, சரும நிறம் போன்றவைகளும் பொட்டுடன் சம்பந்தப்பட்டதுதான். அதனால் அவைகளுக்கும் பொருத்தம் ஏற்படும் விதத்தில் பொட்டு வைக்க வேண்டும்.



**மகரம்**

*ஒக். 15-நவ. 15*

இம்மாதத்தைப் பொறுத்த வரை மாத முற்பகுதியில் புண்ணிய காரியங்களில் ஈடுபாடும் புனித பயணமும் மேற்கொள்ள வேண்டி வரும். மகான்கள், ஞானிகள் பெரியோர்கள் அருள் ஆசி கிடைக்கும். மாத பிற்பகுதியில் குறிப்பாக கடைசி வாரத்தில் தந்தை வழியில் சங்கடம் நேரிடும்



தென்னிந்திய கலைஞர்கள் கலந்து சிறப்பித்த இசை
நிகழ்ச்சியில் கலைஞர்களை கௌரவிக்கும் எஸ்.கே.கிருஷ்ணா




இலங்கையின் முதல் தமிழ் திரைப்பட நடிகை கௌரிக்கு
மருத்துவ செலவுக்கு உதவித் தொகையாக
50,000 ரூபா வழங்கிய போது




**கும்பம்**

இம்மாதத்தில் உங்களுடைய பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்காது. ஆயினும் செலவுகள் ஏற்படும் போது அவற்றைச் சமாளிக்கும் அளவுக்கு பணம் கைக்கு வந்து சேர்ந்துவிடும். கொடுக்கல், வாங்கலில் குளறுபடி காணப்படும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே நெருக்கமான உறவு காணப்படும். பிள்ளைகளின் படிப்பு வகையில் சற்று அதிகமாகச் செலவு ஆகும்.

அப்பா மாதிரி என சுதி சொன்னதால் ஆத்திரமாகி, அந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்ட அவர், "அப்பாவும், அம்மாவும் தப்பு பண்ணலாமே' என்றபடி "சுதி'யின் அம்மா வுடைய கையைப் பிடித்து இழுத்தார் .

அம்மாவும், மகளும் அதிர்ச்சியில் நிலைகுலைந்து பின் சுதாகரித்தனர். அவரின் கையை உதறிவிட்டு எழுந்தார் அம்மா. "என்ன சார் இது?

"என்ன: என்ன சார்? எதுக்குமே சரிப்பட்டு வரலன்னா பின்ன எதுக்காக ஒம் பொண்ணை சினிமாவுல அறிமுகப் படுத்தணும்?'

"ஹீரோ கூட இருக்கத்தான் என் பொண்ணு சம்மதிக்கி-றாளே'

"அப்ப, ஹீரோவே போய் பார்த்துக்கங்க. கிளம்புங்க' எனச் சொன்னார் அவர்.

கண் கலங்கி கனத்த இதயத்தோடு வெளியே வந்தார் கள். சினிமாவில் "அப்படி.. இப்படி' இருக்கும் என தெரிந் திருந்தாலும் கூட இப்படி ஒரு சம்பவம் அதாவது பெத்த மகள் கண்முன் தன்னை ஒருவர் கையைப் பிடித்து இழுத் ததை சுதியின் அம்மாவால் ஜீரணித்துக் கொள்ள முடிய வில்லை.

எண்ணெய்ச் சட்டிக்குப் பயந்து எரியிற அடுப்பில் விழு வது போல இருந்தது சுதி சந்தித்த இன்னொரு அனுபவம்.

தன் சினிமா கம்பெனி அலுவலகத்தில் தனது டேபிள் மீது தன் மனைவியின் போட்டோவை வைத்திருக்கும் "மான்' டைரக்டர் "துணைவியே துணை!', "மனைவியே தெய்வம்' என மனைவி புராணம் பாடுவார். இதெல்லாம் மனைவியை ஏய்ப்பதற்காக இப்படி 'மனைவி தாசர்' இமேஜை ஏற் படுத்திக்கொண்டு உள்ளுக்குள் தன் படத் தின் நடிகைக ளோடு ஷிப்ட் போட்டு லூட்டி அடிப்பார்.

இது தெரியாமல் மான் டைரக்டரின் புதிய படத்தில் நடிக்க வாய்ப்புக் கேட்டு சுதி தன் அம்மாவுடன் போனார். அறிமுக பேச்சுவார்த்தை முடிந்தது.

"மனைவிக்கு இவ்வளவு மதிப்பு குடுக்கிற மனுஷர் நீங்களாத்தான் இருக்கும்' என மம்மி வியந்துபோய் பேசி னார்.

அந்த ராசாவின் மனசில் என்ன இருக்கிறது என்று தெரி யாமல் வாய்ப்புத் தேடி கசந்த அனுபவங்களை விவரித்தார்.

மெல்ல ஆரம்பித்தார் டைரக்டர். உன் கண்ணு பேசுது, மூக்கு எடுப்பா இருக்கு, வாய்தான் கொஞ்சம் நீளம். ஆனா, எங்க சிரிம்மா சிரிக்கும்போது அழகா இருக்கு. ஓ.கே. நீ என் படத்துக்கு ரொம்ப பொருத்தமா இருக்க. என் படத்துல அறி முகமாகி கொஞ்ச நாள்லயே நீ பெரிய ஹீரோயின் ஆயி டுவே. நானே உன்னைப் பார்க்கணும்னாலும் அப்பாயின்ட் மெண்ட் வாங்கிட்டுத்தான் வரவேண்டியிருக்கும்'

டைரக்டர் சொல்லச் சொல்ல சுதி, சுதியின் அம்மாவின் கண்களில் கலர் கலராய் காட்சிகள் விரிந்தன.

"சரிம்மா நீங்க அந்த ரூம்ல வெயிட் பண்ணுங்க. பொண் ணுகிட்ட சில விஷயங்கள் கிளாமரா நடிக்கிறது பத்தி கேட் கணும். ஒங்கள வச்சுக்கிட்டு கேட்க சங்கடமா இருக்கில்ல' என்றார் டைரக்டர்.

டைரக்டர் மீது "மனைவி தாசர்' என்கிற மதிப்பு ஏற்பட் டதால் "பேசுங்க சார்' என சொல்லிவிட்டு நகர்ந்துபோனார் மம்மி.

தன் எதிரே இருந்த சுதியை எழுந்து நிற்கச் சொல்லி ஏற இறங்கப் பார்த்தார். தன் இரண்டு கைகளையும் அப்படி இப்படி காற்றில் அலைய விட்டு கேமரா ஆங்கிள் பார்த்தார்.

"லேசா குனி, இடுப்ப ஆட்டு ' எனச் சொல்லச் சொல்ல கூச்சப்பட்டபடியே செய்து காண்பித்தார் சுதி.

"என்ன இப்படிக் கூச்சப்படுற? நாளைக்கே பலபேர் முன்னால கட்டிப்பிடிச்சு நடிக்கணும், முத்தம் கொடுக் கணும் இப்படி கூச்சப்பட்டா எப்படிம்மா?'

"நடிக்கும்போது நல்லா பண்ணுவேன் சார்.'

"ம்:ஹும் நீ ரொம்ப கூச்சசுபாவியா இருக்க. முதல்ல கூச்சத்தப் போக்கணும்' என்றபடியே இருக்கையிலிருந்து எழுந்து வந்த டைரக்டர், "எங்க ஒரு லவ் ஃபீலோட என்னைக் கட்டிப் பிடி' என்றார்.

"சார்..'

"என்ன: சார்.' என்றபடி இடுப்பைப் பிடித்து தன்னோடு இறுக்கி அணைத்த டைரக்டர் "இப்படித்தான் நடிக் கணும்' என்றார் அவரிடமிருந்து விடுபட முயற்சித்தார் சுதி.

ஆனால், சுதியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உள்ரூமை நோக்கி பலவந்தமாக இழுக்க

பயந்துபோன சுதி 'அம்மே' என அலற அம்மா ஓடி வந்தார். டைரக்டர் தன் பிடியை விட்டார்.

"இது சரிப்படாது கிளம்புங்க'

"சார்'

"ஹீரோவா அறிமுகமாகணும்னா துட்டுக் கொடுக் கணும். ஹீரோயினா ஆகணும்னா இப்படித்தான். இது தான் சினிமா. நான் உங்களை கட்டாயப்படுத்தல. எங்க போனா லும் இதுதான் நிலைமை. யோசிச்சு ரெண்டு நாள்ல பதில் சொல்லுங்க.'டைரக்டர் சொல்ல தலையாட்டிவிட்டு கிளம் பினார்கள்.

நாட்கள் கடந்ததுதான் மிச்சம்.

தன் அட்ஜஸ்ட்மெண்ட் பொலிஸியின் சில கடுமையான விதிகளை கைவிட்டார் சுதி. அப்போது வளரும் நடிகராக இருந்த பிரசன்னத்திற்கு ஜோடியாக, இரண்டு கதாநாயகி களுள் ஒருவராக ஒரு வாய்ப்பு வந்தது.

'லவ்-இணையதள முகவரி' பெயரில் எடுக்கப்பட்டது அந்தப் படம்.இதன் தயாரிப்பாளர் ஒரு பிசினஸ்மேன் அவருக்கு சினிமா தயாரிப்பு பிரதானமில்லை. நடிகை களுடனான நட்பும், தனிச்சந்திப்பும் தயாரிப்பாளர்களுக்குக் கிடைக்கும் சம்திங் ஸ்பெஷல் என்பதால் படத்தைத் தயாரித்தார்.

"நடிக்கிறதுக்கு சம்பளம்தான் கொடுத்தாச்சே' என்கிற கெடுபிடியெல்லாம் காட்டாமல் தனிச் சந்திப்புகளுக்கு தாராளமாக தனித் தொகையை அள்ளிவிட்டார் தயாரிப்பா ளர். இதனால் அடிக்கடி அது நடந்தது. இந்தப் படம் சுமா ரான வெற்றியையே பெற்றது. அடுத்தடுத்து கசமுசாக்க ளுக்கு உடன்பட்டு கிடைத்த வாய்ப்புகளும் சொல்லிக் கொள்கிறபடி இல்லை.

"அதுக்கு இடம் கொடுத்தும் சினிமாவில் ஒரு நல்ல இடம் கிடைக்காத வருத்தத்தில் "சீச்சீ" சினிமாப் பழம் புளிக்குது' என விலகிப் போனார். இப்போது சின்னத்திரை அள்ளிக் கொண்டது.

# உலக ஓவியர்கள்



படம் 1

லுவனிஸ் அல்டமெளரஸ் Lean-nis Altamouras [1852-1878]

19 ஆம் நூற்றாண்டின் சிறந்த ஓவியர்களுள் ஒருவர்.

இத்தாலியில் ஓவிய குடும்பத்தில் பிறந்தவர் லுவனிஸ் அல்டமெளரஸ். இவரின் தந்தையும் தாயும் பிரபல ஓவியர்கள். தந்தை ஒரு இத்தாலிய ஓவியர் ப்ரான்ஸிஸ்கோ சாவீரோ அல்டமுரா -[ Francesco saverio Altamura ] தாயார் எலினி பெளகுரா [Eleni Boukoura] கிரீஸின் ஸ்பெட்சய் தீவின் முதல் பெண் ஓவியர் இவர்.



படம் 2

இவரின் ஏழு வயதில் தந்தை, தாய் பிரிந்து வாழ்ந்தனர்.. இவரை சிறந்த ஓவியராக்கிய பெருமை தாயாருக்கே சேரும்.

அரசர் இரண்டாம் ஜார்ஜின் ஸ்காலர்ஸியில் படித்தவர். ஓவியம் இவரின் உயிர் மூச்சாக இருந்தது. கடல் மற்றும் கடல் சார்ந்த ஓவியங்களே இவரின் சிறப்பு.

ஏதென்ஸ் ஒலிம்பியனில் இரண்டாம் பரிசுக்காக தேரந்தெடுக்கப்பட்ட ஓவியம் த போர்ட் ஒப் கோபென்ஹாகன் - the port of copenhagon (படம் 1)



படம் 3

இதன் பிறகே இவரது ஓவியங்கள் பிரபலம் ஆயின.

விதி வலியது என்று சொல்வார்கள் இவரையும் விட்டு வைக்கவில்லை அவரது 26 வயதில் டியூபர் குலோசிஸ் நோய் தாக்கி இறந்துவிட்டார்.இவரின் இறப்பு தாயாரை பைத்தியமாக்க செய்தது.



படம் 4

இவர் இறப்பிற்கு முன் 1878 ல் மூன்று ஓவியங்கள் பாரிசில் நடை பெற்ற உலக ஓவிய கண்காட்சியில் சிறப்பாக பேசப்பட்டது. [Papanikolis, Eressos, Naval Battle]

**படம் 2 படம் 3 படம் 4**

ஏனோ தெரியவில்லை புகழ் வாய்ந்த ஓவியர்கள் வாழ்க்கை சோகம் தழுவியதாக உள்ளது.

நஷசனல் கலரி ஒப் ஏதென்ஸ் மற்றும் மியூசயத்தில் ஜகிரீஸ்ஸ இவரின் அநேக ஓவியங்கள் அலங்கரிக் கின்றன.



**மீனம்** ஒக்.15– நவ. 15

இம்மாதத்தில் உங்களுக்கும் உங்கள் மனைவிக்குமிடையே கருத்து வேறுபாடு, வாக்குவாதம் போன்றவை ஏற்படலாம். உங்கள் மனைவிக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு குணமாகும். குடும்பத்தில் எல்லோரும் முறுக்கிக் கொண்டு திரிவார்கள். நீங்கள்தான் பொறுமையாக நடந்து கொண்டு, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். தேவையற்ற மன உளைச்சலால் உடல் நலனில் குறைபாடு உண்டாகவும் வாய்ப்பு உள்ளது


கிருஷ்ணா தயாரிப்புகள்
சுத்தமான
நெய்
நல்லெண்ணெய்
பன்னீர்
44/50, சென்.அன்ரனிஸ் மாவத்தை
கொழும்பு-13
SRI KIRANE
FANCY
Dealers in all
Kinds of Cosmetics
Items & fancy goods
297 Sea Street, Colombo-11.
Tel: 0112336971

